RE/MAX REALTRON BLUE FORCE
TEAM BLUE FORCE
BUYING - SELLING - LEASE - PRE CONSTRUCTION
வீடு வாங்க விற்க இன்றே அழையுங்கள்
DIRECT 416 2888882
கவாஸ் - சோம சச்சிதானந்தன்

வீடு வாங்க விற்க நட்பான சேவைக்கு
PRASATH SATHIYANATHAN
Sales Representative
647.296.7932
HomeLife Future Reality Inc. Brokerage
*Independently owned and operated
Prasath Estate
HOMEWORTH
See what your home worth!
www.freehomevalueplus.com

Samraj Insurance Group Inc
வாகனக் காப்புறுதி, ஆயுட்காப்புறுதி
வீட்டுக்காப்புறுதி, பயணக் காப்புறுதி
உட்பட அனைத்துக் காப்புறுதித்
தேவைகளுக்கும் அழையுங்கள்
Dr. Ananthamoorthy
(ABAssistant)
416 823 3686
647 857 0086

வீடு வாங்க விற்க...
என் நட்பான சேவை
உங்கள் திருப்தியின் மகிழ்ச்சியே...
திரு நாகராஜா
வீடு விற்பனை முகவர்
Dir: 416-590-0090
Bus: 416-289-3333
thirunagarajah@sympatico.ca
RE/MAX Realtron Realty Inc. Brokerage

GET THE RIGHT INSURANE COVERAGE
AUTO, HOME, BUSINESS
20+ ஆண்டுகள் அனுபவம் பெற்ற நம்பகமான காப்புறுதி முகவர்! சரியான காப்புறுதி!
குறைந்த காப்புறுதி கட்டணம்!
JEYA SHANTHY
SIVASOTHY
647.268.2710
jeya.sivasothy@aaxelinsurance.com www.aaxelinsurance.com
AAXEL

மலர்:- 29, 12 ஆகஸ்ட் 2022 இதழ்:- 16


# ஈழநாடு

பிரதம ஆசிரியர்: T.K.பரமேஸ்வரன் 416 841 9600

NISHANTHAN LAW OFFICE
Umananthini Nishanthan (LL.B)
Barrister & Solicitor and Notary Public
39 Devonshire Avenue
Markham Ontario L3S3P2
Cell: 647-535-6365
Tel: 416-289-9229
Fax 1-800-878-1348
office@nishanthanlaw.onmicrosoft.com
www.nishanthanlaw.com

## நிரந்தர நாடு இல்லாமல் தவிக்கும் கோத்தபாய

### மாலைதீவு - சிங்கப்பூர் - தாய்லாந்து என அலையும் பரிதாபம்!



இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி கோட்டா பய ராஜபக்ஷ தாய்லாந்திற்கு சென்றுள்ளதாக ராய்ட்டர்ஸ் செய்தி வெளியிட்டுள்ளது.

அரச எதிர்ப்பு போராட்டம் வலுப் பெற்று ஜனாதிபதி மாளிகை, ஜனாதிபதி செயலகம் ஆகியவற்றை போராட்டக்காரர்கள் தமது பொறுப்பிற்கு கடந்த ஜூலை மாதம் 9ம் தேதி எடுத் திருந்தனர் இதையடுத்து, தலைமறை வான அப்போதைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, இலங்கை விமானப் படைக்கு சொந்தமான விமானத்தின் மூலம் ஜூலை மாதம் 13ம் தேதி மாலத்தீவு நோக்கி பயணி த்திருந்தார். (7ம் பக்கம் பார்க்க)

Cash Point
PAWN BROKERS
3852 Finch Ave. E. Unit G03, Scarborough, ON. M1T 3T9
$1000 $20/month
Tel : 416-284-7000

BASKARAN SINNADURAI
Broker
Cell: (416) 880-8585
RE/MAX ACE REALTY INC. BROKERAGE
3-1286 Kennedy Rd.
Toronto, ON M1P 2L5
Tel: (416) 270-1111
Fax: (416) 270-7000
Commercial
Industrial
Investment
baskaran.toronto@hotmail.com

## யுவான் வாங் 5 கப்பல் விவகாரம் இரு தலைக் கொள்ளியாக இலங்கை



யுவான் வாங் - 5 கப்பல் இலங்கை வரும் விடயத்தில் இருதலை கொள்ளி யாக இலங்கை தவிக்கிறது. பொரு ளாதார நெருக்கடியிலிருந்து மீள்வத ற்கு சர்வதேச நாணய நிதியத்தை நம்பியுள்ள இலங்கை அந்த நிதியத் தின் முக்கிய அங்கத்துவ நாடான சீனாவையோ அல்லது இலங்கைக்கு பெரும் ஆதரவளித்து வரும் இந்தியா வையோ பகைக்க முடியாத நிலையில் உள்ளது. (5ம் பக்கம் பார்க்க)

GT Brokers
Protect You & Your Family
Critical Illness | No medical Life
Disability Income | Mortgage Life
Travel & Visitor | Life Insurances.
RRSP | RESP
Best Insurance for the Lowest Rate !!!
Guna Thuraisingham
Independent Insurance Advisor
Dir: 416 528 1407
www.gtbrokers.ca
Super Visa Insurance 100% Refund
Manulife

## 3 மாதங்களின் பின் நிலையான பாதுகாப்பு தரக்கூடிய நாட்டிற்கு கோத்தபாய செல்வாரென தாய்லாந்து பிரதமர் தெரிவிப்பு!



BUYING OR SELLING
Indra Michael Xavier
Broker
Direct : 647-995-6829
indra.m.xavier@gmail.com
HomeLife/Future
Realty Inc. Brokerage*
Tel : 905-201-9977 Fax : 905-201-9229
Suite 205, 7 Eastvlae Dr. Markham, ON. L3S 4N8
*INDEPENDENTLY OWNED AND OPERATED

உங்கள் உறவுகள் எங்களால் இணைகிறது
15 வருடங்களுக்கு மேலாக உங்களோடு நாங்கள்
24/7 365
AERO COURIER
Fast & Secure World Wide Service
416.292.0444
151 Nashdene Rd, Unit 01, Scarborough ON, M1V 4C4

போரினால் பெற்றோரை இழந்த குழந்தைகளை வாழ வையுங்கள்!
உறவுகளே! ஆகஸ்ட் மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

BUY/SELL HOUSES
ARUL THANINAYAGAM
Sales Representative
Direct : 416-624-7971 Office : 416-298-3200
Flexible Commission
HOMELIFE
TODAY REALTY LTD. BROKERAGE

KANDIAH LAW
PROFESSIONAL CORPORATION
T 416-333-1001 www.KandiahLaw.com F 416-335-1002
சிவில் வழக்குகள் / Civil Litigation
அழையுங்கள் தயா PK கந்தையா BAS, LLB (Hons)(வழக்கறிஞர்)

"ஒரு முகவர் இரு சேவைகள்"
"One Broker Two Services"
Roshan Wignarajah
Real Estate Sales Rep./ Mortgage Broker
416-716-5946
rwignara@gmail.com
RE/MAX ROYAL PROPERTIES
Phone: (416) 321-0110
MORTGAGE ALLIANCE
1-877-366-3487

# BUYING OR SELLING OR LEASE ! Residential or Commercial



## Team SIVA WILL BRING THE BEST RESULTS!


**Siva Kandiah**
Sales Representative
**Dir: 416-301-9540**
sivakandiahhome@gmail.com

**Piravien Siva**
B.Comm. Sales Representative
**Dir: 647-221-5220**
piravien@gmail.com





18 Years Real Estate Experience


HOMELIFE HIGHER STANDARDS

*Listing Agent's Commission plus 2.5% Buyer's Agent commission- Conditions apply
NOT INTENDED TO SOLICIT PROPERTIES ALREADY UNDER CONTRACT

**HomeLife Today Realty Ltd.,**
Brokerage. INDEPENDENTLY OWNED AND OPERATED
Bus: 416.298.3200
31 Progress Avenue, Suite 210, Toronto, ON M1P 4S6


• 1% LISTING COMMISSION* • VIRTUAL TOUR • FREE HOME STAGING • PROFESSIONAL PHOTOGRAPHY


### Central Park / Bramalea

Brampton 674,900
Bedrooms: 3 Washrooms: 2
Lots Of Upgrades, Neutrally Painted


### Park Rd / Wentworth

Oshawa $499,000
Bedrooms: 3+1 Washrooms: 2
Well Maintained Complex


### Kennedy & Progress


Scarborough $548,000
Bedrooms: 2 Washrooms: 1
Ground Floor Unit, Great Location

### Eglinton/Markham

Scarborough $624,900
Bedrooms: 2 Washrooms: 2
Open Concept, Very Large Rooms

### Lawrence/ Galloway

Toronto $499,900
Bedrooms: 4 Washrooms: 2
New Hardwood Floors Throughout

### Mccowan/401

Scarborough $589,900
Bedrooms: 1+1 Washrooms: 1
Newly Renovated ,Open Concept

### Kennedy/401

Scarborough $599,900
Bedrooms: 1 Washrooms: 1
Close To High Way, Shopping Plaza


### Dixie/Clark

Brampton $629,900
Bedrooms: 3 Washrooms: 2
Upgraded & Spacious Corner Unit

### Eglinton/Markham

Scarborough $699,999
Bedrooms: 3 Washrooms: 2
Renovated & Low Maintenance Free

### Yonge/Davis

Newmarket $1,699,000
Bedrooms:4+1 Washrooms: 5
Over 4000 Sq Ft

### Hwy 7/ Leslie

Markham $649,900
Bedrooms: 3+1 Washrooms: 3
Open Concept, Newer Paint

### Don Mills/Eglinton


Scarborough $549,900
Bedrooms: 3 Washrooms: 2
Location! Location! Location!

### Donald Cousens Pkwy / 16th Ave

Markham $1,499,999
Bedrooms: 4+2 Washrooms: 4
Approx. 2520 Sq Ft

### Meadowvale & Ellesmere

Scarborough $1,699,000
Bedrooms: 4 Washrooms: 4
$$$$ On Upgrades

### Brimorton/ Scar. Golf


Scarborough $1,100
Bedrooms: 1 Washrooms: 1
Basement Apartment for Rent

### Major Mack/Mccowan


Markham $2,900
Bedrooms: 4 Washrooms: 3
Throughout Hardwood Floor

## PROFESSIONAL AGENTS! PREMIER RESULTS !!

EELANADU
105 DINSDALE DR
WOODBRIDGE - ON
L4H 2M4 - CANADA

416 841 9600 / 905 653 3000
eelanadu1993@ gmail.com

# 3 மாதங்களின் பின் நிலையான பாதுகாப்பு தரக்கூடிய நாட்டிற்கு கோத்தா செல்வாரென தாய்லாந்து பிரதமர் தெரிவிப்பு!

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜ பக்ஷ எதிர்வரும் 3 மாதங்களின் பின்னர் நிலையான பாதுகாப்பு தரக்கூடிய நாடொன்றுக்குச் செல்வார் என்று தான் நம்புவதாக தாய்லாந்து பிரதமர் சேன் ஓ ஷா தெரிவித்துள்ளார்.

தாய்லாந்தில் தங்கியிருப்பதற்கு முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு 90 நாட்கள் அனுமதி வழங்கப் பட்டுள்ளது. எனினும் குறித்த காலப் பகுதிக்குள் அவருக்கு நிரந்த புகலிடமளிக்கக் கூடிய பாதுகாப்பான நாடொன்றுக்குச் செல்வார் என்றும் பிரதமர் சேன் – ஓ – ஷா தெரிவித்துள்ளார்.

சிங்கப்பூரில் தங்கியிருப்பதற்காக முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு வழங்கப்பட்ட வீசா நீடிப்பு காலம் 11 ஆம் திகதி வியாழக்கிழமையுடன் நிறைவுக்கு வந்தது. இந்நிலையில் அவருக்கு மனிதாபிமான தேவைகளின் அடிப்படையில் தாய்லாந்தில் தங்கியிருப்பதற்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளதாக அந்நாட்டு பிரதமரால் அறிவிக்கப் பட்டது.

இது தொடர்பில் மேலும் கருத்து வெளியிட்டுள்ள தாய்லாந்து பிரதமர் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தனக்கான நிரந்தர புகலிடத்தை வழங்கக் கூடிய நாடொன்றைத் தேடும் அதே நேரத்தில் தாய்லாந்தில் எவ்வித அரசியல் செயற்பாடுகளிலும் ஈடுபடப் போவதில்லை என்றும் உறுதியளித்துள்ளார். என்று குறிப்பிட்டுள்ளார்.



முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு இராஜதந்திர விமான அனுமதி பத்திரம் காணப்படுவதன் அடிப்படையில் தாய்லாந்தில் 90 நாட்கள் தங்கியிருக்க முடியும் என்று அந்நாட்டு வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் குறிப் பிட்டுள்ளார்.

மக்களின் எதிர்ப்பு போராட்டங்களின் காரணமாக முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ கடந்த ஜீலை 14 ஆம் மாலைத்தீவிலிருந்து சிங்கப்பூர் சென்றார். அங்கு அவர் தங்கியிருப்பதற்கான காலம் மேலும் 14 நாட்களுக்கு நீடிக்கப்பட்டுள்ளதாக கடந்த ஜீலை 27 ஆம் திகதி அறிவிக்கப்பட்டது.

அந்த அறிவிப்பிற்கமைய நேற்று வியாழக்கிழமையுடன் நீடிக்கப்பட்ட அனுமதி காலம் நிறைவடைந்தது. இந்நிலையிலேயே முன்னாள் ஜனாதிபதி தற்போது தாய்லாந்து சென்றுள்ளார் என்பது குறிப் பிடத்தக்கது.

# 3 முக்கிய விடயங்களில் கவனம் தேவை!

## ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதிகள் ஜனாதிபதியிடம் தெரிவிப்பு!



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இலங்கைக்கான ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதிகளுக்கும் இடையிலான முக்கிய சந்திப்பொன்று 10 ஆகஸ்ட் 2022 புதன் கிழமை இடம் பெற்றுள்ளது.

குறித்த சந்திப்பில் இலங்கையின் நெருக்கடியான காலகட்டங்களில் ஐரோப்பிய ஒன்றியம் பங்குதாரராக இருக்கும் என ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதிகள் நம்பிக்கை வெளியிட்டனர்.

சிவில் மற்றும் மனித உரிமைகள். அத்துடன் கருத்துச் சுதந்திரம் கருத்து வேறுபாட்டு உரிமை ஆகியன முக்கிய மானது என இதன்போது ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதிகளால் தெரிவிக்கப் பட்டது.

இலங்கையை மீண்டும் சரியான பாதையில் கொண்டு செல்ல கூட்டு ஒத்துழைப்பு நடவடிக்கை தேவை என்பது ஜனாதிபதியிடம் ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதிகளால் வலியுறுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச் சலுகை. சர்வதேச நாணய நிதியம். மனித உரிமை பேரவை ஆகிய 3 பிரதான காரணிகளுக்கு வெளிவிவகார கொள்கைகளில் முக்கியமாக கவனம் செலுத்துமாறு ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநதிகள் ஜனாதிபதி ரணிலிடம் கேட்டுக் கொண்டுள்ளனர்.

இந்நிலையில் இந்த செயன்முறைகள் வெற்றியடைய இலங்கை அரசாங்கம் உறுதியான நடவடிக்கைகளை மேற் கொள்ளும் என ஐரோப்பிய ஒன்றியம் நம்பிக்கை வெளியிட்டுள்ளமை குறிப் பிடத்தக்கது.

## வாசகர்கள் வர்த்தகர்கள் கவனத்திற்கு!

எமது ஈழநாடு பத்திரிகை அலுவலகம் திங்கள் முதல் ஞாயிறு வரை வாரத்தில் ஏழு நாட்களும் காலை 9.00 மணி முதல் இரவு 12.00 மணி வரை திறந்திருக்கும். மரண அறிவித்தல், நினைவஞ்சலி மற்றும் முக்கியமான அறிவித்தல்கள் மட்டுமே வியாழன் இரவு 12.30 மணி வரை ஏற்றுக் கொள்ளப் படும்.

உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையில் விளம்பரம், அறிவித்தல் செய்ய விரும்புவோர் அலுவலகத்துடன் (416) 841 9600 அல்லது (905) 653 – 3000 என்ற தொலைபேசியில் தொடர்பு கொண்டு விட்டு கீழ் காணும் இடங்களில் அறிவித்தல்களை ஒப்படைக்கலாம். தங்கள் ஆதரவிற்கு நன்றி.

1 SANKAR INTERNATIONAL
2425 EGLINTON AVE EAST
(EGLINTON / KENNEDY)

2 NEW OCEAN SUPER MARKET
5635 FINCH Ave
(MARKHAM / FINCH Ave)

3 AGP MART
4A WADE AVE
TORONTO

4 KALAIMAHAL BOOK DEPOT
595 PARLIAMENT ST
TORONTO

5 UTHAYA SUPER MARKET
5010 STEELES AVE WEST
ETOBICOKE

ஈழநாடு பத்திரிகையில் பிரசுரமாகும் அனைத்து அறிவித்தல்கள், விளம்பரங்களுக்கு சம்பந்தப்பட்டவர்களே பொறுப்பாளர்கள். ஈழநாடு எந்த வகையிலும் பொறுப்பேற்காது. அத்துடன் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்திற்கும் ஆக்கியோரே பொறுப்பாளர்கள். ஆசிரியர் அல்ல.

அன்பு இல்லக் குழந்தைகளுக்கான நன்கொடையாளர்கள் 416 841 9600 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

வெள்ளிக்கிழமைகளில் உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையை eelanadu.ca மின்னிதழ் மூலமாகவும் வாசிக்கலாம்.

அன்பு இல்லக் குழந்தைகளின் வாழ்வுக்காகவும் வாழ்வாதாரத்திற்காகவும் உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகை நடாத்தும் 10வது ஆண்டு நிறைவின் இன்னிசை மாலையும் இராப்போசன விருந்தும் 23 ஒக்டோபர் 2022 ஞாயிறுக்கிழமை

Balachandran Law Office
Balachandran Muthaiah
Barrister, Solicitor & Notary



குடிவரவுச்சட்டம் - விசா, ஸ்பொன்சர், அகதிமனு கோரிக்கைகள்
வீடு, வர்த்தகம், அடைமான சட்டம்.
விவாகரத்து, பிரிவு உடன்படிக்கை
உயில், தத்துவபத்திரம் தயாரித்தல்.
உட்பட சகல சட்ட தேவைகளுக்கும்
பாலச்சந்திரன் சட்ட அலுவலகம்

2401 Eglinton Ave East, Suite 300
Toronto, Ontario M1K 2M5
416 755 5544

# மனிதஉரிமைகள் நிலைவரம் தொடர்பில் ஆராய கொழும்புக்குச் செல்லும் ஐ.நா. மனிதஉரிமைகள் பேரவையின் உயர்மட்டக் குழு?



அண்மைய காலங்களில் மனித உரிமைகள் நிலைவரம் தொடர்பில் சர்வதேச நாடுகளும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு மனித உரிமைகள் அமைப்புக்களும் தீவிர கரிசனையை வெளிப்படுத்தி வரும் நிலையில் எதிர்வரும் செப்டெம்பர் மாதம் ஆரம்பமாகவுள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 51 ஆவது கூட்டத்தொடரில் இலங்கையின் ஆட்சி நிர்வாகத்தில் ஏற்பட்டுள்ள தோல்வி, ஊழல்மோசடிகள் மற்றும் தண்டனைகளிலிருந்து விடுபடும் போக்கு ஆகியவற்றை உள்ளடக்கிய புதிய தீர்மானமொன்றைக் கொண்டு வருவதற்கான பேச்சுவார்த்தைகளில் பிரிட்டன் தலைமையிலான இணையனுசரணை நாடுகளும் மனித உரிமைகள் செயற்பாட்டாளர்களும் ஈடுபட்டு வருவதாக அறிய முடிகின்றது.

அது மாத்திரமன்றி அடுத்த வாரமளவில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் உயர்மட்டப் பிரதிநிதிகள் குழுவொன்று இலங்கைக்கு செல்லவுள்ளது. அக்குழுவினால் தயாரிக்கப்படும் நாட்டின் மனித உரிமைகள் நிலைவரம் தொடர்பான அறிக்கை எதிர்வரும் செப்டெம்பர் மாதக் கூட்டத்தொடரில் சமர்ப்பிக்கப்படக்கூடும் என்று மனித உரிமைகள் செயற்பாட்டாளர்கள் சிலரிடமிருந்து கிடைக்கப் பெற்ற தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 51 ஆவது கூட்டத்தொடர் எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 12 ஆம் திகதி முதல் ஒக்டோபர் மாதம் 7 ஆம் திகதிவரை நடைபெறவுள்ள நிலையில், இலங்கை குறித்த விவாதம் தொடக்க நாளான 12 ஆம் திகதியே நடைபெறவுள்ளது. இதன்போது இலங்கை தொடர்பில் ஏற்கனவே நிறைவேற்றப்பட்ட 46-1 தீர்மானத்தை அமுல்படுத்துவதற்கு மேலும் இரு வருட கால அவகாசம் வழங்கப்படுமா? அல்லது நாட்டின் தற்போதைய மனித உரிமைகள் நிலைவரத்தை அடிப்படையாகக் கொண்டு இணையனுசரணை நாடுகளால் புதிய தீர்மானம் கொண்டு வரப்படுமா? என்று கேள்வி நிலவுகின்றது.

எனவே பெண்கள் செயற்பாட்டு வலையமைப்பின் இணை ஸ்தாபகரும் மனித உரிமைகள் செயற்பாட்டாளருமான ஷ்ரீன் ஸரூரின் கருத்தின் பிரகாரம், எதிர்வரும் மனித உரிமைகள் பேரவைக் கூட்டத் தொடரின் போது இணையனுசரணை நாடுகள் ஒன்றிணைந்து இலங்கை தொடர்பில் புதிய காத்திரமான தீர்மானமொன்றை முன்வைப்பதற்கான வாய்ப்புக்கள் காணப்படுகின்றன.

அதேவேளை கடந்த காலத்தைப் பொறுத்த மட்டில் ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் இலங்கை தொடர்பில் இறுதியாக நிறைவேற்றப்பட்ட தீர்மானமான 46-1 தீர்மானமே ஏற்கனவே இடம்பெற்ற மனித உரிமை மீறல்களுக்கு உள்ளகப் பொறிமுறை மூலம் தீர்வு கிட்டாது என்பதை ஏற்றுக் கொண்டு ஐ.நா மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் அலுவலகத்தின் ஊடாக மனித உரிமை மீறல் குற்றங்கள் மற்றும் மனிதாபிமானக் குற்றங்கள் தொடர்பில் ஆதாரங்களைத் திரட்டுவதற்கும் அவற்றை உரியவாறு பாதுகாப்பாக ஆவணப்படுத்துவதற்குமான வாய்ப்பை வழங்கியிருக்கின்றது என்று கேசரியிடம் சுட்டிக் காட்டிய ஷ்ரீன் ஸரூர், ஆகவே இணையனுசரணை நாடுகளால் புதிதாகக் கொண்டு வரப்படக்கூடிய எந்தவொரு தீர்மானமும் ஏற்கனவே அடையப்பட்ட முன்னேற்றத்தை மழுங்கடிக்காத வகையில் மேலும் காத்திரமாக அமைய வேண்டியது அவசியம் என்று வலியுறுத்தினார்.

இது இவ்வாறிருக்க அடுத்த வாரமளவில் அல்லது இம்மாத இறுதியில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் அலுவலகத்தின் ஆசிய பசுபிக் விவகாரங்களுக்கான பிரிவின் தலைவர் ரொனீ மன்கோவான் தலைமையிலான உயர்மட்டப் பிரதிநிதிகள் குழுவொன்று இலங்கைக்கு செல்லவிருப்பதாகவும், நாட்டின் மனித உரிமைகள் நிலைவரம் தொடர்பான அக்குழுவின் அறிக்கை செப்டெம்பரில் ஆரம்பமாகவுள்ள 51 ஆவது ஜெனீவா கூட்டத் தொடரில் சமர்ப்பிக்கப்படக் கூடும் என்றும் மனித உரிமைகள் செயற்பாட்டாளர்கள் சிலரிடமிருந்து கிடைக்கப் பெற்ற தகவல்களின் மூலம் அறிய முடிகின்றமை குறிப்பிடத்தக்கது.

**வெள்ளிக்கிழமைகளில்**
**உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையை**
**eelanadu.ca மின்னிதழ் மூலமாகவும் வாசிக்கலாம்.**




ரொரன்ரோ அல்பியன் பகுதியில் கோவில் கொண்டிருக்கும்

கனடா – அருள்மிகு

ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயம்

1771 Albion Rd., Unit #1, Toronto, ON M9W 5S7 (Albion & Hwy 27)

Tel: 416.213.0110 • www.shrimuththumaari.cin



ஆலயம் திறந்திருக்கும் நேரம்
காலை 9.00 மணி முதல் 1.00 மணி வரை
மாலை 5.00 மணி முதல் 9.00 மணி வரை

பூசை நேரம்:
பகல் 12:00 முதல் மாலை 7:30
உற்சவ காலங்களில் பூசை நேரங்கள் மாற்றம் அடையலாம்

அம்பாள் அடியார்களே!

24 ஆகஸ்ட் 2022:-புதன் - பிரதோஷ விரதம்

30 ஆகஸ்ட் 2022- செவ்வாய் - விநாயகர் (ஆவணி) சதுர்த்தி

பகல் பூஜை உபயம்:-

திரு சுப்பிரமணி குடும்பம்

திரு செல்வரெத்தினம் குடும்பம்

திரு மனோகரன் குடும்பம்

இரவுப் பூஜை உபயம்

திரு ஜெயகுமார் குடும்பம்

இரவுப் பூஜை மாலை 7.30 மணிக்கு ஆரம்பமாகும்

# யுவான் வாங் 5 கப்பல் விவகாரம் இரு தலைக் கொள்ளியாக இலங்கை



யுவான் வாங் - 5 கப்பல் இலங்கை வரும் விடயத்தில் இருதலை கொள்ளியாக இலங்கை தவிக்கிறது. பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு சர்வதேச நாணய நிதியத்தை நம்பியுள்ள இலங்கை அந்த நிதியத்தின் முக்கிய அங்கத்துவ நாடான சீனாவையோ அல்லது இலங்கைக்கு பெரும் ஆதரவளித்து வரும் இந்தியாவையோ பகைக்க முடியாத நிலையில் உள்ளது.

இந்த நிலைமையில், சீனாவின் யுவான் வாங் கப்பல் எதிர்வரும் 15ஆம் திகதிக்கு பின்னர் இலங்கைக்கு வரும் என்று முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார். அத்துடன், இந்தக் கப்பல் இலங்கை வருவதற்கு அமைச்சருக்கு தெரியாமல் அதிகாரிகள் அனுமதி வழங்கினர் என்றும் கடந்த ஜீலை 12ஆம் திகதி அனுமதி வழங்கப்பட்டதாகவும் மைத்திரிபால சிறிசேன பாராளுமன்றில் கூறினார்.

சீனாவின் அதிநவீன தொழில்நுட்ப கப்பலான யுவான் வாங் -5, 11 ஆம் திகதி இலங்கை வரும் என்றும் எதிர்வரும் 17ஆம் திகதிவரை அங்கு தரித்து நிற்கும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இந்தக் கப்பல் இலங்கை வருவதற்கு இந்திய தரப்பிலிருந்து கடும் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்ட நிலையில், பயணத்தை ஒத்திப்போடுமாறு இலங்கை சீனாவை கோரியது. வரும் 15ஆம் திகதி இந்தியாவின் சுதந்திர தினம் என்பதால், அந்த நாளை கடந்து இலங்கை வருமாறு சீனாவிடம் கேட்கப்பட்டதாகவும் இதையேற்றே சீனா அந்த நாளைக் கடந்து இலங்கை வரும் என்று கூறப்படுகின்றது. இதனையே முன்னாள் ஜனாதிபதியும் பாராளுமன்றில் வெளிப்படுத்தினார்.

இதனிடையே இந்திய இராணுவ பலத்தை கண்காணிக்கும் நோக்கில் எதிர்வரும் 15ஆம் திகதிக்கு முன்னதாகவே கப்பல் இலங்கையை வந்தடையும் என்று இந்திய தரப்புகள் தெரிவிக்கின்றன. இது இலங்கைக்கு பலத்த நெருக்கடியை ஏற்படுத்தும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இதனிடையே, சீனாவின் சமூக வலைத்தளங்களான ரிக்-ரோக், டூயின் போன்றவற்றில் இலங்கை தூதரகத்தின் விளம்பர பிரசாரங்களுக்கு சீனா தடை விதித்துள்ளதாகக் கூறப்படுகின்றது. அத்துடன், இந்தத் தளங்கள் இலங்கைக்கு எதிரான கருத்துக்களால் நிரம்புகின்றன. மேலும், சீன பல்பொருள் அங்காடிகளில் இலங்கையின் பொருட்களை கொள்வனவு செய்வதை தாமதப்படுத்துவதாகவும் ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

கப்பல் விவகாரத்தில் இலங்கையின் முடிவால் சீனாவுக்கு ஏற்பட்ட அதிருப்தியே இவ்வாறு வெளிப்படுவதாக தெரிய வருகின்றது. இதனிடையே இலங்கையிலிருந்து 600 கிலோமீற்றர் தொலைவில் நின்ற சீனக் கப்பல், தனது பாதையை அந்தமான்தீவு நோக்கி மாற்றியது. எனினும், பின்னர் இலங்கையை நோக்கி திரும்பி மிகமெதுவாக நகர்ந்து வருகிறது என்றும் சர்வதேச தகவல்கள் தெரிவித்தன

# பிசு பிசுத்துப் போன ஆகஸ்ட் 9 போராட்டம்

அரசாங்கத்துக்கு எதிராக பெரும் எடுப்பிலான போராட்டங்கள் இடம் பெறும் என்று அரசியல் கட்சிகள், தொழில்ங்கங்கள் அறிவித்திருந்தன. ஆனால் ஆகஸ்ட் 09 குறைந்தளவிலானோரின் பங்கேற்புடனேயே போராட்டங்கள் நடைபெற்றன. பல்வேறு இடங்களிலும் போராட்டங்களை நடத்துவதற்கு பல தரப்புகளும் அழைப்பு விடுத்திருந்தன. ஆனாலும், இந்தப் போராட்ட களங்களுக்கு எதிர் பார்த்தளவு மக்களை அவைகளால் வரவழைக்க முடியவில்லை.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பதவி விலக வேண்டும், ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் கைது செய்யப்படுவது நிறுத்தப்பட வேண்டும், அவசரகால சட்டத்தை நீக்க வேண்டும் என்ற விடயங்களை வலியுறுத்தியே இந்தப் போராட்டங்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டன.

இடதுசாரி, முன்னிலை சோசலிஷக்கட்சி என்பன கோட்டை ரயில் நிலையம் முன்பாக போராட்டத்தை முன்னெடுத்தது. இதில், 200 வரையிலானவர்களே கலந்து கொண்டனர்.

எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையில் பாராளுமன்றுக்கு வெளியில் நடந்த போராட்டத்தில் இளைஞர்களை கைது செய்வது நிறுத்தப்பட வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டது. நாம் நிபந்தனை இல்லாமல் சர்வகட்சி அரசாங்கத்தை ஆதரிக்கிறோம். எங்களை நிபந்தனை விதிப்பதற்கு தள்ளாதீர்கள் என்று இதன் போது சஜித் பிரேமதாஸ கூறினார்.

ஜே. வி. பி. தலைமையிலான தொழில்சங்கங்கள் விகாரமா தேவி பூங்கா அருகில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இவர்கள் சுதந்திர சதுக்கத்தை நோக்கி பேரணியாக சென்றனர்.இதேசமயம், பிரதான போராட்டகளமான காலிமுகத்திடலில் சிறு குழுவினரே போராட்டத்தில் ஈடுபட்டனர். அங்கு சுமார் 15 கூடாரங்களே இருந்தன. அங்கு 50இற்கும் குறைவானவர்களே நின்றிருந்தனர். இன்றுடன் போராட்டத்தை முடிவுக்கு கொண்டு வருகிறோம். ஆனால், ஊழல் அரசியல்வாதிகள் வந்தால் மீண்டும் நாம் ஒன்றிணைவோம் என்று போராட்ட செயல்பாட்டாளர்கள் தெரிவித்தனர். இதையடுத்து இந்தப் போராட்டகளம் கலைந்தது.

ஆகஸ்ட் 9 போராட்டங்களில் மக்கள் அதிகளவில் பங்கேற்காமைக்கு போராட்டங்களில் ஈடுபட்டவர்கள் தொடர்ந்து கைது செய்யப்பட்டமையும், வரிசையின்றி எரிவாயு, எரிபொருள்கள் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டமையுமே பிரதான காரணங்கள் எனத் தெரிவிக்கப்பட்டன.

கடந்த ஏப்ரல் 9ஆம் திகதி முதல் காலிமுகத்திடலில் பல்லாயிரக்கணக்கான மக்கள் காலிமுகத்திடல் போராட்டக் களத்தில் ஈடுபட்டனர். இந்தப் போராட்டங்களின் விளைவால், மே 9இல் மகிந்த ராஜபக்ஷ, ஜஜீன் 9 பஸில் ராஜபக்ஷ பதவிவிலகினர். ஜஜீலை 9 ஆம் திகதி ஆயிரக் கணக்கானோர் ஜனாதிபதி மாளிகையை முற்றுகையிட்டன. இறுதியில், கோட்டாபய ராஜபக்ஷவும் பதவி விலகினார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இதேவேளை அரசாங்கத்துக்கு எதிராக ஏப்ரல் 9ஆம் திகதி காலிமுகத்திடலில் ஆரம்பிக்கப்பட்ட போராட்டம்' முடிவுக்கு வந்ததாக அறிவிக்கப்பட்டது. நாட்டின் பொருளாதார நெருக்கடியைத் தொடர்ந்து காலிமுகத்திடலில் பல்லாயிரக் கணக்கான மக்கள் கூடி போராட்டத்தில் ஈடுபட் டனர். இந்தப் போராட்டங்களின் விளைவால், மே 09ஆம் திகதி அன்றைய பிரதமர் மகிந்த ராஜபக்ஷ பதவி விலகினார். இதைத் தொடர்ந்து ஜீன் 09ஆம்திகதி நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ பதவியிலிருந்து விலகினார். இதையடுத்து ஜீலை 09ஆம் திகதி காலிமுகத்திடலில் ஆரம்பமான போராட்டத்தில் ஜனாதிபதி மாளிகை முற்றுகையிடப்பட்டது. இதைத் தொடர்ந்து அங்கிருந்து வெளியேறிய அன்றைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ(22ம் பக்கம் பார்க்க)

# இந்தியாவின் தலையீடு?

சோவியத் யூனியனின் உடைவை தொடர்ந்து உலக வரலாறு முடிந்து விட்டதாக, அமெரிக்க அரசியல் விஞ்ஞானியான, பிரான்சிஸ் புக்குமாயா பிரகடனம் செய்தார். 'உலக வரலாற்றின் முடிவும் கடைசி மனிதனும்' என்னும், அவரின் நூல், 1992இல் வெளியானது. இரண்டாம் உலக மகா யுத்தத்தைத் தொடர்ந்து, உலக அரசியல் இரண்டு நாடுகளுக்கிடையிலான முரண்பாட்டால் புரிந்து கொள்ளப்பட்டது. அரசியலில் இதனையே, இரு துருவ ஒழுங்கு என்பர்.

ஒருபுறம் சோவியத் யூனியனும் மறுபுறம் ஐக்கிய அமெரிக்காவும் உலகத்தை கட்டுப்படுத்தும் போட்டியில் மோதிக் கொண்டன. இந்த நிலையில் தான், 1991 (1990-1991) களின் இறுதியில், சோவியத்யூனியன் பல துண்டுகளாக உடைவுற்றது. இதனைத் தொடர்ந்து, அமெரிக்க சோவியத் பனிப்போர் முடிவுற்றது.

அதாவது, பனிப் போரில் அமெரிக்கா வெற்றி பெற்றது. இதனைத் தொடர்ந்து, முழு உலகும் அமெரிக்க மேலாதிக்கத்தின் கீழ் வந்தது. 90களுக்கு பின்னரான உலக ஒழுங்கு என்பதே - அமெரிக்காவால் தீர்மானிக்கப்படும் உலக ஒழுங்காகவே இருந்தது. இதனை அடிப்படையாகக் கொண்டு தான், புக்குயாமாவும் தனது வாதத்தை முன்வைத்திருந்தார். அதாவது, இனி உலகத்தை தாராளவாத அரசியலே ஆளும் என்பதே அவரின் வாதமாகும்.

உண்மையிலேயே வரலாறு முடிந்து தான் விட்டதா? கடந்த சில ஆண்டுகளாக இடம் பெற்று வரும் அரசியல் விவாதங்கள் மீளவும் வரலாற்றின் புதிய ஆரம்பம் தொடர்பானதாக இருக்கின்றது. முன்னர் சோவியத் யூனியன் இருந்த இடத்தில், இப்போது சீனா இருக்கின்றது. 2049இல், சீனா, உலக ஒழுங்கைத் தீர்மானிக்கும் ஒரு சக்தியாக எழுச்சியடைந்து விடும் என்றவாறான விவாதங்கள் மேற்குலகை ஆக்கிரமித்திருக்கின்றன. மனித குலம் இருக்கும் வரையில், அதிகார மோதல்களும் இருக்கும், அதிகார மோதல்கள் இருக்கும் வரையில் வரலாறு ஒருபோதுமே முடிந்து விடப் போவதில்லை.

இந்தியாவின் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படும் என்னும் அடிப்படையில் தான், இந்தியாவின் அன்றைய தலையீடு நிகழ்ந்தது. ஒரு பிராந்தியசக்தி என்னும் நிலையில் இந்தியாவின் தலையிடும் வரலாறும் முடிந்து விடப் போவதில்லை என்பதையே அண்மைக் கால விடயங்கள் தெளிவுபடுத்து கின்றன.

அன்றைய இந்தியாவிடம், அமெரிக்காவின் விரிவாக்கம் தொடர்பான அச்சங்கள் மேலோங்கியிருந்தன. இன்றைய இந்தியாவிடம், சீனாவின் எழுச்சி தொடர்பான அச்சங்கள் மேலோங்கியிருக்கின்றன. இதிலிருந்து இந்தியாவால் ஒருபோதும் விலகியிருக்க முடியாது. இந்தியா விலகினால், அதன் பின்னர், இந்தப் பிராந்தியத்தில், ,ந்தியா ஒரு சக்தியாக இருக்கவே முடியாது. ஒரு பிரதான சக்தியாக இருக்க வேண்டுமென்றால், இந்தியா தலையிட்டுத் தான் ஆக வேண்டும். வேறு எந்தவொரு தெரிவும் இந்தியாவிடம் இல்லை.

சீனாவின் யுவான் வாங்-5 கப்பல் விவகாரத்தில், இலங்கையின் இறைமை மதிக்கப்பட வேண்டுமென்று சீனா தெரிவித்திருக்கின்றது. ஓர் இறைமையுள்ள நாட்டின் விடயங்களில் இந்தியா தலையீடு செய்யக் கூடாதென்பதே சீனாவின் வாதமாக இருக்கின்றது. ஆனால், பலம் பொருந்திய நாடுகளின் தலையீடுகளுக்கு ,றைமை எப்போதுமே ஒரு தடையாக இருப்பதில்லை. ஏனெனில், ஒரு பெரிய நாட்டுக்கு அருகிலிருக்கும் சிறிய நாடு, அதன் விருப்பப்படி நடக்க முடியாது. அவ்வாறு நடந்தால், குறித்த பெரிய நாட்டின் கோபத்துக்கு ஆளாக நேரிடும்.

1984இல், அப்போதைய இந்திராகாந்தி தலைமையிலான இந்தியா, தேசியபாதுகாப்பு என்னும் அடிப்படையில் தான், இலங்கையின் உள்விவகாரங்களில் நேரடியாக தலையீடு செய்தது. பாரிய நெருக்கடி ஏற்பட்டால், அவ்வாறானதொரு தலையீடு மீண்டும் நிகழாது என்றில்லை. ஏனெனில், ஒரு பலம்பொருந்திய நாட்டின் பொறுமைக்கு எல்லையுண்டு. அந்த எல்லைக் கோட்டை தாண்டினால், அதன் பின்னர் நாடுகளின் இறைமை என்பது ஒரு பொருட்டல்ல. தற்போது இடம் பெற்றுவரும், ரஷ்ய- உக்ரைன் யுத்தம் இந்த அடிப்படையில்தான் நிகழ்கின்றது.

உக்ரைன் ஓர் இறைமையுள்ள நாடு ஆனாலும் அதன் சொந்த முடிவுகள் ரஷ்யாவின் தேசிய பாதுகாப்பை கேள்விக்கு உள்ளாக்குவதாக ரஷ்யா கருதுகின்றது. இதன் காரணமாகவே, ரஷ்யா யுத்தத்தைத் தெரிவு செய்தது. எனவே, இலங்கை விடயத்தில் இந்தியாவின் தலையீடுகள் எக்காலத்திலும் தவிர்க்கவே முடியாதது. இதனைத் தவிர்க்க முடியுமென்று எண்ணுகின்ற போதெல்லாம், இலங்கைத் தீவு பாரதூரமான நெருக்கடிக்குள் வீழ்வதும் தவிர்க்கவே முடியாதது. தமிழ் மக்களின் பிரச்னைக்கான தீர்வு விடயத்திலும் இதுதான் யதார்த்தம். ,து எவருடைய விருப்பமும் அல்ல மாறாக, பிராந்திய நிர்ப்பந்தம்

# ஆர்ப்பாட்டக்காரர்களை ஒடுக்குவதற்காக அவசரகாலச் சட்டத்தை பயன்படுத்துவது குறித்து ஐ.நா. நிபுணர்கள் கவலை

ஏப்பிரல் 2ம் திகதி முதல் அமைதியாக ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுபவர்களை ஒடுக்குவதற்கும், நாடு பொருளாதார ரீதியாக வீழ்ச்சியடைந்துள்ள நிலையில் ஆர்ப்பாட்டக்காரர்கள் தங்கள் துயரங்களை வெளிப்படுத்துவதை தடுப்பதற்கும் அவசரகால சட்டத்தினை விரிவாக நீடித்த காலத்திற்கு தொடர்ச்சியாக இலங்கை அதிகாரிகள் பயன்படுத்துவதை ஐக்கியநாடுகளின் மனித உரிமை நிபுணர்கள் கண்டித்துள்ளனர்.

தலைநகர் இலங்கையிலும் நாட்டின் ஏனைய பகுதிகளிலும் பல மாதங்களாக இடம் பெற்ற பாரிய மக்கள் போராட்டத்தை தொடர்ந்து ஜனாதிபதி ராஜபக்ச பதவியை இராஜினாமா செய்தார் நாட்டை விட்டு வெளியேறினார்.

அவருக்கு பின்னர் ஜனாதிபதியாக பதவியேற்ற ரணில்விக்கிரமசிங்க ஜீலை 17ம் திகதி இன்னுமொரு அவசரகால சட்டத்தினை அறிவித்தார் குழப்பங்களில் ஈடுபடுபவர்களிற்கு எதிராக கடுமையான நடவடிக்கைகளை எடுக்கப் போவதாக அறிவித்தார்.

ஜீலை 27 ம் திகதி இலங்கை நாடாளுமன்றம் அவசரகாலசட்டத்தை நீடித்து அனுமதி வழங்கியுள்ளது ஊரடங்கு சட்டத்தை விதித்தல் பாதுகாப்பு படையினருக்கு பரந்துபட்ட தங்கள் விருப்பத்தின்படி செயல்படுவதற்கான அதிகாரங்களை வழங்குதல், இந்த அதிகாரங்கள் நீதிமன்றத்தின் அனுமதியின்றி வீடுகள் அலுவலங்கள் கட்டிடங்களை சோதனையிடுவதற்கும் போராட்டக்காரர்களை தடுத்து வைப்பதற்குமான அனுமதியை வழங்குகின்றது.

அவசரகாலச் சட்டத்தை தவறாக பயன்படுத்துவது தொடர்பில் நாங்கள் இலங்கை அரசாங்கத்திடம் பல முறை சுட்டிக் காட்டியுள்ளோம் ஆனால் அதனால் பயனில்லை, அமைதியாக ஒன்றுகூடல் கருத்து சுதந்திரத்திற்கான உரிமைகளை சட்டபூர்வமாக பயன்படுத்துவதை மீறும் வகையில் அவசரகால சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட அதிகாரங்களை தொடர்ந்து பயன்படுத்துவதை கண்டிக்கின்றோம் எனவும் நிபுணர்கள் தெரிவித்துள்ளனர். இலங்கையில் மிக நீண்டகால அவசரகால சட்டம் துஸ்பிரயோகம் செய்யப்பட்டதை கருத்தில் கொள்ளும் போது ஐநா நிபுணர்கள் இதனை நன்கு ஆவணப்படுத்தியுள்ளனர், பலவிதமான மனித உரிமைகளை பயன் படுத்துவதற்கு அவசரகால சட்டத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள் ஏற்படுத்தக்கூடிய தாக்கங்கள் குறித்து ஐநா நிபுணர்கள் கரிசனை வெளியிட்டுள்ளனர்.

அவசரகால சட்டத்தின் கீழ் நலிவடைந்தவர்கள் மற்றும் சிறுபான்மையினத்தவர்கள் இலக்கு வைக்கப்படுவதாக வெளியாகும் தகவல்கள் குறித்தும் அவர்கள் கவலை வெளியிட்டுள்ளனர். சர்வதேச சட்டத்தின் கீழ் அவசரகால சட்டத்தினை பயன்படுத்துவதற்கான நடைமுறை தேவைகள் பூர்த்தி செய்யப்படவில்லை என்பதையும் அவர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

# இலங்கைக்குச் செல்வோர் கவனத்திற்கு!



இலங்கைக்கு விமான நிலையத்தினூடாக செல்லும் அனைத்து பயணிகளுக்கும் சுங்கத் திணைக்களம் முக்கிய அறிவிப்பொன்றை விடுத்துள்ளது. தடை செய்யப்பட்ட மற்றும் தற்காலிகமாக இடை நிறுத்தப்பட்ட பொருட்கள் அல்லது வர்த்தக பொருட்களை அல்லது உடன் வராத பயணிகளின் பொருட்களை விமான நிலையத்தினூடாக எடுத்து வருவதை தவிர்க்குமாறு சுங்கத் திணைக்கள பணிப்பாளர் பி.பி.எஸ்.சி.நோனிஸ் கேட்டுக் கொண்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் கடந்த நாட்களில் தடை செய்யப்பட்ட பொருட்களை பயணிகள் கொண்டுவருவது அதிகரித்துள்ளது.

தடை செய்யப்பட்ட பொருட்களில் தங்கம், சிகரெட், மருந்து அலங்கார செடிகள் போன்ற பொருட்களும், நாட்டில் நிலவும் அந்நிய செலாவணி பிரச்சினைகளால் இறக்குமதி தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ள பொருட்களும் இதில் அடங்கும்.

சில பயணிகள் சுங்கக் கட்டளைச் சட்டம், இறக்குமதி மற்றும் ஏற்றுமதி சட்டத்தின் கீழ் வெளியிடப்பட்ட விதி முறைகளை மீறி வணிக அளவுகளில் பொருட்களை கொண்டு வருவதும் அவதானிக்கப்பட்டுள்ளது. எனவே, விமான நிலையம் வழியாக குறித்த பொருட்களை கொண்டு வர வேண்டாம். இந்த அறிவுறுத்தல்களுக்கு இணங்கத் தவறினால் கொண்டு வரப்பட்ட அனைத்துப் பொருட்களையும் பறிமுதல் செய்யப்படும். மீறினால், சுங்கச் சட்டம் மற்றும் இறக்குமதி மற்றும் ஏற்றுமதி சட்டத்தின் விதிகளின்படி அபராதம் விதிக்கப்படும் என எச்சரித்துள்ளார்.


தற்பொழுது ON LINE இல் வகுப்புகள்

Math & Physics Tutoring

(For High School Students)



Special Classes for IB, AP & University Students
Math: Grade 9-12, Advanced Functions,
Calculus & Vectors and Data Management.
Physics: Grade 11 & 12

கணித வகுப்புக்கள் தரம் 9 முதல் 12 வரை
பௌதீகவியல் வகுப்புக்கள் தரம் 11 முதல் 12 வரை

Instructor: S. Elancheliyan, B. Sc (Sri Lanka), B. Eng (Canada)

சி.இளஞ்செழியன்

Tel: 416-524-0424

# நிரந்தர நாடு இல்லாமல் தவிக்கும் கோத்தபாய

## மாலைதீவு - சிங்கப்பூர் - தாய்லாந்து என அலையும் பரிதாபம்

இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தாய்லாந்திற்கு சென்றுள்ளதாக ராய்ட்டர்ஸ் செய்தி வெளியிட்டுள்ளது.

அரச எதிர்ப்பு போராட்டம் வலுப்பெற்று ஜனாதிபதி மாளிகை, ஜனாதிபதி செயலகம் ஆகியவற்றை போராட்டக்காரர்கள் தமது பொறுப்பிற்கு கடந்த ஜூலை மாதம் 9ம் தேதி எடுத்திருந்தனர் இதையடுத்து, தலைமறைவான அப்போதைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, இலங்கை விமானப் படைக்கு சொந்தமான விமானத்தின் மூலம் ஜூலை மாதம் 13ம் தேதி மாலத்தீவு நோக்கி பயணித்திருந்தார்.

மாலத்தீவு வழியாக சிங்கப்பூர் நோக்கி பயணித்த கோட்டாபய ராஜபக்ஷ, அங்கிருந்து தனது பதவி விலகல் கடிதத்தை அனுப்பியிருந்தார்.


சுற்றுலா விசாவின் மூலம் சிங்கப்பூர் சென்ற கோட்டாபய ராஜபக்ஸவின் விசாவை நீடிக்க முடியாது என சிங்கப்பூர் அரசாங்கம் அறிவித்திருந்தது.

இந்த நிலையில், அவர் மீண்டும் இலங்கைக்கு வருகைத் தருவார் என பலராலும் எதிர்பார்க்கப்பட்டது. எனினும், கோட்டாபய ராஜபக்ஷ நாட்டிற்கு வருகைத் தருவதற்கு இது சரியான தருணம் கிடையாது என புதிய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அண்மையில் அறிவித்திருந்தார்.

இந்த நிலையில், கோட்டாபய ராஜபக்ச தனது மனைவியுடன் நேற்று 11 ஆகஸ்ட் 2022 தாய்லாந்து சென்றுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இலங்கையில் பிறந்த கோட்டாபய ராஜபக்ஷ, சிறிது காலம் அமெரிக்க பிரஜாவுரிமையை பெற்றிருந்தார். அமெரிக்க பிரஜாவுரிமையுடனேயே கோட்டாபய ராஜபக்ஷ, மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சி காலத்தில், இலங்கையின் பாதுகாப்பு செயலாளராக பதவி வகித்தார்.

வெளிநாட்டு பிரஜாவுரிமையை கொண்டவர்கள், நாடாளுமன்றம் மற்றும் ஜனாதிபதி பதவிகளுக்கு தெரிவாக



முடியாது என்ற வகையில், அரசியலமைப்பின் 19வது திருத்தம் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் காலப் பகுதியில் கொண்டு வரப்பட்டது.

இதன்படி, 2019ம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் பிரதான வேட்பாளராக கோட்டாபய ராஜபக்ஷ களமிறங்கினார். ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவதற்காக, கோட்டாபய ராஜபக்ஷ, தனது அமெரிக்க பிரஜாவுரிமையை ரத்து செய்தார்.

தனது அமெரிக்க பிரஜாவுரிமையை ரத்து செய்து, ஜனாதிபதி பதவியை பொறுப்பேற்ற கோட்டாபய ராஜபக்ஸவின், மகன் மற்றும் மகனின் குடும்பம் இன்றும் அமெரிக்காவிலேயே வாழ்ந்து வருகின்றனர். இவ்வாறான நிலையில் கோட்டாபய ராஜபக்ஷ நிரந்தரமாக செல்வதற்கு நாடொன்று இல்லாமல், சிங்கப்பூரில் தங்கியிருந்ததுடன், தற்போது தாய்லா ந்தில் தங்கி இருக்க எதிர் பார்த்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. மனிதாபிமான அடிப்படையில் கோட்டபாயவிற்கு அனுமதியளித்துள்ளோம் எனத் தாய்லாந்து பிரதமர் தெரிவித்துள்ளார். இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்சவிற்கு மனிதாபிமான அடிப்படையில் தாய்லாந்தில் தங்குவதற்கு இடமளித்துள்ளதாக தாய்லாந்து பிரதமர் பிரயுத் சான் ஓசா தெரிவித்துள்ளார்.

இந்த விவகாரம் மனிதாபிமான கரிசனைகளின் அடிப்படையிலானது, இது தற்காலிகமாக தங்குவதற்கான அனுமதி தான் என்ற வாக்குறுதியை வழங்கியுள்ளோம் என அவர் தெரிவித்துள்ளார்

இதேவேளை இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தாய்லாந்து வருவதற்கு அனுமதித்துள்ளதாக தெரிவித்துள்ள தாய்லாந்தின் வெளிவிவகார அமைச்சு அரசியல் புகலிடம் எதுவும் கோரப்படவில்லை எனவும் தெரிவித்துள்ளது. தாய்லாந்தின் வெளிவிவகார அமைச்சக பேச்சாளர் டானி சங்கிராட் இதனை தெரிவித்துள்ளார் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது –

இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தாய்லாந்திற்கு வருவதற்கு அனுமதிக்குமாறு இலங்கையின் தற்போதைய அரசாங்கத்திடமிருந்து வேண்டுகோள் கிடைத்துள்ளது.

இரு நாடுகளிற்கும் இடையிலான நீண்டகால உறவுகளின் அடிப்படையில் இது குறித்து ஆராயப்பட்டது.

இராஜதந்திர கடவுச்சீட்டுக்குரியவர் என்ற அடிப்படையில் 2013ம் ஆண்டு இலங்கைக்கும் தாய்லாந்திற்கும் இடையில் கைச்சாத்தான விசா விலக்கு உடன்படிக்கையின் அடிப்படையில் இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி விசா இல்லாமல் தாய்லாந்திற்கு வரலாம் 90 நாட்கள் தங்கியிருக்கலாம். இது வேறுபயணத்தை மேற்கொள்வதற்கான தற்காலிக ஏற்பாடு அரசியல் தஞ்சம் எதுவும் கோரப்படவில்லை.

# வடக்கு கிழக்கு தமிழரின் பிரதிநிதித்துவம் குறைவடைகிறது

2004 ஆம் ஆண்டில் பாராளுமன்றத்தில் 25 வீதமாக இருந்த வடக்கு, கிழக்கு தமிழ் பிரதிநிதித்துவம் தற்போது வட கிழக்கு தமிழர்களுக்கு எதிரான பேரினவாத அரசியல் செயல்பாடுகளினால் குறைவடைந்து வருகின்றது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் 10 ஆக 2022 நடைபெற்ற ஜனாதிபதியின் சிம்மாசன உரையின் மீதான சபை ஒத்திவைப்பு விவாதத்தின் போது மேற்கண்டவாறு அவர் குறிப்பிட்டார். அதன் போது சாணக்கியன் எம்.பி மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் 74 வருடங்களாக ஆட்சி செய்த ஜனாதிபதிகள் மற்றும் பிரதமர்கள் பல உரைகளை பாராளுமன்றில் ஆற்றியிருந்தாலும் இந்த நாட்டினதும், நாட்டு மக்களினதும் எதிர்காலத்தை தீர்மானிப்பது பெரும்பான்மை சமூகத்தை சேர்ந்த ஜனாதிபதி ஒருவர் என்பது சகலரும் அறிந்ததே. இலங்கையராக அனைவரும் ஒன்றிணைந்து வாழ வேண்டும் என குறிப்பிட்டாலும் கூட ஜனாதிபதி மற்றும் பிரதமர் பதவிக்கு தமிழ் பேசும் ஒருவர் தெரிவு செய்யப்படவில்லை.

விரும்பினாலும், விரும்பாவிடினும் பெரும்பான்மையாளரில் ஒருவரை தலைவராக தெரிவு செய்யும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளோம். எமது மக்களின் வாக்குகளினால் ஜனாதிபதி ஒருவரை தெரிவு செய்ய முடியாத நிலை காணப்படுகிறது. 2010ஆம் ஆண்டு இடம்பெற்ற ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்ட சரத் பொன்சேகாவிற்கு ஆதரவு வழங்க வேண்டிய நிலைப்பாடு இருந்தது.

2015ஆம் ஆண்டு பொது வேட்பாளராக போட்டியிட்ட மைத்திரிபால சிறிசேனவை ஆதரித்தோம். அதே போலதான் தொடர்ச்சியாக தேர்தலில் இரு வேட்பாளர்களின் எவர் சிறந்தவர் என ஆராய்ந்து அவருக்கு ஆதரவு வழங்கியுள்ளோம். இதுவரையில் ஆட்சியில் இருந்த அரச தலைவர்கள் அனைவரும் நாட்டு மக்களின் பொருளாதாரத்தை இல்லாதொழித்துள்ளார்கள். தமிழ் சமூகம் பொருளாதாரம் மாத்திரமல்ல அதற்கு அப்பாற்பட்ட பல இன்னல்களை எதிர் கொண்டுள்ளது. அவசரகால சட்டத்தை கொண்டு தற்போது தெற்கில் கைது இடம்பெறுகிறது. நாங்கள் 1979ஆம் ஆண்டு முதல் அவசரகால சட்டத்தை எதிர்த்து வருகிறோம். அவசர கால சட்டத்திற்கு எதிராக இன்று எதிர் தரப்பினர் குரல் கொடுக்கிறார்கள். தமிழ் மக்கள் அவசர கால சட்டத்தினால் பல இன்னல்களை அனுபவித்துள்ளதை நினைவுபடுத்த வேண்டும். வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் அபிவிருத்தி முன்னேற்றத்திற்கு எந்த அரசாங்கமும் உரிய நடவடிக்கையினை முன்னெடுக்கவில்லை. தொடர்ச்சியாக தமிழ் சமூகம் ஏமாற்றப்பட்டுள்ளது. அம்பாந்தோட்டை துறைமுகத்தை அபிவிருத்தி செய்த அரசாங்கம் திருகோணமலை துறைமுகத்தை அபிவிருத்தி செய்யவில்லை.

பாலாலி விமான நிலையம் அபிவிருத்தி செய்யப்படவில்லை, மாறாக எமது வளங்கள குறிப்பாக மண் வளம் குறையாடப்படுகிறது. நல்லாட்சி அரசாங்கத்தில் குற்றச்சாட்டுக்குள்ளான முன்னாள் அமைச்சர் ஹெலிகொப்டரில் மன்னாருக்கு சென்றுள்ளார். மன்னார் மாவட்டத்தில் உள்ள வளங்களை குறையாடுவதற்கான நிகழ்ச்சி நிரல் முன்னெடுக்கப்படுகின்றன. குச்சவெளி பகுதியின் பெயரை மாற்றுவதற்கும் முயற்சிகள் முன்னெடுக்கப்படுகின்றன. வடக்கு மற்றும் கிழக்கு மாவட்டத்தில் உள்ள மீனவர்களுக்கு எரிபொருள் வழங்குவதற்கு எவ்வித நடவடிக்கையும் முன்னெடுக்கப்படவில்லை. மறுபுறம் விவசாயிகளும் உரம் பற்றாக்குறையினால் பாதிக்கப்பட்டுள்ளார்கள். கடந்த வருடம் வழங்கப்பட்ட அரச தொழில் நியமனத்தில் தமிழ் பேசபவர்களில் 2000 பேருக்கு கூட தொழில் வாய்ப்புக்கள் வழங்கப்படவில்லை.

ஆகவே தமிழ் மக்களின் வாழ்வாதாரம் குறித்து சிந்திக்காத தலைவர்கள் நாட்டை ஆண்டுள்ளார்கள்.



வடக்கு மற்றும் கிழக்கு இளைஞர்கள் நாட்டை விட்டு வெளியேறுவதால் இனி வரும் காலங்களில் தமிழ் பிரதிநிதித்துவத்தின் வீதம் குறைவடையும் நிலை ஏற்படும். மின்கட்டணம் அதிகரிக்கப் பட்டுள்ளதால் நடுத்தர வர்க்கத்தினர் பெரிதளவில் பாதிக்கப்படுவார்கள். மாதம் 4 ஆயிரம் ரூபாவாக காணப்பட்ட மின்கட்டணம் இனிவரும் காலங்களில் 6 ஆயிரம் ரூபாவாக அதிகரிக்க கூடும். மின்கட்டணம் பன்மடங்கு அதிகரித்துள்ளதால் நடுத்தர மக்கள் பொருளாதார ரீதியில் மோசமான பாதிப்புக்களை எதிர் கொள்வார்கள்.

நீர்கட்டணம் அதிகரிக்கவுள்ளது. ரூபாவின் பெறுமதி வீழ்ச்சியடைந்துள்ளதால் அனைத்து சேவைகளின் கட்டணமும் உயர்வடைந்துள்ளது. பொருளாதார நெருக்கடியினை ஏற்படுத்தியவர்களுக்கு கண்டிப்பாக தண்டனை வழங்க வேண்டும். தவறான பொருளாதார முகாமைத்துவத்தினால் நடுத்தர மக்கள் பாதிக்கப்பட்டுள்ளார்கள். பொருளாதார நெருக்கடிக்கு பொறுப்புக் கூற வேண்டியவர்கள் இன்று மீண்டும் ஒன்றிணைந்துள்ளார்கள். பொருளாதார நெருக்கடியினை ஏற்படுத்தியவர்களுக்கு தண்டனை வழங்குவது குறித்து ஜனாதிபதி தனது சிம்மாசன உரையில் குறிப்பிட்டிருந்தால் அது மகிழ்வுக்குரியதாக அமைந்திருக்கும் எனக் குறிப்பிட்டுள்ளார்.

# ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஒடுக்கு முறையை முடிவுக்கு கொண்டு வர வேண்டுமென சர்வதேச மனிதஉரிமை கண்காணிப்பகம் கோரிக்கை


ஜனாதிபதி விக்கிரமசிங்க ஒடுக்கு முறையை முடிவிற்கு கொண்டு வர வேண்டும் என சர்வதேச மனித உரிமை கண்காணிப்பகம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இலங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனது நிர்வாகம் அனைத்து இலங்கையர்களினதும் மனித உரிமைகளை பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை எடுப்பதை உறுதி செய்ய வேண்டும் என சர்வதேச மனித உரிமைகள் கண்காணிப்பகம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

அது வெளியிட்டுள்ள கடிதத்தில் மனித உரிமை கண்காணிப்பகம் தனது முக்கிய மனித உரிமை கரிசனைகளை வெளியிட்டுள்ளது. பொருளாதாரத்தை முறையாக கையாளமை, ஊழலிற்கு எதிராக பல மாதங்கள் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தை தொடர்ந்து அப்போதைய ஜனாதிபதி பதவி விலகியதை தொடர்ந்து ஜீலை 21ம் திகதி ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக பதவியேற்றார்.

பல வருட தவறான நிர்வாகம் மனித உரிமை மீறல்களின் பின்னர் இலங்கை அரசியல் பொருளாதார மனித உரிமை நெருக்கடியின் மத்தியில் சிக்குண்டுள்ளது. உரிய சமூக பாதுகாப்பு நடைமுறைகளை நடைமுறைப்படுத்துவதன் மூலம் நாட்டில் காணப்படும் ஊழலிற்குதீர்வை காண்பதன் மூலம் அரசாங்கம் பொதுமக்களை நெருக்கடிகளில் இருந்து பாதுகாப்பதற்கு முன்னுரிமை அளிக்க வேண்டும்.

அதேவேளை கருத்துசுதந்திரம் ஒன்று கூடுவதற்கான சுதந்திரம் உட்பட அடிப்படை உரிமைகளை மதிக்க வேண்டும் ஆயுதப்படையினரின் துஸ்பிரயோகத்தை முடிவிற்கு கொண்டு வர வேண்டும்.




ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பல சவால்களை எதிர் கொண்டுள்ளார், ஆனால் மிக கொடூரமான பயங்கரவாத தடைச்சட்டத்தை நடைமுறைப்படுத்துவது ஆர்ப்பாட்ட தலைவர்களை அரசியல் நோக்கத்தின் கீழ் கைது செய்வது செயற்பாட்டு குழுக்களை கண்காணிக்கும் நடவடிக்கைகள் போன்றவை இலங்கை எதிர் கொண்டுள்ள மோசமான பிரச்சினைகளிற்கு தீர்வை காண உதவாது என மனித உரிமை கண் காணிப்பகத்தின் தென்னாசியாவிற்கான இயக்குநர் மீனாக்சி கங்குலி தெரிவித்துள்ளார்.

இலங்கை அரசாங்கம் மனித உரிமைகளை பின்பற்றினால் சட்டத்தின் ஆட்சியை பின்பற்றினால் நெருக்கடிகளிற்கான அடிப்படைகளிற்கு தீர்வை கண்டால் மாத்திரமே சர்வதேச உதவிகள் பயனுள்ளவையாக காணப்படும் என இலங்கையின் சகாக்கள் தெளிவான நிலைப்பாட்டை கொண்டுள்ளனர் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# கைது செய்யப்படும் போராட்டக்காரர்கள்!

அதிபரின் ஆசனத்தில் அமர்ந்தார்கள் என்ற குற்றச்சாட்டில் போராட்டகாரர்கள் கைதுசெய்யப்பட்டு சிறை வைக்கப்படுகின்றமைக்கு பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளது.

ஆனால், கடந்த காலத்தில் நாடாளுமன்றத்தின் சபாநாயகர் ஆசனம் மற்றும் ஒலிவாங்கிகளை சேதப்படுத்திய நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு எதிராக என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா கேள்வி எழுப்பியுள்ளார்.

நாடாளுமன்றில் உரையாற்றுகையில் அவர் இவ்வாறு கேள்வி எழுப்பியிருந்தார். இதன்போது மேலும் உரையாற்றிய அவர், அதிபர் மாளிகையில் ஆசனத்தில் அமர்ந்தார்கள் எனக் கூறி அவர்களை சிறை வைத்துள்ளனர். எனினும் சபாநாயகரின் ஆசனத்தில் அமர்ந்து, அதன் மீது நீரை ஊற்றி, அதனை உடைத்து வீசி இங்கு அழிவை ஏற்படுத்தினார்கள்.

இந்த விடயத்தில் நாடாளுமன்றத்தில் செயற்பட்ட விதம் குறித்து குழுவொன்று அமைக்கப்பட்டது. அதற்கு என்ன நடந்தது என்று கூட தெரியவில்லை. எங்கே அந்த



அறிக்கை. இந்த நாடாளுமன்றத்தில் எவ்வளவு தவறாக நடந்து கொண்டாலும் எந்தவொரு வகையிலும் அவர்களுக்கு தண்டனை விதிக்கப்படுவ தில்லை.

அந்த அறிக்கையை பெறுவதற்கு நாங்கள் விரும்புகின்றோம். நளின் கூறிய விடயம் தொடர்பான அறிக்கை எங்கே? ஏன் அந்த அறிக்கைகளை மூடி மறைக்கின்றீர்கள் என்றார்.

கடன் தொல்லையா?

பல்லாண்டுகாலம் Bankruptcy, Consumer proposal போற்ற சேவைகளில் அனுபவமுடையவர்கள்

கட்டணங்கள் ஏதுமற்ற சேவை

- கடன் பிரச்சினையால் நிம்மதியற்ற வாழ்க்கையா?
- நாளாந்த வாழ்கை கைநழுவிப் போகிறதா?
- வீடு, கார் பறிமுதலாகிவிடும் என்ற ஏக்கமா?
- Collection Agnecyயின் தொலைபேசி மிரட்டலா?
- உங்கள் சம்பளம் கடன் தந்தோரால் பறிமுதலாகும் என்ற கவலையா?

✓ சேவைக்கான கட்டணம் (Consulting fee) நாங்கள் அறவிடுவதில்லை

✓ மறைவான கட்டணங்கள் (Hidden charges) ஏதும் கிடையாது

✓ Consumer Proposal செய்வதன் மூலம் உங்கள் கடன்தொகையில் ஒரு பகுதியை மட்டுமே வட்டியில்லாது செலுத்த நாங்கள் ஒழுங்கு செய்து கொடுப்போம்.

✓ Consumer Proposal ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கு உடனேயே கடனட்டடை ஒன்றைப் பெற்றுக்கொள்ள ஒழுங்கு செய்து கொடுக்கப் படும்

அனைத்து கடன் பிரச்சினைகளுக்கான இலவச ஆலோசனைகளுக்கு

Sri Vallipuranathar

Certified Insolvency & Bankruptcy Counsellor

CSC Credit Solution Centre

309-80 Corporate Drive, Scarborough, ON M1H 3G5

Tel: 416.439.0224, Cell: 416.450.5011

Fax: 416.439.0226

www.creditsolutioncanada.com

contact@creditsolutioncanada.com





மேன்மைகொள்சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்



# ஜெயதுர்க்கா தேவஸ்தானம் மிசிசாகா
# அருள் மிகு திரு முருகப்பெருமானின் அலங்கார உற்சவ விஞ்ஞாபனம்

| ஆரம்பம் | பூர்த்தி |
|---|---|
| 17 - 08 - 2022 | 26 - 08 - 2022 |



அருவமும் உருவமாகி அநாதியாய் பலவாய் ஒன்றாய்
பிரமமாய் நின்ற ஜோதிப் பிழம்பதோர் மேனியாக
கருணைகூர் முகங்களாறும் கரங்கள் பன்னிரண்டும் கொண்டே
ஒரு திரு முருகன் வந்தாங்கு உதித்தனன் உலகம் உய்ய!

சுபகிருது வருடம் ஆவணி மாதம் 1ம் நாள் (17-08-2022) அச்சுவினி நட்சத்திரமும். ஸப்தமி திதியும் கூடியுள்ள நன் நாள் புதன் கிழமை மாலை தொடங்கி ஆவணிமாதம் 10ம் நாள் (26-08-2022) வெள்ளிக்கிழமை அமாவாசை திதியில் பூர்த்தியுறும் வகையில் 1008 சங்காபிஷேகம் நடைபெறும். கந்தன் பக்தர்களாகிய அனைவரும் கலந்துகொண்டு கந்தனின் அருளைப்பெறுமாறு அன்புடன் அழைக்கிறோம்.

| 1ம் திருவிழா தொடக்கம் 8ம்திருவிழா வரை | சப்பறத்திருவிழா 24-08-2022 | தேர்த்திருவிழா 25-08-2022 | 1008 சங்காபிஷேகம் 26-08-2022 |
|---|---|---|---|
| மாலை 5.30 ஸ்நபன கும்பாபிஷேகம்<br>மாலை 7.00 மூலமூர்த்திகட்கு பூஜாரம்பம்<br>மாலை 7.30 கலை நிகழ்ச்சி<br>மாலை 8.00 வசந்தமண்டபப் பூஜை<br>தொடர்ந்து முருகன் வள்ளி தெய்வானை வீதியுலா | மாலை5.00 ஸ்நபநாபிஷேகம்<br>மாலை7.00 பூஜாரம்பம்<br>மாலை7.30 கலைநிகழ்வுகள்<br>மாலை8.00 வசந்தமண்டபபூஜாரம்பம்<br>தொடர்ந்து முருகன் வள்ளி தெய்வானை வீதியுலா | காலை 7.30 ஸ்நபனாபிஷேகம்<br>காலை 09.00 பூஜாரம்பம்<br>காலை 10.00 வசந்தமண்டபபூசை<br>தொடர்ந்து தேர்வீதியுலா,<br>பச்சையணிந்த திருக்கோலம்<br>1.00 மணிபிராயச்சித்தசாந்தி | 7.00 காலை பூஜை<br>8.00 காலை சங்காபிஷேகம்<br>11.00 காலை பூஜாரம்பம்<br>மாலை வசந்தமண்டபபூசை |

## தேர்த்திருவிழா அன்று வாகன தரிப்பிட வசதிகள் ஒழுங்கு செய்யப் பட்டுள்ளன

சகல பக்தர்களும் தேர்த்திருவிழாவில்
காவடி,கற்பூரச்சட்டி,பாற்குடம் எடுக்கஉள்ள பக்தர்கள் பதிவுசெய்துகொள்வது நன்று
உற்சவநாட்களும் உபயகாரர்களின் விபரமும்.

| | | | | |
|---|---|---|---|---|
| 16-08-2022 | செவ்வாய்காலை | கணபதிஹோமம் | | பா-விக்கினராஜா |
| 17-08-2022 | புதன் | 1ம் திருவிழா | ஓம் பிரணவவுபதேச | சி-அ-ஜயாத்துரை குடும்பம் திருநெல்வேலி |
| 18-08-2022 | வியாழன் | 2ம் திருவிழா | திருநடனம் | சிவகுமார்,வனஜா கந்தசாமி குடும்பம் |
| 19-08-2022 | வெள்ளி | 3ம் திருவிழா | கார்த்திகை | நிரஞ்சன் பொன்னம்பலம்,<br>உதயமூர்த்தி கந்தையா குடும்பம் |
| 20-08-2022 | சனி | 4ம் திருவிழா | தண்டபாணி | சொர்ணலிங்கம் மகாலிங்கம் குடும்பம் |
| 21-08-2022 | ஞாயிறு | 5ம் திருவிழா | கைலாசவாகனம் | சந்திரேஸ்வரன் பரமசாமி குடும்பம் |
| 22-08-2022 | திங்கள் | 6ம் திருவிழா | மஞ்சம் | சாரங்கன் இராமகிருஸ்ணர் குடும்பம் |
| 23-08-2022 | செவ்வாய் | 7ம் திருவிழா | வேட்டை | பாஸ்கரன் கணேசானந்தன் |
| 24-08-2022 | புதன் | 8ம் திருவிழா | சப்பறம் | பிரதீபன் பாபநாசசிவம் கிருட்டிணர் குடும்பம் |
| 25-08-2022 | வியாழன்காலை | 9ம் திருவிழா | தேர் | விஜயசேகர் விஜயரட்ணம் குடும்பம் |
| 25-08-2022 | வியாழ மாலை | இரவுத்திருவிழா | தேரடி | மதனிக்கா குணேந்திரன் |
| 26-08-2022 | வெள்ளி காலை | 10ம்திருவிழா | 1008 சங்காபிஷேகம் | அசோக்குமார் வேலாயுதம் |
| 26-08-2022 | வெள்ளி மாலை | இரவுத்திருவிழா | சுவாமி வீதியுலா | |
| 27-08-2022 | சனி காலை | | பிராயச்சித்தம் | வல்லிபுரம் கணேசன் |
| 27-08-2022 | சனி மாலை | மாலை | திருக்கல்யாணம் | செந்தில்குமரன் ஆனந்தன் |
| 28-08-2022 | ஞாயிறு மாலை | மாலை | வைரவர்மடை | சிவா சின்னத்தம்பி குடும்பம் |

**கற்பூரச்சட்டி,பால்குடம், காவடி எடுக்க விரும்பும் அடியார்கள் ஆலயத்தில் பதிவுசெய்யவும்**

www.jeyadhurgatemple.com 1808 Drew Road, Mississauga, ON.L5S 1J6. 905-612-1856

# 10வது ஆண்டில் வாசகர்களின் ஆதரவோடு ஈழநாட்டின் அறப்பணி

## உறவுகளே! ஆகஸ்ட் மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

அன்பு இல்லம் - பாரதி இல்ல நிர்வாகசபை உறுப்பினர்கள்.

தலைவர்- வைத்திய கலாநிதி து.வி.ஜெயகுலராஜா

செயலாளர்- திரு.எஸ்.கிருஸ்ணமூர்த்தி (கிராமசேவையாளர்)

பொருளாளர்- திரு.சு.கபிலன் (கிளிநொச்சி)

உபதலைவர்- திரு.பரமேஸ்வரன் (வற்றாப்பளை அம்மன் ஆலய நிர்வாகி)

உபசெயலாளர்- செல்வி சி.கவிதா (முல்லைத்தீவு)

பதவிக்கால போசகர்-திரு த.செ.பத்மநாதன்

இணைப்போசகர்-திரு.ச.சரத்சந்திரன்

அன்புத் தமிழ் நெஞ்சங்களே! ஆயிரம் கோடி வணக்கங்கள்! குழந்தைகள் எல்லோரும் தெய்வத்திற்கு சமன். ஆதரவற்ற குழந்தைகளுக்கு நாம் செய்யும் பணி தெய்வத்திற்கு செய்யும் பணிக்கு சமன். சிறார்கள் வாழும் நிலையமும் ஒரு கோவில் தான்.

இந்தக் குழந்தைகளுக்கு தாய், தந்தை, உறவுகள் என்று எவ ருமே இல்லை. அவர்களின் தாய் தந்தையர்கள் போரின் போது உயிரை இழந்து விட்டனர். சிலர் காணாமல் போய் இன்னும் திரும்பி வரவில்லை. இன்று யார் இந்தப் பிள்ளைகளுக்கு உதவுகின்றார்களோ அவர்களே தாயுமாகி தந்தையுமாகி தெய்வமுமாகி நிற்கின்றார்கள்.

அந்த வகையில் நீங்களும் உங்கள் அன்புக்குரியவர்களின் நினைவாக உங்கள் பிறந்தநாள், பிள்ளைகளின் பிறந்தநாள், திருமண நன்நாள், அன்புக்குரியவர்களின் நன்நாள் என வருடத்தில் வரும் ஒரு நாளில் உணவுக்கு உதவுவதன் மூலம் அந்தக் குழந்தைகளுக்கு வாழ்வளியுங்கள்.

ஆயிரம் கோவில்களில் அன்னதானம் கொடுப்பதை விட கோடி புண்ணியம் உங்கள் வாசல் கதவைத் தேடி வரும் என்பதை மறவாதீர்கள். நாம் மனிதர்களாகப் பிறந்ததிற்கு ஓர் அர்த்தம் தேவை. மற்றவர்களுக்கும் சிறு உதவிகளை செய்வதன் ஊடாக கொஞ்சம் புண்ணியத்தையும் தேட வேண்டும்.

இளம் தளிர்களை எப்படி பராமரிக்கின்றோம் என்பதில் தான் அவர்களின் எதிர்காலம் தங்கியிருக்கின்றது. உங்களால் முடிந்தளவு நன்கொடையை இந்த அன்பு இல்லக் குழந்தைகளுக்கு வழங்குங்கள்.

10 வருடங்களுக்கு முன் 86 குழந்தைகளுடன் ஆரம்பிக்கப்பட்ட அன்பு இல்லத்தில் இன்று 423 குழந்தைகள் இருக்கிறார்கள். இவர்களில் 36 பேர் மாவீரர் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். பலர் போராளிகளின் பிள்ளைகள். அத்துடன் போரின் கொடுமையால் பெற்றோரைப் பறி கொடுத்தவர்கள் மட்டுமல்ல உறவுகளால் வாழ்க்கையைத் தொலைத்தவர்கள் கல்வியைத் தொலைத்தவர்கள் என பலரும் அடங்குகின்றனர்.

இவர்களுடைய உணவுத் தேவையை மாத்திரம் கனடா வாழ் அன்புத் தமிழ் மக்களாகிய உங்களை நம்பி நாம் பொறுப்பேற்று கடந்த ஒன்பது ஆண்டுகளுக்கு மேலாக சிறப்பாகச் செய்து வருகின்றோம். மூன்று வேளையும் நேர காலம் தவறாமல் சைவம் அசைவம் என அட்டவணைப்படுத்தி சிறப்பு உணவு வழங்கி வருகின்றோம்.

ஜனவரி 2017 முதல் ஒரு நாள் முழுவதுக்குமான உணவுக்காக குறைந்த பட்சம் 200.00 டொலர்களை மாத்திரமே நாம் உங்களிடம் வேண்டி நிற்கின்றோம் என்பதை உதவி செய்யும் அன்பர்கள் கவனத்தில் கொள்க.

உங்களது உதவிகள் அனைத்தும் சரியான நேரத்தில் அவர்களைச் சென்றடைந்து உங்களது நிகழ்வுகள் சரியான திகதியில் நடைபெறும் என்பதை பணிவோடு தெரிவித்துக் கொள்ளுகின்றோம். உங்கள் உதவிகள் சரியான நேரத்தில் சென்றடைகின்றது என்பதை நீங்கள் அறிந்து கொள்ளும் ஒரு குறியீடாகவே போட்டோக்கள் 11ம் பக்கத்தில் பிரசுரமாகின்றன.

அன்புக்குரியவர்களே! மீண்டும் கூறுகின்றோம் உங்கள் வாழ்வில் - உங்கள் மனதில் பதிந்துள்ள இன்ப நாட்களை - நினைவு நாட்களை எண்ணி அன்றைய நாளில் இந்தப் பிள்ளைகளுக்கு உணவு வழங்குங்கள்.

இந்த வருடத்தில் ஒருநாள் உணவு வழங்குவதற்கு முற்பதிவு செய்யுங்கள். அன்பளிப்பை 5 நாட்களுக்கு முன் தந்து உதவுங்கள். இவ்வாறு நீங்கள் உதவி செய்தால் எமது பணியை சீராகச் செய்ய முடியும் என்பதோடு எமக்கும் ஓர் நம்பிக்கையும் உற்சாகமும் பிறக்கும். அந்தப் பிள்ளைகளுக்கும் தங்கள் வாழ்வு ஒளி மயமாக மாறுகின்றது என்ற எண்ணம் வரும்.

புலம் பெயர்ந்த மனிதாபிமானம் உள்ளவர்கள் - மனித நேயம் உள்ளவர்கள் இருக்கும் வரை நாம் அநாதைகள் அல்ல என்ற நம்பிக்கை அவர்களுக்கு வளரும். இந்த நம்பிக்கை தான் அவர்களது வாழ்க்கை. அந்த நம்பிக்கையை நாம் உங்களது பெரும் உதவியோடு தாராளமாக ஏற்படுத்தியுள்ளோம். அதனைத் தொடர்ந்து செய்வதற்கு எம்மோடு இணையுங்கள்.

எங்கள் இனத்திற்காக - எங்கள் வாழ்வுக்காக மரணித்த அந்த மக்களின் பிள்ளைகளை - மாவீரர்களின் குழந்தைகளை பட்டினியால் வதைக்கலாமோ? ஒரு கணம் சிந்தியுங்கள் உறவுகளே! அந்தப் பிள்ளைகளின் பெற்றோரின் உயிர்த் தியாகம் தான் இங்கு எங்களது வாழ்வுக்கு வழி கோலியது என்பதை ஒரு கணம் சிந்திப்போமாக.

தர்மம் தலை காக்கும்" "கோடி புண்ணியம் தேடி வரும். ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் பார்க்க உங்கள் பெயரால் பசியாறும் அந்தக் குழந்தைகளின் வாழ்த்து உங்களை ஆசீர்வதிக்கும்.

06 ஆகஸ்ட் 2022 முதல் 12 ஆகஸ்ட் 2022 வரையான நாட்களில் உணவுக்கு உதவியவர்களின் நிகழ்வின் தொகுப்பு 11ம் பக்கத்தில் உள்ளது.

கனடியத் தமிழ் சமூகத்தின் மகத்தான ஆதரவோடு கடந்த 2021 செப்டம்பர் முதல் 10வது ஆண்டில் எமது அறப்பணி தொடர்கிறது என்ற மகிழ்வான செய்தியை உங்களுடன் பகிர்ந்து கொள்ளுகின்றோம்.

மேலதிக விபரங்களுக்கு:-

ஈழநாடு பரமேஸ் 416 841 9600

## 1வது ஆண்டு நினைவஞ்சலி



### DR முத்துவேலு சபாரெத்தினம்

யாழ். தாவடியைப் பிறப்பிடமாகவும் கொக்குவிலைப் வதிவிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த டாக்டர் முத்துவேலு சபாரெத்தினம் அவர்களது முதலாவது ஆண்டு நினைவு நாள் 13 ஆகஸ்ட் 2022 சனிக்கிழமையாகும். அன்றைய நாளில் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கவுள்ளார்கள். டாக்டர் முத்துவேலு சபாரெத்தினம் அவர்களது ஆத்மா சாந்தியடைப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் இணைந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 1வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு இராஜதுரை ஈஸ்வரபாதம்

வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த முன்னாள் அஞ்சல் நிலைய உத்தியோகத்தர் திரு இராஜதுரை ஈஸ்வரபாதம் அவர்களது முதலாவது ஆண்டு நினைவு நாள் 18 ஆகஸ்ட் 2022 வியாழக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கவுள்ளார்கள். திரு இராஜதுரை ஈஸ்வரபாதம் அவர்களது ஆத்மா சாந்தியப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் இணைந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 31வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு குமாரசாமி துரைராசா

புங்குடுதீவு 3ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வதிவிடமாகவும் கொண்டிருந்த திரு குமாரசாமி துரைராசா அவர்களது 31வது ஆண்டு நினைவு நாள் 05 ஆகஸ்ட் 2022 வெள்ளிக்கிழமையாகும். அன்றைய நாளில் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு குமாரசாமி துரைராசா அவர்களது ஆத்மா சாந்தியடைப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் இணைந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 1வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு துரைராஜா ரவீந்திரன் (துரைரவி)

புங்குடுதீவு 7ம் வட்டாரம் மடத்துவெளியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திரு துரைராஜா ரவீந்திரன் அவர்களது முதலாம் ஆண்டு நினைவு நாள் 06 ஆகஸ்ட் 2021 சனிக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு துரைராஜா ரவீந்திரன் அவர்களின் ஆத்மா சாந்தியடைய ஆண்டவனைப் பிரார்த்திக்கும் அன்னாரின் குடும்பத்தினருடன் அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் இணைந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 1வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு நன்னித்தம்பி தயாசீலன்

அச்சுவேலி தோப்பைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வாழ்விடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திரு நன்னித்தம்பி தயாசீலன் (சீலன்) அவர்களது முதலாமாண்டு நினைவு நாள் 08 ஆகஸ்ட் 2022 திங்கட்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். அமரர் திரு நன்னித்தம்பி தயாசீலன் அவர்களது ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும் அவரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.


## 31ம்நாள் நினைவஞ்சலி



### திரு பாலசுந்தரம் இராமலிங்கம் (இளைப்பாறிய ஆசிரியர்)

சுதுமலை வடக்கைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த இளைப்பாறிய ஆசிரியர் திரு பாலசுந்தரம் இராமலிங்கம் அவர்களது 31ம்நாள் நினைவு நாள் 06 ஆகஸ்ட் 2022 சனிக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். அமரர் பாலசுந்தரம் இராமலிங்கம் அவர்களது ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும் அவரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.


# அன்பு இல்லக் குழந்தைகளுக்கு கடந்த வாரம் உணவளித்து அவர்களின் தாயுமாகி தந்தையுமாகிய கனடா வாழ் கருணையாளர்கள்




05 ஆகஸ்ட் 2022 வெள்ளிக்கிழமை புங்குடுதீவு 3ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வதிவிடமாகவும் கொண்டிருந்த திரு குமாரசாமி துரைராஜா அவர்களது 31வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றைய தினம் அன்னாரது நினைவாக அவரது குடும்பத்தினர் அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.




06 ஆகஸ்ட் 2022 சனிக்கிழமை புங்குடுதீவு 7ம் வட்டாரம் மடத்துவெளியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திரு துரைராஜா ரவீந்திரன் (துரை ரவி) அவர்களது முதலாவது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது நினைவாக அவரது குடும்பத்தினர் பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




06 ஆகஸ்ட் 2022 சனிக்கிழமை சுதுமலை வடக்கைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த இளைப்பாறிய ஆசிரியர் திரு பாலசுந்தரம் இராமலிங்கம் அவர்களது 31ம் நாள் நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது நினைவாக அவரது குடும்பத்தினர் அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




07 ஆகஸ்ட் 2022 ஞாயிற்றுக்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி சோமநாத் துர்க்கா தம்பதிகளின் செல்வப்புதல்வி ஜெசியா சோமநாத்தின் 5வது பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் செல்வி ஜெசியா தனது பெற்றோர்கள் சகோதரங்களுடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளுக்குச்சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.





08 ஆகஸ்ட் 2022 திங்கட்கிழமை அச்சுவேலி தோப்பைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வதிவிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு நன்னித்தம்பி தயாசீலன் (சீலன்) அவர்களது முதலாவது ஆண்டு நினைவு நாளாகும். அன்றைய தினம் அன்னாரது நினைவாக அவரது குடும்பத்தினர் பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




09 ஆகஸ்ட் 2022 செவ்வாய்க்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி சங்கர் ஜெலியா தம்பதிகளின் செல்வப்புதல்வன் டெல்ரன் ரஞ்சித் சங்கரின் மூன்றாவது பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் செல்வன் டெல்ரன் ரஞ்சித் சங்கர் தனது பெற்றோர்கள் சகோதரங்களுடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச்சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.

## மூன்றாவது பிறந்த நன்நாள் வாழ்த்து



### செல்வன் டெல்ரன் ரஞ்சித் சங்கர்

கனடாவில் வசிக்கும் திரு திருமதி சங்கர் ஜெலியா தம்பதிகளின் செல்வப்புதல்வன் டெல்ரன் ரஞ்சித் சங்கரின் மூன்றாவது பிறந்த நன்நாள் 09 ஆகஸ்ட் 2022 செவ்வாய்க்கிழமையாகும். அன்றைய தினம் தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாட வுள்ள செல்வன் டெல்ரன் ரஞ்சித் சங்கர் தனது பெற்றோர்கள், பேரன் பேத்திமாரோடு இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளுக்கும் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார். அகவை மூன்று காணும் செல்வன் டெல்ரன் பல்கலையும் கற்றுப் பல்லாண்டு வாழ்கவென வாழ்த்தும் அவரது பெற்றோர்கள், உற்றார், உறவினர்களுடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு வாசகர்களும் வாழ்த்து கின்றார்கள். வாழ்க வளமுடன்!

கோலாகல இசைமழையுடன்
ஓர் நூல் வெளியீடு....

திறந்த வெளியரங்கில் மாலை 5 மணிமுதல்
உலகத் தமிழர்களின் அன்பு அறிவிப்பாளர்
B.H.அப்துல் ஹமீத்
அவர்கள் எழுதிய
வானலைகளில் ஒரு வழிப்போக்கன்
(இது வானொலி வரலாற்றின் ஆவணப் பதிவு)
நூல் வெளியீடு.


S.K.ராஜன்

DATE : AUGUST-12
PLACE : MARKHAM MEADOW
8100 STEELS AVE


மதுமிதா

உங்கள் அபிமானத்துக்குரிய இந்திய – கனேடியக் கலைஞர்கள்
வழங்கும்.....
ஆடலும் – பாடலும் இணைந்த
கலைவிருந்தும் உண்டு.
அழைப்பிதழ்
திரு / திருமதி......................................
அன்புடையீர்!
உலகெங்கும் வாழும் தமிழ் மக்களது அன்புக்குரிய
அறிவிப்பாளர்
திரு. B.H.அப்துல் ஹமீத் அவர்கள் எழுதிய
'வானலைகளில் ஒரு வழிப்போக்கன்'
எனும் வானொலி வரலாற்று
ஆவணப் பதிவு நூல் வெளீடு,
எதிர் வரும் ஆகஸ்டு 12 மாலை 5 மணிக்கு
ஆடல்–பாடல் கலைநிகழ்வுகளோடு
நடைபெறும் இந்நிகழ்வில்
கலந்து கொள்ளவருமாறு
உங்களை அன்புடன் அழைக்கிறோம்.

அனுமதி இலவசம்! தமிழோசை – சினி மீடியா!!
416 5563219

# வீடு மற்றும் வாகன காப்புறுதி
# HOME & AUTO INSURANCE

வீடு HOME
வாகனம் AUTO
மோட்டர் சைக்கிள் MOTOR CYCLE
படகு BOAT
கனரக வாகனம் TRAILER

காப்புறுதித் தேவைகளுக்கும், விபரங்களுக்கும் அழையுங்கள்





TR
FORTUNE FAVOURS THE BOLD

CALL NOW FOR A QUOTE!
THUSHANTHAN RAVINDRAN
647-401-2653



Chapel Ridge
FUNERAL HOME
& CREMATION CENTRE

## Serving the Tamil Community
OF GREATER TORONTO

உங்கள் உறவொன்றை பிரிந்து தடுமாறும் வேளையில் இறுதி நிகழ்வுகள் பற்றிய கவலை உங்களுக்கு வேண்டாம். அனுபவத்துடன் கூடிய அன்பான சேவையை வழங்குகின்றோம்.

## *At Need Funeral Arrangements*

We provide a full range of service to families who have experienced a loss of a loved one, including:

- *Vistation*
- *Funeral & Memorial Service*
- *Reception*
- *Burial* • *Cremation*



**Vilosanan Sivatharman**
Funeral Director
416-993-0826

மார்க்கம், மற்றும் மிசிசாகா நகரங்களில் எமது சேவை



**Christeen Seevaratnam**
416-258-6759

இறுதிச் சடங்கை நடத்துவதற்கான செலவை முன்கூட்டியே திட்டமிடலாமா?

## *Pre-Arranging: A Wise Choice...*

**FINANCIAL BENEFITS**
- Lock in the cost at today's prices
- Convenient time payments
- Insured against early death

**EMOTIONAL BENEFITS**
- Letting your family know your wishes
- Peace of mind to you & your family
- Relieve the added stress & burden

8911 Woodbine Ave, Markham , ON, L3R 5G1 • www.chapelridgefh.com • Email: info@chapelridgefh.com

உ
சிவமயம்

# அருள்மிகு ரொறன்ரோ திருச்செந்தூர் முருகப்பெருமான் ஆலய
## சுபகிருது வருட மகோற்சவ விஞ்ஞாபனம் - 2022



சகலவளங்களும் ஒருங்கே அமையபெற்ற ஒன்ராறியோ மாகாண நோர்த் யோர்க் நகரத்தில் கோவில் கொண்டு வேண்டுவோருக்கு வேண்டும் வரத்தை அள்ளிக் கொடுக்கும் திருச்செந்தூர் முருகனுக்கு நிகழும் சுபகிருது வருடம் ஆடிமாதம் 20ஆம் நாள் 04/08/2022 வியாழக்கிழமை சுக்லபட்ச ஷப்தமி திதியும் சுவாதி நட்சத்திரமும் கூடிய சுபயோக சுபதினத்தில் கொடியேற்றத்துடன் பதினொரு தினங்கள் பிரமோற்சவம் நடைபெற திருவருள் கைகூடியுள்ளது. பக்தர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொண்டு எம்பெருமான் திருவருளை பெற்றுய்யுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

### துவஜாரோகணம் (கொடியேற்றம்)
காலை 7:00 மணிக்கு கும்பபூஜை
9:00 மணிக்கு விஷேடபூஜை
9:30 மணிக்கு வசந்த மண்டப பூஜை
11:00 மணிக்கு துவஜாரோகணம் (கொடியேற்றம்)
04-08-2022 வியாழக்கிழமை

### தேர்த்திருவிழா
13-08-2022 சனிக்கிழமை காலை
5:00 மணிக்கு ஆலய பூஜை 05:30 மணிக்கு கும்பபூஜை
07:00 மணிக்கு விஷேட பூஜை
8:00 மணிக்கு வசந்தமண்டப பூஜை
நண்பகல் 10:00 மணிக்கு இரத ஆரோகணம்
13-08-2022 சனிக்கிழமை

| | | | |
|---|---|---|---|
| கொடியேற்றம் | 04-08-2022 வியாழக்கிழமை | சப்பறம் | 12-08-2022 வெள்ளிக்கிழமை |
| தேர்த் திருவிழா | 13-08-2022 சனிக்கிழமை | தீர்த்தம் | 14-08-2022 ஞாயிற்றுக்கிழமை |
| பூங்காவனம் | 15-08-2022 திங்கட்கிழமை | வயிரவர் மடை | 16-08-2022 செவ்வாய்க்கிழமை |

### உற்சவகால பூஜை நேரங்கள்

காலை
08:00 மணிக்கு ஆலய பூஜை
08:30 மணிக்கு சங்கல்ப்பம், கும்பபூஜை, அபிஷேகம்
10:00 மணிக்கு ஆலய பூஜை
11:30 மணிக்கு வசந்தமண்டப பூஜை

மாலை
05:30 மணிக்கு அபிஷேகம்
07:00 மணிக்கு ஆலய பூஜை
08:00 மணிக்கு வசந்தமண்டப பூஜை

இங்ஙனம் ஆலய அறங்காவலர் சபை

மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்

# ரொறன்ரோ திருச்செந்தூர் முருகன் ஆலயம்
# Toronto Thiruchendur Murugan Temple
19 Penn Dr, North York, ON M9L 2A7. Tel: 416-744-9568

சுபம்

# SASITHARAN LAW
PROFESSIONAL CORPORATION



**Vivekananthan Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*



**Rajabalini Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*

## Sasitharan Law Professional Corporation
**10 Milner Business Court, Suite 709, (Markham & Milner),**
**Scarborough ON M1B 3C6**
Tel: **416.949.0404** / Fax: **416.948.0303** • **info@sasilaw.ca** • **www.sasilaw.ca**

### Real Estate
- Residential & Commercial: *Purchases, Sales*
- Mortgages & Refinances

### Family Law
- Divorce
- Custody & Support

### Estate Law
- Power of Attorney
- Wills & Estate Administration

### Immigration Law
- Skilled Migration
- Provincial Nominee Program
- Super Visa and Sponsorship

### Business Law
- Incorporations
- Purchases
- Sales & Leases



Mahindan Mailvaganam, B.Sc., M.Sc.
Senior Insurance Specialist
Elite Field Sales Advisor
RBC Insurance
WOODSIDE SQUARE MALL (McCowan & Finch)
1571 Sandhurst Circle
Scarborough, ON M1V 1V2
mahindan.mailvaganam@rbc.com
Cell: 416-262-4973

- Universal Life Insurance
- Term (10 to 40 years) Insurance
- Term 100
- Non Medical Insurance
- Critical Illness Insurance
- Disability Insurance
- Travel Insurance
- RRSP
- TFSA

உங்கள் வாகனத்தின் மாதாந்த காப்புறுதி கட்டணம் அதிகரிக்கப்பட்டிருந்தால் எமது காப்புறுதி ஆலோசகர்களால் உங்களுக்கு உதவ முடியும்!

RBC Insurance
Life | Health | Auto | Home | Travel | Wealth

Friends MATRIMONY

**உங்கள் திருமணத் தேடலுக்கோர் முற்றுப்புள்ளி...**

10,000க்கு மேற்பட்ட வரன்கள் கையிருப்பில்! 10,000+

**இலங்கைத் தமிழர்களுக்கான உலகளாவிய திருமண இணையத்தளம்.**



**மணமகன் தேவை**
கனடாவில் வசிக்கின்ற 29 வயது வேளாளர், Bachelors degree, Accountant மணமகளுக்கு பொருத்தமான வரனை எதிர் பார்க்கின்றோம்.

**மணமகன் தேவை**
கனடாவில் வசிக்கின்ற 29 வயது Mixed வேளாளர், Bachelors degree, Teacher மணமகளுக்கு பொருத்தமான வரனை எதிர் பார்க்கின்றோம்.

**மணமகன் தேவை**
கனடாவில் வசிக்கின்ற 31 வயது வேளாளர், Bachelors degree, Senior Auditor மணமகளுக்கு பொருத்தமான வரனை எதிர் பார்க்கின்றோம்.

- 416 477 6854
  416 477 2259
  647 709 1536
- GTA Square- 5215 Finch Ave. E. Unit 257
- friendsmatrimonym@gmail.com

Mon to Fri
10AM to 7PM
Sat
1PM to 7PM

www.friendsmatrimony.com

# பிசு பிசுத்துப் போன 9ம் திகதிப் போராட்டம்

ஒன்பதாம் திகதியும் மக்கள் தெருவில் இறங்குவார்கள் என்ற தொனிப்பட சரத் பொன்சேகா எச்சரித்திருந்தார். அவர் அவ்வாறு கூறியதை அரகலயக்காரர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. சரத் பொன்சேகா அரகலயவை ஹைஜாக் பண்ணப் பார்க்கிறார் என்று ஒரு குற்றச்சாட்டு எழுந்தது.

இந்நிலையில் 9ம் திகதி இடம் பெற்ற ஆர்ப்பாட்டத்தில் பெருமளவிலான மக்கள் கலந்து கொள்ளவில்லை. இதனால் போராட்டம் பிசுபிசுத்துப் போனது. காரணம் என்ன என்பதை போராட்டத்திற்கு முன்பே விபரித்திருந்தார் ஆய்வாளர் நிலாந்தன்.

கடந்த மூன்று மாத காலத்துக்கும் மேலான மக்கள் எழுச்சிகளின் போது ஒவ்வொரு ஒன்பதாம் திகதியும் அரசியல் வாதிகளுக்கு குறிப்பாக ராஜபக்ச குடும்பத்துக்கும் அவர்களுடைய ஆதரவாளர்களுக்கும் கெட்ட நாட்களாகக் காணப்பட்டன. இந்த அரசியல் எண்கணிதத் தர்க்கத்தின்படி வரும் ஒன்பதாம் திகதியும் அரசியல்வாதிகளுக்கு கெட்ட நாளாக அமையுமா? என்ற கேள்வி எழுந்தது.

அந்த ஆபத்தை எதிர்கொள்ளும் தற்காப்பு முறியடிப்பு நடவடிக்கைகளில் ரணில் ஏற்கனவே இறங்கி விட்டார். அரகலயவை ஒடுக்கும் நடவடிக்கைகளை ரணில் இரு முனைகளில் முன்னெடுக்கிறார். ஒரு முனை. அரகலய தோன்றக் காரணமாக இருந்த பொருளாதார நெருக்கடியைத் தற்காலிகமாகவேனும் தணிப்பது. இரண்டாவது. அரகலயச் செயற்பாட்டாளர்களை தொடர்ச்சியான அச்சுறுத்தலுக்குள் வைத்திருப்பது.

முதலாவது முனையில் கடந்த சில வாரங்களுக்குள் ரணில் விக்ரமசிங்க பின்வரும் விடயங்களைச் செய்திருக்கிறார். முதலாவது. மின்வெட்டு நேரத்தை குறைத்துக் கொண்டு வருவது. இரண்டாவது தலைநகரில் எரிவாயு விநியோகத்தை வழமைக்கு கொண்டு வந்தது. ஏனைய நகரங்களிலும் எரிவாயு விநியோகம் சீராகி வருகிறது. மூன்றாவது. வரிசையில் நின்றால் எரிபொருள் கிடைக்கும் என்ற நம்பிக்கையை ஏற்படுத்தியது. கியூ ஆர் கோட் முறைமைக்குள் எரிபொருள் ஒப்பீட்டளவில் கிடைக்கக்கூடியதாக இருப்பது. நாலாவது. பொருட்களின் விலைகளைப் படிப்படியாகக் குறைத்து வருவது. ஐந்தாவது. அரகலயவின் கோரிக்கையான நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி முறைமையை பலவீனப்படுத்தும் விதத்தில் 22வது திருத்தத்திற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது. ஆறாவது. சர்வ கட்சி அரசாங்கம் ஒன்றை உருவாக்கப் போவதாக அறிவித்திருப்பது.

மேற்கண்ட நடவடிக்கைகள் யாவும் அரகலய தோன்றக் காரணமாக இருந்த அம்சங்களை அகற்றுவது என்ற அடிப்படையில் முன்னெடுக்கப்படுகின்றன. குறிப்பாக.அரகலயவை ஆதரித்த சிங்கள படித்த நடுத்தர வர்க்கத்தின் கஷ்டங்களையும் பயங்களையும் போக்குவது. இது முதலாவது முனை.

இரண்டாவது முனையில் அரகலய செயற்பாட்டாளர்களை அச்சுறுத்தும் நடவடிக்கைகளை தீவிரப்படுத்துவது. கடந்த ஒரு வாரத்துக்குள் மட்டும் இரண்டு பிணங்கள் காலிமுகத்திடலில் கரையொதுங்கின. அரகலய தொடங்கி இதுவரையிலும் இவ்வாறு ஆறு பிணங்கள் கரை ஒதுங்கியுள்ளன. இது முதலாவது.

இரண்டாவது. தென்னிலங்கையில் பரவலாக துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் நடக்கின்றன. இதில் கடந்த இரு மாதகாலப் பகுதிக்குள் 23பேர் கொல்லப்பட்டுள்ளார்கள். மூன்றாவது. அரகலய செயற்பாட்டாளர்கள் உதிரி உதிரியாகக் கைது செய்யப்படுவது. அவர்களில் சிலருக்கு நாட்டை விட்டு வெளியேறத்



தடை விதித்திருப்பது. ஆசிரியர் தொழிற்சங்கத் தலைவரான ஸ்டாலினைக் கைது செய்யப்பட்டிருக்கிறார். தொழிற் சங்கங்கள் அரகலயவை தூக்கிநிறுத்தக் கூடாது என்று ரணில் சிந்திக்கிறார். நாலாவது. அரகலயவின் பின்னணியில் நிற்பதாக கருதப்படும் முன்னிலை சோசலிசக் கட்சியின் அலுவலகம் போலீசாரால் சோதனை இடப்பட்டுள்ளது. நாலாவது. கோட்டாகோகம கிராமத்தின் பருமனைக் குறைப்பது.அக்கிராமம் நாடு முழுவதுக்குமான அரகலயவின் குறியீட்டு மையம் ஆகும். அரசுக்கு எதிராக ஒரு போராட்டம் தொடர்ச்சியாக நடப்பதை வெளியுலகத்துக்கு உணர்த்தும் ஒரு செயற்பாடாக அது காணப்பட்டது. ரணில் இப்பொழுது அதைச் சிறிதாக்கி வருகிறார்.அங்கே இப்போது நூற்றுக்கும் குறைவானவர்களே காணப்படுகிறார்கள்.

மேற்கண்ட நடவடிக்கைகளின் மூலம் ரணில் விக்ரமசிங்க அரகலயவை குறிப்பிடத்தக்க அளவிற்கு முறியடித்திருப்பதாகவே தோன்றுகிறது. அரகலயவின் முன்னனிச் செயற்பாட்டாளர்கள் பலர் தலை மறைவாகியிருப்பதாகக் கருதப்படுகிறது. அரகலயவின் தொடக்கத்தில் இருந்து அதை ஆதரித்து வந்த மேற்கு நாட்டுத் தூதரகங்கள் இப்பொழுது கைது நடவடிக்கைகளை கடுமையான வார்த்தைகளால் கண்டிப்பதில்லை. கைது நடவடிக்கைகளுக்கு எதிராக பார் அசோசியேஷன் -சட்டத்தரணிகள் அமைப்பு-முன்னரைப் போல பலமான எதிர்ப்பைக் காட்டவில்லை.


கோத்தாபய அகற்றப்படும் வரையிலுமான பேராட்டக்களத்தில் ஆர்ப்பாட்டக்காரர்களைப் பாதுகாப்பதில் சட்டத்தரணிகளின் சங்கம் பெரிய பங்களிப்பை நல்கியது. ஒருநாட் காலை காலிவீதியில் போலீஸ் வாகனத் தொடரணியொன்று காணப்பட்டது. போராட்டக்காரர்கள் மீது தாக்குதல் நடத்தும் நோக்கத்தோடு அவ்வாறு அந்த வாகனத் தொடரணி நிறுத்தப்பட்டதாக சந்தேகிக்கப்பட்டது. அதற்கு எதிராக சட்டத்தரணிகள் சங்கம் ஆட்சேபணை தெரிவித்தது. பின்னர் அந்த வாகனப்பேரணி நீக்கிக் கொள்ளப்பட்டது. காலிமுகத்திடலில் போலீஸ் மற்றும் படைத்தரப்பிடமிருந்து போராட்டக்காரர்களை பாதுகாப்பதற்காக சட்டத்தரணிகளும் மதகுருகளும் கைகளை கோர்த்தபடி மனிதச் சங்கிலி அமைத்துக் கவசமாக நின்ற காட்சிகளும் உண்டு. கோத்தாபய அகற்றப்படுவதற்கு முன்பு வரை அரகலய செயற்பாட்டாளர்கள் கைது செய்யப்படும் போதெல்லாம் சட்டத்தரணிகள் நூற்றுக்கணக்கில் நீதிமன்றங்களில் குவிந்தார்கள். மீரிஹான சம்பவத்தின் பின்னரான கைது நடவடிக்கைகள் உட்பட சில கைது நடவடிக்கைகளின் போது 300க்கும் குறையாத சட்டத்தரணிகள் அவ்வாறு திரண்டுநின்று செயற்பாட்டாளர்களை பாதுகாத்தார்கள்.

ஆனால் இதுவெல்லாம் கோத்தா அகற்றப்பட முன்னரான கதைகள்.ரணில் வந்த பின்னரான கதைகள் வேறு.போராட்டத்தில் முன்னணியில் நின்ற மதகுரு அச்சுறுத்தலுக்கு ஆளாகியுள்ளார்.பல செயற்பாட்டாளர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். சட்டத்தரணிகள் சங்கம் அவர்களை பாதுகாப்பதற்கு முன்னரைப் போல ஒன்றிணைந்து தீவிரமாகச் செயல்படுவதாகத் தெரியவில்லை.

கைது செய்யப்படுவோர் வெவ்வேறு நீதிமன்றங்களில் பரவலாக முற்படுத்தப் படுத்தப் படுவதால்.சட்டத்தரணிகள் அவ்வாறு திரளமுடியவில்லை என்று ஒரு காரணம் கூறப்படுகிறது. எனினும் கொழும்புமைய சட்டத்தரணிகள் அமைப்பு பெருமளவுக்கு யூ என்பிக்கு ஆதரவானது என்று கருதப்படுகிறது. மேலும் அரகலயவோடு தொடக்கத்திலிருந்தே இளம் சட்டத்தரணிகள் அமைப்புத் தான் அதிகம் நெருக்கமாக காணப்பட்டது என்றும் அவதானிக்கப்பட்டுள்ளது

மேலும் கைது செய்யப்படுவோரில் தனிப்பட்ட மற்றும் பொதுச் சொத்துக்களை நாசம் செய்த குற்றச்சாட்டுக்கு இலக்கான வர்களின் விடயத்தில் நீதிமன்றங்களில் வாதிடுவதற்கு சில இளம் சட்டத்தரணிகள் மட்டுமே தயாராக காணப்படுவதாகவும் ஒரு தகவல் உண்டு. அவை அரகலயவின் நிகழ்ச்சி நிரலுக்கு உட்படாத வன்முறைகள் என்று கருத்தும் ஒரு பகுதி சட்டத்தரணிகளும் உண்டு. அதாவது சட்ட மறுப்பை சட்டக்கண் கொண்டு பார்ப்பது.

ஒரு மக்கள் எழுச்சியின் போது இடம் பெற்ற சம்பவங்களை சட்டக்கண் கொண்டு பார்க்க முடியாது. ஏனென்றால் எல்லா மக்கள் எழுச்சிகளும் சட்ட மறுப்பாகத்தான் தோன்றுகின்றன.எனவே ஒரு மக்கள்திரளின் சட்டமறுப்பு நடவடிக்கையை சட்டத்தின் தராசில் வைத்து நிறுக்க முடியாது. அதை ஒரு சட்டப் பிரச்சினையாக வியாக்கியானம் செய்யவும் முடியாது.அது ஓர் அரசியல் பிரச்சினை.ஆனால் ரணில் விக்ரமசிங்க அதனை சட்டத்தின் தராசில் வைத்து நிறுக்கிறார்.அதற்கு எதிராக சட்டத்தரணிகள் அமைப்பு பலமான எதிர்ப்பை காட்டவில்லை.



கட்டுரையாளர்:
யாழ்ப்பாணத்தில் இருந்து
- நிலாந்தன் -

அதைச் சட்ட விவகாரமாகச் சுருங்குவது ஒருவிதத்தில் ரணில் வைத்த பொறிக்குள் சென்று விழுவதுதான்.

சட்டத்தரணிகள் மட்டுமல்ல. எதிர்க்கட்சி அரசியல்வாதிகள் மத்தியிலும் குறிப்பாக சஜித் அணியினர் மத்தியிலிருந்தும் மேற்படி கைது நடவடிக்கைகளுக்கு எதிராக வலிமையான எதிர்ப்புக் காட்டப் படவில்லை. இந்த விடயத்தில் எல்லா அரசியல்வாதிகளும் ஒரு வர்க்கமாக நின்று சிந்திக்கிறார்கள். நாடாளுமன்ற உறுப்பினர்களின் சொத்துக்களை அழித்த. வீடுகளை எரித்த நடவடிக்கைகளில் சம்பந்தப்பட்டவர்களை பாதுகாப்பதற்கு எதிர்க்கட்சிகளின் மத்தியிலும் பெரியளவு ஆர்வம் காட்டப்படவில்லை.

இவ்வாறான ஒரு அரசியல் சூழலில் ரணில் விக்கிரமசிங்க அரகலயவை அதன் ஆதரவுத்தளங்களில் இருந்து பெருமளவுக்கு தனிமைப்படுத்தி வருகிறார் என்று தோன்றுகிறது. இந்த அடிப்படையில் தொகுத்துக் கணித்தால் வரும் ஒன்பதாம் திகதி மாபெரும் எழுச்சி ஒன்றுக்கான வாய்ப்புகளைத் தடுப்பதற்காக ரணில் கடுமையாக உழைக்கிறார்.

அரகலயக்காரர்கள் கூறுகிறார்கள் தற்பொழுது போராட்டம் ஓய்ந்து போய் விட்டதான ஒரு தோற்றம் வெளித் தெரிவது உண்மைதான் என்று. ஆனால் அரகலயவின் பேரெழுச்சிகளை தொகுத்துப் பார்த்தால் இடைவெளிகள் விட்டு மக்கள் குறிப்பிட்ட தினங்களில் தெருக்களில் லட்சக்கணக்கில் திரண்டு வந்தார்கள். இப்பொழுதும் அரகலய சோர்ந்து போய் விட்டதாக தோன்றினாலும் அது மறுபடியும் ஒருநாள் மக்களைத் வீதிகளுக்குக் கொண்டு வரும் என்று அவர்கள் கூறுகிறார்கள்.

மஹிந்தவை அகற்றியது அரகலய -1.0 என்றும் .பசிலை அகற்றியது அரகலய-2.0 என்றும்.கோட்டாவை அகற்றியது அரகலய-3.0 என்றும். இனி ரணிலை அகற்றுவதும் முறைமையை மாற்றுவதும் அரகலய-4.0 என்றும் அவர்கள் அழைக்கிறார்கள்.

ஆனால் கடந்த மூன்று மாத காலத்துக்கும் மேலான தென்னிலங்கை அரசியற் களத்தைத் தொகுத்துப் பார்த்தால். தெளிவான ஒரு பிரிகோட்டைக் காண முடிகிறது. கோத்தாவுக்கு முன் கோத்தாவுக்கு பின் என்பதே அது. கோத்தாவுக்கு பின்னரான அரகலய பெருமளவுக்கு தனிமைப்படுத்தப் பட்டிருக்கிறது. சோர்ந்து போய்க் காணப்படுகிறது. கைது நடவடிக்கைகளுக்கு எதிராக அண்மைய வாரங்களில் ஒழுங்கு செய்யப்படும் போராட்டங்கள் பேரெழுச்சிகளாக அமையவில்லை.

ஒன்பதாந் திகதியும் அரசியல்வாதிகளுக்கு ஒரு கெட்ட நாளாக மாறுவதைத் தடுக்க ரணில் முயற்சித்தார். 69 லட்சம் வாக்குகளால் வெற்றி பெற்ற ராஜபக்சக்களைத் துரத்திய ஒரு போராட்டத்தை, சுமார் 30.000 வாக்குகள் பெற்ற ஒருவர் முறியடிக்கப் போகிறாரா? என்ற ஒன்பதாம் திகதி பற்றிய அரசியல் எண் கணிதத்தைப் பொய்யாக்குவதில் ரணில் வெற்றி பெற்றுள்ளார் என்பதே யதார்த்தமாகும்.

# இலக்கு வைக்கப்படும் திருக்கோணேஸ்வரம் காப்பாற்றுவார்களா தமிழ்த் தலைவர்கள்?

**கட்டுரையாளர்:**
**ஈழநாட்டிற்காக யாழ்ப்பாணத்தில் இருந்து**
**– பார்த்தீபன் –**

ஈழத் தமிழர்களின் தலைநகராகக் கருதப்படும் திருகோணமலையில் உள்ள வரலாற்றுப் பிரசித்தி பெற்ற திருக்கோணேஸ்வரம் கோவிலின் ஆபத்தான நிலை தொடர்பில் ஆறு.திருமுருகன் அறிக்கை ஒன்றின் மூலம் அனைவரது கவனத்துக்கும் கொண்டு வந்திருக்கின்றார். இவ்விடயத்தில் தமிழ் மக்களின் பிரதிநிதிகள் உடனடியாகச் செயற்படா விட்டால், திருக்கோணேஸ்வரம் முற்று முழுதாக சிங்கள மயமாக்கப்பட்டு விடும் ஆபத்தை எதிர்கொண்டிருக்கின்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனைப் பிரதிநிதித்துவப் படுத்தும் பகுதியாகத் தான் திருமலை உள்ளது. ஆனால், வயது முதிர்ச்சி மற்றும் சுகவீனம் காரணமாக கொழும்பிலேயே பெருமளவுக்குத் தங்கியிருக்கும் சம்பந்தன் இந்த விவகாரத்தில் எந்த வகையிலும் சம்பந்தப்படுவதில்லை என தமிழரசுக் கட்சியின் பிரமுகர்கள் சிலரே குற்றஞ் சாட்டுகின்றார்கள். திருமலையை முற்றுமுழுதாக சிங்கள மயப்படுத்துவதற்கான நிகழ்ச்சி நிரலுடன் அரச இயந்திரம் தீவிரமாகச் செயற்பட்டு வரும் நிலையில், அதற்கு எதிராக களத்தில் நின்று போராடக்கூடிய தமிழ்த் தலைவர்கள் யாரும் இல்லை என்பது தமிழர்களைப் பொறுத்தவரையில் மிகப்பெரிய பலவீனம்.



வரலாற்றுப் பிரசித்தி பெற்ற திருக்கோணேஸ்வரர் ஆலயத்தின் அபிவிருத்திப் பணிகளுக்குத் தொல்லியல் திணைக்களம் முட்டுக் கட்டையாக இருப்பதுடன் தற்போது அவர்களின் அனுமதியுடன் சுற்றாடலில் சிங்களவர்கள் தற்காலிகக் கடைகளை நிரந்தரமாக்குகின்ற செயற்பாடுகளும் கனகச்சிதமாக மேற் கொள்ளப்படுகின்றன. தமிழ்த் தலைமைகளின் பலவீனத்தை இவர்கள் தமக்கு சாதகமாகப் பயன்படுத்திக் கொள்கின்றார்கள்.

சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த சைவத் திருக்கோவிலாகிய திருக்கோணேஸ்வர ஆலயத்துக்குச் செல்லும் வழியில் 2009 இற்குப் பின் அவசர அவசரமாக வீதியின் இரு மருங்கிலும் இரத்தினபுரியைச் சேர்ந்தவர்கள் எந்த உத்தரவும் இன்றி தற்காலிக கடைகளை அமைத்தனர். அந்தக் கடைகள் தற்போது பெருமளவுக்கு அதிகரித்து விட்டன. இந்தக் கடைகள் அமைப்பவர்களுக்கும் திருக்கோணேஸ்வரக் கோயிலுக்கும் எவ்வித தொடர்பும் கிடையாது. திட்டமிட்டு ஆலயச் சூழலை ஆக்கிரமிப்பது போல் இந்தக் கடைகள் அமைக்கப்பட்டன.

இது தொடர்பாக திருக்கோணேஸ்வர நிர்வாகம் பல இடங்களிலும் முறைப்பாடு செய்த போதிலும் எவ்வித பலனும் கிட்டவில்லை. தற்போது திருக்கோணேஸ்வரம் செல்லும் பாதைக்கு அருகில் கோவில் சம தரையில் இவர்களுக்கு நிரந்தரக் கட்டடம் அமைக்க தொல்லியல் திணைக்களம் திட்டமிட்டு வருகிறது.

கடந்த வாரம் தொல்லியல் திணைக்களத்தால் திருக்கோணேஸ்வர ஆலய நிர்வாகசபை தலைவரும் செயலாளரும் அழைக்கப்பட்டு தெருவோரம் வர்த்தகம் செய்வோருக்கு கோவிலுக்கு சமீபமாக நிரந்தர கட்டடம் அமைக்க தங்கள் தொல்லியல் திணைக்களம் அனுமதி அளித்துள்ளதாகவும் அதற்கு ஆலயம் சம்மதம் தெரிவிக்க வேண்டும் எனவும் வலியுறுத்தியுள்ளனர். கடந்த சில வருடங்களாக தொல்லியல் திணைக்களம் கோணேஸ்வரர் ஆலய திருப்பணி வேலைகளைத் தடுத்து வருவதை அனைவரும் அறிவர்.

தேரோடும் வீதியை அகலிக்கத் தடுத்தனர் அழிந்து போன அன்னதான மடத்தை விஸ்தரிக்கத் தடுத்தனர் வாசலில் பெருங்கோபுரம் கட்டுவதற்கு திணைக்களம் இடையூறுகளை விளைவித்து வருகிறது. தற்போது இந்திய அரசாங்கத்திடம் திருக்கோணேஸ்வரத்தின் பாரிய திருப்பணி வேலைகளை நிறைவேற்றித் தருமாறு ஆலய அறங்காவலர் சபையும் இந்து சமய நிறுவனங்களும் வேண்டுதல் விடுத்து அவை சாதகமாக அமைய உள்ள நேரத்தில் திட்டமிட்டு ஆலய சுற்றாடலை அபகரிக்கும் நோககில் நிரந்தரக் கடைகளை கட்டுவதற்கு முன்வந்துள்ளனர்.

இந்த விடயத்தைக் கருத்தில் கொண்டு சகல தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களும் திருகோணமலை திருக்கோணேஸ்வரர் ஆலய திருப்பணி வேலைகள் நடைபெறுவதற்கும் அதே வேளையில் அங்கு அவசரமாக கட்டப்படவுள்ள வாணிப கட்டடங்களைத் தடுத்து நிறுத்தவும் உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

திருகோணமலை திருக்கோணேஸ்வரர் ஆலய சுற்றாடலில் சிங்களவர்களுக்கான கட்டட நிர்மாணப்பணிகள் சுதந்திரமாக நடைபெற்று வருகின்றன. திருக்கோணேஸ்வரர் ஆலய திருப் பணியை மட்டும் தொல்லியல் திணைக்களம் தலையீடு செய்து திருப்பணிகளைத் தடுத்து வருகிறார்கள்.

ஒரு பகுதி தொல்லியல் முக்கியத்துவம் வாய்ந்ததாக அடையாளம் காணப்பட்டால், அப்பகுதியை எதிர்கால ஆய்வுகளுக்காக பேணிப் பாதுகாப்பதும், ஆய்வுகளை முன்னெடுப்பதும் தான் தொல்லியல் திணைக்களத்தின் பணி. ஆனால், வடக்கு கிழக்குப் பகுதிகளில் தொல்லியல் திணைக்களத்தின் பணி அவ்வாறாக இருப்பதில்லை. இந்துமத முக்கியத்துவம் வாய்ந்த இடங்களைக் கையகப்படுத்தி அவற்றை சிங்கள – பௌத்த பிரதேசமாக மாற்றுவது தான் அவர்களுடைய பணியாக இருக்கின்றது.

2009 ஆம் ஆண்டு தான் கோவிலுக்குச் செல்லும் பாதையில் கடைகளை தற்காலிகமாக அமைப்பதற்கு அப்போது அமைச்சராக இருந்த புஞ்சிநிலமே ஏற்பாடு செய்திருந்தார். தன்னுடைய வாக்கு வங்கியை அதிகரிப்பதற்காக அவர் செய்த திட்டம் இது! இரத்தினபுரி மாவட்டத்தை சேர்ந்த சிங்கள வர்த்தகர்களுக்கே இவ்வாறு இடமளிக்கப்பட்டது. இந்தப் பகுதியை பலாத்கார



மாக ஆக்கிரமித்து 13 வருடங்களாக அவர்கள் அங்கு இருக்கின்றார்கள். குறிப்பிட்ட பாதையில் அமைக்கப்பட்டுள்ள இந்தக் கடைகள் அனைத்தும் சிங்களவர்களுக்குச் சொந்தமானது என்பது கவனிக்கத்தக்கது. இந்தக் கடைகளை அகற்றுவதற்கு கோவில் நிர்வாகம் மேற்கொண்ட முயற்சிகள் எதுவும் பலனளிக்கவில்லை. மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் கூட்டம் ஒன்றில் இந்த வர்த்தகர்களுக்கு கோவிலுக்கு முன்பாக உள்ள வாகன தரிப்பிடம் உள்ள பகுதியில் கடைகளை அமைத்துக் கொடுப்பது எனவும், பாதையில் உள்ள கடைகளை அகற்றுவது எனவும் தீர்மானிக்கப்பட்டது. இந்தக் கூட்டத்தில் சம்பந்தன் உட்பட திருமலை மாவட்ட எம்.பி.க்களும், தொல்லியல் திணைக்கள அதிகாரிகளும் கலந்து கொண்டிருந்தார்கள். இருந்த போதிலும் இந்த திட்டம் நடைமுறைப் படுத்தப்படவில்லை. அந்த இடம் தமக்குப் பொருத்தமற்றது என வர்த்தகர்கள் நிராகரித்து விட்டது தான் இதற்குக் காரணம்.

திருக்கோணேஸ்வரம் கோவிலுக்கு அருகில் கடற்கரைப் பக்கமாக சங்கமித்த பன்சல என்ற பெயரிலான பௌத்த விகாரை ஒன்றுள்ளது. கோணேஸ்வரர் கோவிலுக்கு வருபவர்கள் அந்த பன்சலக்குச் செல்லாமல் நேரடியாக கோவிலுக்கு வருவது தான் தொல்லியல் திணைக்கள அதிகாரிகளுக்கும் அங்குள்ள பிக்குகளுக்கும் இப்போதுள்ள பிரச்சினை. இதனால், குறிப்பிட்ட பன்சலைக்கு சென்று அங்கிருந்து கோணேஸ்வரர் கோவிலுக்கு வருவதற்கான பாதை ஒன்றை அமைப்பதற்கும், அந்தப் பகுதிக்கு சிங்களவர்களின் கடைகளைக் கொண்டு செல்வதற்கும் இப்போது திட்டமிடப்படுகின்றது. இதற்காக சிங்கள வர்த்தகர்களுக்கு காணியை நிரந்தரமாகக் கொடுப்பதற்கு திட்டமிடப்படுகின்றது. இதன் மூலமாக குறிப்பிட்ட பகுதியை சிங்கள மயமாக்கும் நீண்டகாலத் திட்டத்துடன் தான் அரச இயந்திரம் செயற்படுகின்றது.

திருக்கோணேஸ்வரத்தைப் பொறுத்தவரையில் சிங்கள வர்த்தகர்களுக்காக கட்டங்களை அமைத்துக் கொடுப்பதற்கோ அல்லது – கோவில் நிர்வாகத்தில் தலையிடுவதற்கோ எந்தவிதமான அதிகாரங்களும் தொல்லியல் திணைக்களத்துக்கு இல்லை. இருந்த போதிலும் கோவில் நிர்வாகத்துடன் கடந்த வாரம் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் தொல்லியல் திணைக்கள அதிகாரிகள் தமது எல்லையை மீறிச்செயற்பட்டிருக்கின்றார்கள்.

`இந்த புதிய திட்டத்தை நடைமுறைப் படுத்துவதற்கு உங்களுடைய அனுமதி எமக்குத் தேவையில்லை. ஆனால், பிரச்சினை இருக்கக்கூடாது என்பதற்காக உங்களுடன் இது தொடர்பில் பேசுகிறோம்` என அச்சுறுத்தும் பாணியில் தொல்லியல் திணைக்கள அதிகாரிகள் நடந்து கொண்டிருக்கின்றார்கள்.

குறிப்பிட்ட காணி உண்மையில் கோணேஸ்வரார் கோவிலுக்குச் சொந்தமானது. அது தொல்பொருள் முக்கியத்துவம் வாய்ந்த ஒரு பகுதி என்பதால் அதனைப் பேணிப் பாதுகாக்கும் பொறுப்பு மட்டுமே தொல்பொருள் திணைக்களத்துக்குள்ளது.

ஆனால், அந்தக் காணிக்கான உரிமை தமக்குள்ளது போலவும், கோணேஸ்வரர் கோவில் தமக்கு கட்டுப்பட்டது என்பது போலவும் தான் தொல்பொருள் திணைக்கம் இப்போது செயற்படுகின்றது எனக் குற்றஞ் சாட்டுகின்றார் கோவில் நிர்வாகி ஒருவர்.

திருகோணமலை மாவட்டத்தில் 64ஆம் கட்டை பகுதியில் இராஜவந்தான் மலை உள்ளது. இந்த மலையில் அகத்தியமா முனிவர் சிவலிங்க வழிபாட்டில் ஈடுபட்டுள்ளார். இந்த சிவலிங்கமும் வழிபாட்டுத் தலமும் அகற்றப்பட்டுள்ள. அங்கு பௌத்த விகாரை ஒன்று அமைக்கப்படுகிறது. கொட்டியாபுரம் என்ற பெயரை திரிபு படுத்தி கொட்டியாராம விகாரை என்ற பெயரில் இந்த ஆக்கிரமிப்புக்கள் முன்னெடுக்கப்படுகின்றன. இதற்கு இராணுவமும் அரசாங்க அதிபரும் துணை நிற்கிறார்கள். இராஜவந்தான் ஆலயத்தை புனரமைப்பது தொடர்பில் அரசாங்க அதிபருடன் பேசுகையில் அவ்விடயம் தொடர்பில் பௌத்த பிக்குவிடம் பேச்சுவார்த்தையினை முன்னெடுக்குமாறு அரசாங்க அதிபர் கூறுகின்றார். அரசாங்க அதிபரை விடவும் பிக்கு அதிகாரம் உள்ளவராக தீர்மானிக்கும் சக்திவாய்ந்தவராக உள்ளார் என்பதை இது உணர்த்துகின்றது.

அரச இயந்திரங்களின் பலத்துடன் இராணுவம், பொலிஸ் பாதுகாப்புடன் தொல்லியல் திணைக்களம் சிங்கள மயமாக்கலை தீவிரப்படுத்தியிருக்கும் பின்னணியில் தமிழ்த் தலைவர்கள் எனப்படுபவர்கள் வெறுமனே அறிக்கைகளை வெளியிடுவதுடன், பாராளுமன்றத்தில் பேசுவதுடன் தமது கடமை முடிந்து விட்டதாக இருக்கின்றார்கள்.

# பொருளாதார நெருக்கடி இப்போதைக்கு தீராது!



**கட்டுரையாளர்: கிளிநொச்சியில் இருந்து – கருணாகரன் –**



நாட்டின் பொருளாதார நெருக்கடி வரவரக் கூடுமே தவிர, இப்போதைக்குத் தீராது என்பது மிகத் தெளிவாகி யுள்ளது. இதைப் பற்றிய அக்கறை எவரிடத்திலும் சீரியஸாகக் காணப்படவில்லை. இது ஒரு பெருந்துயர நிலையே. ஆனால் இந்த நெருக்கடி யைத் தீர்க்க முடியும். தீர்க்க முடியும் என்று சொல்வதை விடத் தீர்க்க வேண்டும். அப்போது தான் பல பிரச்சினைகள் குறையும். நாடு மீளும். இல்லையென்றால் பிரச்சினைகள் பெருகும். நாடு மேலும் மேலும் நெருக்கடிக்குள் சிக்குண்டு அந்நிய சக்திகளின் கைகளில் சிக்கி, காலில் மிதிபடும். இது ஒரு அபாய எச்சரிக்கையே.

முதலில் பொருளாதார நெருக்கடி கூடுமே தவிர, இப்போதைக்குத் தீராது என்பதற்கான காரணங்கள் என்னவென்று பார்க்கலாம்.

1. பொருளாதார நெருக்கடியின் தீவிரத் தன்மையைக் குறித்த உணர்வு இன்னும் அரசாங்கத்துக்கும் ஏற்படவில்லை. பாராளுமன்றத்தில் பிரதிநிதித்துவம் செய்யும் கட்சிகள், தலைமைகளுக்கும் ஏற்படவில்லை. அரசாங்கம் தான் செயலற்றுப் போய் விட்டது. அதனால் சரியான பொருத்தமான எந்தத் திட்டத்தையும் தயாரித்ததாக இது வரையில் தகவலில்லை. சரி இதைப் பற்றி மறு தரப்பான எதிர்க்கட்சியினரிடம் கேட்டால் நாங்கள் பொருளாதார நிபுணர்களிடம் பேசிக் கொண்டிருக்கிறோம். எங்களுக்கு நிபுணர்களுடன் தொடர்புண்டு என்று சொல்கிறார்களே தவிர, என்ன பேசுகிறார்கள்? எப்போது மாற்றுத் திட்டம், மாற்றுப் பொறிமுறையைப் பற்றி தகவல் தருவார்கள் என்று தெரியவேயில்லை.

ஆக எதிர்த்தரப்பும் உருப்படியாக இல்லை. இதனால் தான் இவை மையப் பிரச்சினையைப் பற்றி (பொருளாதார நெருக்கடியைப் பற்றி) சிந்திக்காமல் தமக்கிடையிலான அதிகாரப் போட்டியில், அதற்கான தந்திரங்களில் ஈடுபடுகின்றன என்று உறுதியாகக் கூற முடிகிறது.

இதேவேளை மக்களுக்கும் இதைப் பற்றிச் சரியாகப் புரியவில்லை. அதைச் செய்ய வேண்டிய ஊடகங்கள், புத்திஜீவிகள் போன்ற தரப்பினரும் அதைப்பற்றிப் பொருட்படுத்தாமல் ஏனோ தானோ என்று இருக்கின்றனர்.

2.இனப்பிரச்சினை உள்ளிட்ட எந்தத் தேசியப் பிரச்சினைக்கும் தீர்வைக் காணாமல் அவற்றைப் பற்றிப் பேசிப் பேசியே காலத்தைக் கடத்தியதைப்போல இந்தப் பிரச்சினையையும் பேசிக் கடத்தி விடலாம். ஒருவரை ஒருவர் குற்றம் சாட்டித் தப்பி விடலாம் என்றே பலரும் கருகிறார்கள். இது தான் நடந்து கொண்டுமிருக்கிறது. முன்னையை பழக்க தோசத்திலிருந்து விடுபட முடியாமல், விடுபட விரும்பாமல் தான் எல்லோரும் உள்ளனர்.

மக்களுக்கும் இது பழக்கப்பட்டுப் போன சங்கதியாகி விட்டது. ஆனால், இந்தப் பிரச்சினை அவ்வாறானதல்ல. இது பசி, பிணி என ஒவ்வொருவரின் உடலோடும் உயிரோடும் சம்மந்தப்பட்டது. மேலும் கல்வி, மருத்துவம் என்று வாழ்க்கையின் அடிப்படைகளில் நேரடியாகவே தாக்கத்தை உண்டாக்குவது. நிகழ்காலம், எதிர்காலம் என இரண்டிலும் உச்சப் பாதிப்பை ஏற்படுத்துவது. மட்டுமல்ல, நாடே இயங்க முடியாத நிலையை உருவாக்கக் கூடியது.

3. அரசியல் உறுதிப்பாடு இல்லாத நிலை இருக்கும் வரையில் எந்தவிதமான பொருளாதாரத் திட்டங்களையும் மேற்கொள்ள முடியாது. இந்த நிலை தொடர்ந்தால் நாட்டில் குழப்பங்களும் ஸ்திரமற்ற நிலைமையுமே நீடிக்கும். எத்தகைய கொள்கைகளையும் திட்டங்களையும் உருவாக்க முடியாது. இதனால் தான் அரசியல் உறுதிப்பாடு அவசியம் என்று வலியுறுத்தப்படுகிறது. அது நிகழவில்லையென்றால் பொருளாதார ரீதியான உதவிகளைச் செய்ய முடியாது என்று உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம் போன்றவை வெளிப்படையாகவே சொல்கின்றன.

இதே நிலைப்பாட்டையே அமெரிக்கா, ஜேர்மனி, பிரிட்டன், அவுஸ்திரேலியா, யப்பான் போன்ற உதவும் நாடுகளும் கொண்டுள்ளன. எல்லாமே ஒன்றின் பிரதிபலிப்பான்கள்தானே. மட்டுமல்ல இலங்கையில் மனித உரிமைகள், ஜனநாயக விழுமியங்கள் பெரும் சவாலுக்குரியதாகி விட்டது. அதைச் சீராக்காத வரையில் பிற நாடுகளினதும் அமைப்புகளின் நம்பிக்கையைப் பெற முடியாது. ஆகவே அதைக்குறித்த சிந்தனையும் உடனடி நடவடிக்கையும் அவசியம்.

4.இந்தப் பொருளாதார நெருக்கடிக்கான காரணங்கள் நேர்மையாகக் கண்டறியப்பட வேண்டும். யுத்தம், முறையற்ற பொருளாதாரத் திட்டங்கள், அவற்றை மேற்கொண்ட தரப்பினர், ஊழல், அதைச் செய்தவர்கள். அதற்கு எதிரான நடவடிக்கை மற்றும் அதைக் கட்டுப்படுத்தல் என்பவற்றைப் பற்றியெல்லாம் பகிரங்கமாக விவாதித்து உரிய முறையில் இனங் காணல் செய்ய வேண்டும். உரிய தரப்புகள் மீது நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். சம்மந்தப்பட்டவர்கள் பொறுப்புக் கூற வேண்டும். இவ்வளவுக்கும் கடந்த 40 ஆண்டுகளாக அரசியல் அதிகாரத்தில் இருந்தவர்களே இப் பொழும் அதிகாரத்தில் உள்ளனர்.

எனவே இவர்கள் தான் பொறுப்பாளிகள். ஆகவே இவர்கள் இதற்கான பொறுப்பேற்றலைச் செய்ய வேண்டும். அப்படிச் செய்யாத வரையில் எதுவும் நிகழாது.

5.பொருளாதார நெருக்கடி நாட்டுக்கும் மக்களுக்கும் எத்தகைய பாதிப்பை ஏற்படுத்தும்? ஆகவே அதிலிருந்து மீள்வது எப்படி? இதற்கு அரசின் பொறுப்பென்ன? மக்களின் கடமைகள் என்ன? உண்மையான மாற்றுத் திட்டங்கள் என்ன? தீர்வு என்ன? அவற்றை எப்படி நடைமுறைப்படுத்துவது? என்பதைக் குறித்த ஆய்வுகள், உரையாடல்கள் அவசியமானது. இது தொடக்க நிலைப்பணியாகும். இதுவே இன்னும் மேற்கொள்ளப்படவில்லை. அதாவது இதையே இன்னும் யாரும் ஆரம்பிக்கவில்லை. அரசும் செய்யவில்லை. மக்கள் தரப்பிலுள்ள அமைப்புகள், ஊடகங்கள், புத்திஜீவிகள், பொருளாதாரத் துறையினர் என யாருமே செய்யவில்லை. என்றால் இந்த நெருக்கடியின் தீவிரத்தை யாரும் சரியாக உணரவில்லை என்று தானே அர்த்தம்!

இதில் முக்கியமாகப் பங்களிக்க வேண்டிய தரப்புகள் பொருளாதாரத்துறை சார்ந்த நிபுணர்கள், உற்பத்தி மற்றும் தொழில்துறையினர், முதலீட்டாளர்கள், ஊடகங்கள் ஆகும். ஆனால் கவலையளிக்கும் விதமாக இந்தத் தரப்புகள் இதற்கு வெகு தொலைவில் ஏனோ தானோ என விலகி நிற்கின்றன. அல்லது கனத்த மௌனம் காக்கின்றன. இது மிக மோசமான நிலையாகும். உண்மையில் இந்த நெருக்கடியில் இவை இரண்டு வகையான பங்களிப்புகளை வேலைத் திட்டங்களை மேற் கொண்டிருக்க வேண்டும்.

ஒன்று, நிலைமையின் நெருக்கடியின் தீவிரத்தை, அதன் ஆபத்தை வெளிப்படுத்த வேண்டும். இப்போது கூட அதைச் செய்யலாம். மேலும் தாமதிக்கக் கூடாது. தாமதிக்கும் ஒவ்வொரு கணமும் நெருக்கடி பல மடங்கு அதிகரித்துச் செல்லும். உதாரணமாக இந்தப் பொருளாதார நெருக்கடி வெளிப்படையாகத் தெரியத் தொடங்கி இப் பொழுது ஓராண்டாகிறது. இந்த ஓராண்டுக்குள் இது எவ்வளவு விரைவான சிக்கல்களை ஏற்படுத்தியிருக்கிறது என்று பார்த்தீர்களா? இந்த வாரத் தொகை மதிப்பீட்டின்படி தற்போதைய பணவீக்கம் 60வீதத்தைக் கடந்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

என்றுமே இல்லாத அளவுக்கு உணவுப் பொருட்களின் விலையே அதிகரித்துள்ளது. அடுத்த கட்டமாக உணவுப் பொருட்களே இல்லாத நிலை ஏற்படப் போகிறது. ஆகவே, முதலில் அங்கங்கே தனித்தனி ஆளாக ஒற்றைக் குரலாக ஒலிக்காமல் அமைப்பாகத் திரண்டு, இதை ஆக்கபூர்வமான முறையில் அரசுக்கும் மக்களுக்கும் விளக்க வேண்டும். இதை எழுந்தமானமாகச் செய்யாமல் முறைப்படியான தரவுகள், விளங்கங்களோடு ஆய்வு ரீதியாக, மதிப்பிடலுக்குள்ளாக்கி வெளிப்படுத்த வேண்டும். இதை மக்களிடத்தில் கொண்டு போவதற்கும் அரசின் கவனத்திற்குக் கொண்டு செல்வதற்கும் ஏற்ற வகையிலான வழி முறைகளில் செயற்பட வேண்டும். அரசுடன் சந்திப்புகளை மேற்கொண்டு திரட்டிய ஆவணத்தை கையளித்து உரையாடுவது அவசியம். இணைந்து திட்டங்களை உருவாக்கவும் அவற்றைச் செயற்படுத்தவும் வேண்டும். அதைப்போல, மக்களுக்குத் தெரியப்படுத்துவதற்கு கலந்துரையாடல்கள், ஊடகங்கள் வழியான எடுத்துரைப்புகள், பகிர்தல்கள், மக்கள் சந்திப்புகள் என நிகழ வேண்டும். இதற்கு அர்ப்பணிப்பு மிக்க உழைப்பு செலவிடப்படுவது கட்டாயம். ஏனென்றால் இதொரு தேசிய நெருக்கடியாகும். எந்தத் தேசிய நெருக்கடியும் கனதியுடையதாகவே இருக்கும். இதனால் தான் இத்தகைய நெருக்கடிகளின் பொழுது செயற்படுவதை இடர்காலப் பணி, அவசரகாலப் பணி, அவசியப் பணி என்ற உணர்வோடு செய்ய வேண்டும். அதுவும் உயிரையும் உடலையும் பாதிக்கின்ற நெருக்கடி இதுவல்லவா. ஆகவே இதனுடைய தாற்பரியத்தைப் புரிந்து கொண்டு செயற்படுவது அவசியம். இரண்டாவது, துரிதமாக மாற்றுத் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்காகப் பங்களிப்பது, உழைப்பதாகும். இது தனியே அரசுடன் அல்லது அதன் நிர்வாகக் கட்டமைப்புடன் மட்டுமல்லாது, மக்களுடன் இணைந்து மேற்கொள்ளப்பட வேண்டும். களப்பணி என்ற அடிப்படையிலேயே இதைச் சிந்திப்பது நல்லது.

6. அரசாங்கத்தின் திட்டங்களும் அதை நடைமுறைப்படுத்துவதற்கான அரச நிர்வாகமும் முற்று முழுதாக மறுசீரமைப்புக்குள்ளாக்கப்படுவது அவசியம். இதற்கான சுற்று நிருபங்கள், சட்டங்களும் சீரமைப்புக்குள்ளாக வேண்டும். இடர்கால நிலைமையைக் கருத்திற் கொண்டு அனைவரும் குறிப்பிட்ட காலத்துக்கு சிறப்பு வேலைத்திட்டத்துக்குத் தயார்ப்படுத்தப்படுவது அவசியம். இதன்படி அனைவரும் களப் பணியாளராக உற்பத்தித்துறைகளின் மேம்பாட்டுக்கும் பொருளாதார விருத்திக்கும் பங்களிப்புச் செய்ய வேண்டும். பணியாற்ற வேண்டும். இதில் கூடுதலாகப் பங்களிப்போருக்கு சிறப்பாக வேலை செய்வோருக்கு ஊக்குவிப்புகள் வழங்கப்படலாம். பதவி உயர்வு, கொடுப்பனவு மற்றும் சிறப்பு வழங்கல்கள் என்றவாறாக. குறைவாகப் பங்களிப்போர் அல்லது ஒத்துழைக்க மறுப்போருக்கான இடத்தை நிராகரித்தல், அவர்கள் மீது நடவடிக்கை எடுத்தல் என்பதாகவும். இவ்வாறே அரசாங்கத்திலும் அதிக வருவாயை ஈட்டித்தரும் அமைச்சுகள், மக்கள் நலனை மேம்படுத்தும் அமைச்சுகள், உற்பத்தியில் சிறப்பாகச் செயற்படும் அமைச்சுகள் என வகைப்படுத்தப்பட்டு(22ம் பக்கம் பார்க்க)



# கோர்த்து விட்ட கோத்தா

சீன கப்பலின் வருகையினால் இந்தியாவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படாது என்ற நம்பிக்கையை வாக்குறுதியை ஏற்படுத்தும் முயற்சிகள் மேற் கொள்ளப்பட்டாலும், இந்தியா அதற்கெல்லாம் மசிந்து கொடுப்பதாகத் தெரியவில்லை

கோட்டாபய ராஜபக்ஷ நாட்டை விட்டு வெளியேறும் போது, கூடவே பல பிரச்சினைகளையும் சேர்த்து வைத்து விட்டுப் போயிருக்கிறார். அவர் அங்கிருந்து தப்பிச் சென்ற போது, இந்தியாவையும், சீனாவையும் கோர்த்து விட்டு பிராந்தியப் பதற்றத்தை உருவாக்கி விட்டுச் சென்ற விவகாரம், அண்மையில் தான் வெளிச்சத்துக்கு வந்திருக்கிறது.

சீனாவின் விண்வெளி மற்றும் செயற்கைக் கோள் கண்காணிப்பு மற்றும், கண்டம் விட்டுக் கண்டம் பாயும் ஏவுகணைகளின் பாதையை கணகாணிக்கும், யுவான் வாங் 5 என்ற ஆய்வுக் கப்பலை அம்பாந்தோட்டை துறைமுகத்தில் தரித்து நிற்க வழங்கப்பட்ட அனுமதியை ஒட்டி, பிராந்திய பாதுகாப்பு, இராஜதந்திர நெருக்கடி ஒன்று உருவாகியிருக்கிறது.

கோட்டாபய ராஜபக்ஷவின் பதவிக் காலத்தில் வழங்கப்பட்ட அனுமதியைக் கொண்டே இந்தக்கப்பல் வரும் 11ஆம் திகதி அம்பாந்தோட்டை துறை முகத்துக்குள் நுழையவிருக்கிறது.

வரும் 17ஆம் திகதி வரை இங்கு தரித்து நிற்கும் இந்தக் கப்பல், இந்தியப் பெருங்கடலின் வடமேற்கு பகுதியில் ஆய்வுகளை மேற் கொள்ளவுள்ளதாக கூறப்பட்டுள்ளது.

ஆரம்பத்தில் இந்தக் கப்பலின் பயணம் தொடர்பாக தகவல் வெளியான போது, பாதுகாப்பு அமைச்சு அதனை நிராகரித்த போதும், பின்னர் அந்த தகவலை ஒப்புக்கொண்டது.

முன்னைய அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட அனுமதியை கொண்டே சீனக் கப்பல் இலங்கைக்கு வரவுள்ளது என்பது மட்டும் தான், தற்போதைய ரணில் விக்கிரமசிங்க அரசாங்கம் தப்பிக் கொள்வதற்காக இருக்கும் ஒரே வழி.

அந்த அனுமதியை இரத்துச் செய்தால், சீனா கோபமடையும், கொழும்பு துறைமுக நகரத் திட்டம் மைத்திரி-ரணில் கூட்டு அரசாங்கத்தின் காலத்தில் 6 மாதங்களுக்கு இடைநிறுத்தி வைக்கப்பட்ட போது சீனா எவ்வாறான பிரதிபலிப்பை வெளிப்படுத்தியது என்பது ஜனாதிபதி ரணிலுக்கு நன்றாகவே தெரியும்.

அதனால், இந்தக் கப்பலின் வருகைக்கான அனுமதியை இரத்துச் செய்வது பற்றி யோசிக்க அரசாங்கம் தயாராக இல்லை. அதேவேளை, சீனாவைப் போன்றே இந்தக் கப்பல் வருகை விவகாரத்தை இந்தியா எவ்வாறு பிரதிபலிக்கும் என்பதும் அரசாங்கத்துக்கு தெரியாத ஒன்று அல்ல.

2014ஆம் ஆண்டு கொழும்பு துறைமுகத்தில் சீன நீர்மூழ்கி கப்பல் தரித்துச் செல்வதற்கு வழங்கப்பட்ட அனுமதி, மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கத்துக்கு எத்தகைய நெருக்கடியை ஏற்படுத்தியது என்பது யாவரும் அறிந்த ஒன்று.

ஏறச் சொன்னால் எருதுக்கு கோபம், இறங்கச் சொன்னால் முடவனுக்கு கோபம் என்ற நிலையில் ரணில் விக்ரமசிங்க அரசாங்கம் சிக்கியிருக்கிறது.

இந்தியாவையும் பகைத்துக் கொள்ளாமல், சீனாவுடனும் முரண்படாமல் இந்தப் பிரச்சினையை தீர்ப்பது ரணில் அரசாங்கத்துக்கு முக்கியமான சவாலாக மாறியிருக்கிறது.

ஏற்கனவே கோட்டாபய ராஜபக்ஷ அரசாங்கம் விட்டுப் போயிருக்கின்ற பொருளாதார நெருக்கடிகளையே தீர்க்க முடியாமல் இருக்கின்ற போது, இதுவும் ஒரு புதுப்பிரச்சினையாக முளைத்திருக்கிறது.

அதுவும் இலங்கையினால் தட்டிக் கழிக்க முடியாத, இரண்டு நாடுகள் இங்கு கோர்த்து விடப்பட்டிருக்கின்றன. இந்தியா குறுகிய காலத்தில் 3.5 பில்லியன் டொலர்கள் நிதியைக் கொடுத்து உதவிய நாடு. இன்னும், 1.5 பில்லியன் டொலர்கள் உதவிக் கோரிக்கையை பரிசீலித்து வருகின்ற நாடு.

சீனா தற்போதைய நெருக்கடியில் பேரளவு நிதியை வழங்காவிட்டாலும் மனிதாபிமான உதவிகளை வழங்குகின்ற நாடு. தற்போது, சீனாவிடம் விடுக்கப்பட்ட 4பில்லியன் டொலர்கள் உதவிக் கோரிக்கைக்கு சாதகமான பதில் கிடைக்கும் என்று அரசாங்கம் நம்புகிறது.

இந்த இரண்டு நாடுகளில் எதனைப் பகைத்துக் கொண்டாலும், அது இலங்கைக்கு பாதகம் என்பதை விட, ஆபத்து என்று கூறுவது தான் பொருத்தம்.

கம்பராமாயணத்தில் கடன்பட்டார் நெஞ்சத்தை இலங்கை வேந்தனின் கலக்கத்துக்கு உவமானமாக காட்டப்பட்டது.

ஆனால் உண்மையிலேயே கடன்பட்டதால், கலங்கும் நிலையில் இன்றைய இலங்கை ஆட்சியாளர்கள் கலங்கும் நிலை ஏற்பட்டிருக்கிறது. இந்தச் சிக்கலை இராஜதந்திர வழியில் மாத்திரமே தீர்க்க முடியும் என்று அரசாங்கம் நம்புகிறது.

அதாவது, சீன கப்பலின் வருகையையும் தடுக்காமல், அதனால் இந்தியாவுக்கும் பாதிப்பை ஏற்படுத்தாமல் இந்த விவகாரத்தை அணுக முற்படுகிறது அரசாங்கம். கப்பலின் வருகையினால் இந்தியாவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படாது என்ற நம்பிக்கையை வாக்குறுதியை ஏற்படுத்தும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டாலும், இந்தியா அதற்கெல்லாம் மசிந்து கொடுப்பதாகத் தெரியவில்லை.


இந்தக் கப்பலின் வருகையை வழக்கத்துக்கு மாறான ஒன்று அல்ல என்றே இலங்கை அரசாங்கம் குறிப்பிடுகிறது. இதுவரை 18 சீன ஆய்வுக் கப்பல்கள் இலங்கைக்கு வந்து போயிருப்பதாகவும், அவற்றினால் இந்தியாவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படவில்லை என்றும், நியாயம் கூறுகிறது இலங்கை.

ஆனால், பாதுகாப்பு விடயத்தில் சீனாவை நம்புவதற்கு இந்தியா தயாராக இல்லை என்பது தான், ரணில் விக்ரமசிங்க அரசாங்கத்தின் துரதிஷ்டம். சீனாவைப் பொறுத்த வரையில், இந்தியாவிடமோ, அமெரிக்காவிடமோ தனது அதிகாரம் தோற்றுப் போய்விடக் கூடாது என்பதில் கவனமாக இருக்கிறது.

அவ்வாறான நிலைப்பாட்டில் உள்ள சீனா, இந்த விவகாரத்தில் விட்டுக் கொடுக்கத் தயாராக இருக்காது.

அதேவேளை இந்தியாவோ, இந்த விவகாரத்தில் தனக்கு அச்சுறுத்தல் ஏற்படும் எனக் கருதினால், இலங்கைக்கு மேலும் அழுத்தங்களைக் கொடுக்கவும் தயங்காது.

கட்டுரையாளர்
தமிழகத்தில் இருந்து
-கேணல் ஹரிகரன் -




சீன ஆய்வுக் கப்பல் எதற்காக இந்தப் பயணத்தை மேற்கொள்கிறது என்ற கேள்விக்கு சரியான பதில் இல்லாத நிலையில், இந்தியா அதனை சந்தேகத்துடன் பார்ப்பது இயல்பு.

ஏனென்றால் யுவான் வாங் கப்பல்கள், ஆகப் பிந்திய தலைமுறை நவீன தொழில்நுட்ப வசதிகளைக் கொண்டதென பென்டகன் அறிக்கையில் கூறப்பட்டிருக்கிறது.

இந்தக் கப்பல் விண்வெளி மற்றும் செய்மதிகளை மட்டும் கண்காணிப்பதற்கானது அல்ல. கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணைகளின் பாதைகளையும் கண்டறியக் கூடிய திறன் பெற்றது.

தான் ஏவுகின்ற ஏவுகணைகளை கண்காணிப்பதற்காக சீனா இதனை இந்தியப் பெருங்கடலுக்கு அனுப்பியிருப்பதாக கொள்ள முடியாது. ஏனென்றால், சீனா தனது(22ம் பக்கம் பார்க்க)

சிவமயம்



ஸ்ரீ கைலாசம்
சைவசமய கிரியைகள் சேவை

சமயதீட்சை
அந்திமக்கிரியை (மரணச்சடங்கு)
அந்தியேட்டி (தர்ப்பை சூடுதல்)

ஆகியவற்றை ஈழத்து சைவ பாரம்பரிய முறையில் செவ்வனே செய்து கொள்வதற்கு
சைவக்குருக்களை
தொடர்பு கொள்ளவும்
"இணுவில் திருவூர்"
சிவஸ்ரீ. M.S. வைத்தியநாதன் குருக்கள்
647.629.5468
msvkurukkal@gmail.com

# ரணிலின் தென்னிலங்கை நகர்வுகள்

ரணில் விக்கிரமசிங்க அவரது, நீண்ட நாள் இலக்கில் வெற்றி பெற்றிருக்கின்றார். ஆனாலும் இதனை முழுமையான வெற்றியென்று கூறி விட முடியாது. ஏனெனில் அவர் மக்களால் தெரிவு செய்யப்பட்டு இந்த இடத்தை அடையவில்லை. ஆனாலும் கிடைத்த இடத்தை கெட்டியாக பற்றிக் கொள்வதும் அதே வேளை, எதிர்காலத்தில் முடிந்தால் மீண்டுமொரு முறை சதுரங்கத்தை ஆடுவதும் தான் அவருக்கு முன்னாலுள்ள தெரிவுகளாக இருக்கின்றன.

எனவே அடிப்படையில் ரணில் ஆடப்போவது முற்றிலும் தென்னிலங்கைக்கான அரசியல் ஆட்டம் தான். எனவே இதில் தமிழர்கள் அதிகம் தலையை பிய்த்துக் கொள்ள வேண்டியதில்லை. ஆனால் இந்தத் தென்னிலங்கை ஆட்டத்திற்குள் எந்தளவு தூரம் போகலாம், போகக் கூடாது என்பதில் தமிழ் தேசிய தரப்பினர் மத்தியில் தெளிவான புரிதல் இருக்க வேண்டியது அவசியம். 2015 ஆட்சி மாற்றத்திலிருந்து, தமிழ் தேசிய கூட்டமைப்பு அளவுக்கதிகமாக தென்னிலங்கை அரசியலுக்குள், தேவையற்ற வகையில் தலையீடு செய்து வருகின்றது. சுமந்திரன் தான் இதற்கான பிரதான காரணமாகும்.

சுமந்திரனின் வரவுக்கு முன்னர் இவ்வாறானதொரு போக்கு தமிழ் தேசிய அரசியல் பரப்பில் இருந்ததில்லை. இதற்கு சுமந்திரனின் பின்னணியும் ஒரு பிரதான காரணமாகும். சுமந்திரன் அடிப்படையிலேயே தமிழ் தேசிய அரசியல் பின்புலம் சார்ந்த ஒருவரல்ல.

விடுதலைப் புலிகளின் வீழ்ச்சிக்கு பின்னர் தமிழ் தேசிய அரசிலுக்குள் இணைந்து கொண்டவர். இப்போது ரணில் விக்கிரமசிங்கவின் நிலையில் தான், 2010இல் சுமந்திரனும் இருந்தார். ராஜபக்சக்களின் வீழ்ச்சி, ரணிலுக்கு வாய்ப்பை வழங்கியது போன்றுதான், புலிகளின் வீழ்ச்சி சுமந்திரனுக்கு மட்டுமல்ல விக்கினேஸ்வரனுக்கும் ஒரு வாய்ப்பை வழங்கியது.

ஆனால், சம்பந்தனும் சுமந்திரனும் எதிர்பார்த்தது போன்று விக்கினேஸ்வரன் இருக்கவில்லை. யாழ்ப்பாணத்திற்கு வந்ததும், விக்கினேஸ்வரன் அவரது இயல்புக்கு மாறானதொரு கடும்போக்கு நிலைப்பாட்டை தழுவிக் கொண்டார். இப்போது அதனை தொடர்ந்தும் கடைப்பிடிக்க முடியாமல் திணறிக் கொண்டிருக்கின்றார்.

விக்கினேஸ்வரனோடு ஒப்பிட்டால் சுமந்திரன், வலிந்து தேசியவாதியாவதற்கான முயற்சிகளில் ஈடுபடவில்லை. சுமந்திரன் ஒரு வேளை அப்படி நடிக்க முற்பட்டிருந்தாலும் கூட, அது அதிக காலத்திற்கு நீடிக்காது. ஆனால் இந்த அரசியல் நடிப்பில் இப்போதும் கொடிகட்டிப் பறக்கும் ஒருவரென்றால், அது சிவஞானம் சிறிதரன் மட்டும் தான். அவரால் பிரபாகரனுக்கு பிறந்த நாளும் கொண்டாட முடிகின்றது, உருத்திரகுமாரனோடு சேர்ந்து பொதுசன வாக்கெடுப்பு தொடர்பிலும் பேச முடிகின்றது பின்னர் ரணில்விக்கிரமசிங்கவுடன், அரசியல் தீர்வு தொடர்பில் பேசப் போவதாகவும் கூற முடிகின்றது. இவ்வாறான நடிப்பாற்றல் எல்லோருக்கும் வாய்க்காது.

2015, தேர்தலில் சுரேஸ் பிரேமச்சந்திரன் தேர்தலில் தோல்வியடைந்ததை தொடர்ந்தே, சுமந்திரனின் செல்வாக்கு கூட்டமைப்பிற்குள் வலுவடைந்தது. தேசிய பட்டியல் மூலம் சுரேஸ்பிரேமச்சந்திரனுக்கு ஒரு இடத்தை வழங்குவதற்கான வாய்ப்புக்கள் இருந்த போதிலும் கூட, சம்பந்தன் அதனை விரும்பவில்லை. ஆட்சி மாற்றத்திற்கு பின்னர், கூட்டமைப்பின் அரசியல் அணுகுமுறை என்பது, முற்றிலும், கொழும்மை அனுசரித்து முக்கியமாக ரணில் விக்கிரமசிங்கவோடு இணைந்து பயணிப்பதாகவே இருந்தது. இந்தக் காலத்தில் தான், சுமந்திரனின் கொழும்பு செல்வாக்கு கணிசமாக வலுவடைந்தது. ஒரு தமிழ் தேசிய கட்சியின் பிரதிநிதி என்பதற்கு அப்பால், ஒரு இலங்கை அரசியல்வாதியாக சுமந்திரன் வளர்சியடைந்தார். சுமந்திரன் அதிகம் தென்னிலங்கை அரசியலுக்குள் ஆர்வம் காண்பிப்பதை, இந்த பின்புலத்திலிருந்து தான் நாம் நோக்க வேண்டும்.

ரணிலின் தென்னிலங்கை நகர்வுகள் பற்றி பேசும்போது, இந்த விடயங்கள் எதற்காக என்னும் கேள்வி எழலாம்.



ரணில்–மைத்திரி ஆட்சிக் காலத்தில், ரணிலுக்கும் சுமந்திரனுக்கும் நெருக்கமான உறவிருந்தது. ரணிலுக்காக, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை கூட்டமைப்பு கடுமையாக விரோதித்துக் கொண்டது. ஆனால் இப்போது, ரணில் தொடர்பில் சுமந்திரன் வெளிப்படுத்தி வரும் அபிப்பிராயங்களை உற்று நோக்கினால், தென்னிலங்கையிலுள்ள சிங்கள அரசியல்வாதிகள் கூட, சுமந்திரனை போன்று ரணிலை விமர்சிக்கவில்லை. இதன் பின்னணி என்ன?

சுமந்திரன் தென்னிலங்கை அரசியலுக்குள் அதிகம் தலையீடு செய்ய முற்பட்டதன் விளைவாகவே, ரணிலுடன் முரண்பட வேண்டியேற்பட்டிருக்கின்றது. அது எவ்வாறான தலையீடு என்பதை நம்மால் அறிய முடியாவிட்டாலும் கூட, சுமந்திரன் மேற்கொண்ட சில நகர்வுகள், ரணிலின் தென்னிலங்கை நகர்வுகளுடன் நேரடியாக உரசியிருக்கின்றது. இல்லாவிட்டால் இந்தளவிற்கு ரணில் விக்கிரமசிங்கவை எதிர்க்க வேண்டிய தேவையில்லை.

ரணிலின் தென்னிலங்கை நகர்வுகள் வெள்ளிடைமலை. அதாவது, தற்போது கிடைத்திருக்கும் அதியுச்ச அதிகாரத்தை முழு அளவில் பிரயோகித்து, தன்னை நிலைநிறுத்திக் கொள்வது. அவ்வாறு தனது அதிகாரத்தை அதியுச்சளவில் பிரயோகிக்க வேண்டுமாயின், அரசு பலமாக இருக்க வேண்டும். அரசு பலமாக இருக்க வேண்டுமாயின் அரசிற்கு எதிரான எதிர்ப்புக்களை ஒரு எல்லைக்குள் மட்டுப்படுத்த வேண்டு. இதனை கருத்தில் கொண்டே, போராட்டக்காரர்கள் ஒரு கட்டத்திற்கு மேல் வளர்சியடைவதை ரணில் தடுக்க முற்படுகின்றார்.

மேலும் இடதுசாரி பின்புலம் கொண்ட சக்திகள் கொழும்பில் எழுச்சியடைவதை இந்தியா மற்றும் மேற்குலம் ஒரு போதும் ஆதரிக்காது. தாராளவாத பின்புலம் கொண்டவர்கள் ரணில் விக்கிரமசிங்கவை ஒரு கட்டத்திற்கு மேல் எதிர்க்க மாட்டார்கள்.

இவ்வாறானதொரு பின்னணியில் தான், ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரி, பொன்சேகா, போராட்டத்தை தன் வசப்படுத்தும் முயற்சிகளில் ஈடுபடுகின்றார். பொன்சேகாவின் தலைமைக்கு போராட்டம் கைமாறுமாயின், அது முற்றிலும் கட்சி அரசியலுக்குள் சென்றுவிடும். ஆனால் பொருளாதார நெருக்கடியிலிருந்து மீண்டெழ வேண்டிய உடனடித் தேவையை எதிர் கொண்டிருக்கும் மக்களோ, மூச்சு விடுவதற்கான அவகாசத்தை தேடியலைகின்றனர். இந்த நிலையில் இவ்வாறான போராட்டங்களை மக்கள் வெறுக்கவே

அதிக வாய்ப்புண்டு. இந்த விடயத்தையும் ரணில் சரியாக கணித்திருப்பார். மேலும் ரணில் பிரச்சினைகளை தீர்க்கக் கூடியவர் என்னும் அப்பிராயம் மத்தியதர வர்கத்தினர் மத்தியிலுண்டு. இதுவும் ரணிலுக்கு சாதகமான ஒரு விடயமாகும்.

ரணிலின் தென்னிலங்கை நகர்வுகளுக்கு இரண்டு இலக்குகள் இருக்கலாம். ஒன்று, வீழ்ந்து கிடக்கும் ஐக்கிய தேசியக் கட்சியை தூக்கி நிறுத்த முயற்சிப்பது. இது தான் ஐக்கிய தேசியக் கட்சிக்கு கிடைத்திருக்கும் இறுதி சந்தர்ப்பம். அதே வேளை, மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஒரு ஜனாதிபதியாக தன்னை நிலை நிறுத்துவது. தற்போதுள்ள நிலையில், ராஜபக்சக்கள் அடுத்த ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவதற்கான வாய்ப்பில்லை. இந்த நிலையில் அனைவரது ஆதரவுடனும் ரணில் விக்கிரமசிங்க ஒரு பொது வேட்பாளராக வருவதற்கான வாய்ப்பையும் குறைத்து மதிப்பிட முடியாது.

ஆனால் அனைத்தும் பொருளாதார நெருக்கடிகளை வெற்றி கொள்வதில் தான் தங்கியிருக்கின்றது. மொத்தத்தில், இது ரணிலுக்கான இறுதி அரசியல் சதுரங்கம். ரணிலை பொறுத்தவரையில் — அரசியல் சதுரங்க ஆட்டத்தை விடவும் மேலானது. அதுவே சற்று காலம் எடுக்குமென்றால், அரசியல் ஒரு மரதன் ஓட்டம் போன்றது. கடுமையான ஆட்டமெனில், அது ரகர் விளையாட்டு போன்றது.

கட்டுரையாளர்:
தாயகத்தில் இருந்து
- யசீந்திரா -



இரத்தம் பார்க்கும் விளையாட்டு எனில் பொக்சிங் போன்றது. அனைத்து ஆட்டத்தையும் ரணில் ஆட வேண்டியிருக்கின்றது. மற்றவர்கள் எவரையும் விடவும், அரசியலில் இந்த ஆட்டங்களை ரணில் நன்கு கற்றுத்தேறியவர். ரணிலின் தென்னிலங்கை ஆட்டத்திற்குள் தேவையில்லாமல் மூக்கை நுழைக்காமல் இருப்பதுதான், தமிழ் தேசிய தரப்பினருக்கு நல்லது. ஆட்டத்தின் சூட்சுமங்களை விளங்கிக் கொள்ளாமல், ஆட்டத்திற்குள் நுழைவது எதிர்மறையான விளைவுகளையே தரும். யுத்தத்திற்கு பின்னரான கடந்த பன்னிரு வருடங்களில், தமிழ் தேசிய தரப்பினர், சிறிலங்காவின் அரசியல் சதுரங்கத்தில் வெறும் பார்வையாளர்களாகவே இருக்கின்றனர். சம்பந்தன் சுமந்திரன் போன்றவர்கள் தாங்கள் ஆடுவதாக எண்ணிக் கொண்டனர் ஆனால் அவர்கள் ஆடவே யில்லை.

புனிதபூமி அன்பு இல்லம்
குழந்தைகளின்
வாழ்வுக்காகவும்
வாழ்வாதாரத்திற்காகவும்
உங்கள் அபிமான
ஈழநாடு பத்திரிகை
நடாத்தும்
10வது ஆண்டு நிறைவின்
இன்னிசை மாலையும்
இராப்போசன விருந்தும்
23 ஒக்டோபர் 2022 ஞாயிறு
தொடர்புகளுக்கு 416 841 9600

# ஸ்டாலினை நெருங்கும் மோடி!

கட்டுரையாளர்:- தமிழகத்தில் இருந்து
- குடந்தையான் -

தமிழகத்திற்கு கடந்த வாரம் வருகை தந்த பிரதமர் நரேந்திர மோடிக்கு தமிழக அரசின் சார்பிலும், தமிழக மக்களின் சார்பிலும், தமிழக பா.ஜ.க. சார்பிலும் வழங்கப்பட்ட வரவேற்பு அரசியல் வட்டாரத்தில் பெரும் அதிர்வை ஏற்படுத்தியிருக்கிறது.



கடந்த முறை பிரதமர் நரேந்திர மோடி தமிழகத்தில் நடைபெற்ற அரச விழாவில் பங்கு பற்றிய போது, அவரை 'ஒன்றிய அரசின் பிரதமர்' என்று விளித்த தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின், தற்போது 'இந்திய அரசின் பிரதமர்' என்று அழைத்ததை குறிப்பிட்டு, தி.மு.க.வும், அதன் தலைவரான ஸ்டாலினும், பா.ஜ.க. விடயத்தில் தங்களது எண்ணத்தை மாற்றிக் கொண்டிருப்பதாகச் சுட்டிக் காட்டப்படுகின்றது.

அத்துடன் கடந்த அ.தி.மு.க. அரசைப் போல தற்போதைய தி.மு.க. அரசும் மத்திய அரசின் கைபாவையாகவும், அவர்களின் எண்ணத்தை நிறைவேற்றும் அடிமை அரசாகவும் மாறிவிட்டது என்றும் தமிழக அரசியல் கட்சிகள் குற்றச்சாட்டுக்களை முன்வைத்துள்ளன. முதல்வர் பதவியில் தொடர்ந்து நீடிப்பதற்காக தி.மு.க. முட்டுக் கொடுத்து பாதுகாத்து செல்வதாகவும், முழுமையாக சரணடைந்து விட்டதாகவும் விமர்சனங்கள் உள்ளன.

குறிப்பாக கள்ளக்குறிச்சியில் நடைபெற்ற வன்முறை விவகாரத்தில் தமிழக அரசின் கட்டுப்பாட்டில் இயங்க வேண்டிய பொலிஸாரும், மாநில உளவுத் துறையும், மத்திய அரசின் பிரதிநிதியான ஆளுநரின் விருப்பத்திற்கேற்ப நடந்துக் கொண்டதாக கூறப்படுகின்றது.

ஆனால் இது குறித்து தமிழக முதல்வர் தொடர்ந்து கனத்த மௌனத்தைக் கடைப்பிடிப்பதாகவே அவர்கள் குற்றம் சுமத்துகிறார்கள். அத்துடன் எதிர்காலத்தில் பா.ஜக.வும், தி.மு.க.வும், வாஜ்பாய் காலகட்டத்தில் ஏற்படுத்திக் கொண்ட தேர்தல் கூட்டணி போல் எதிர்வரும் பாராளுமன்ற தேர்தலில் கூட்டணி வைத்துக் கொள்ளக்கூடும் என்றும் எதிர்வு கூறப்படுகின்றது.

இந்நிலையில், முதல்வர் ஸ்டாலின் மாறவில்லை. பிரதமருக்குரிய மரியாதையைத் தான் அவர் அளித்தார். அதே நிகழ்ச்சியில் பங்கு பற்றிய அமைச்சர் முருகனை, 'ஒன்றிய அமைச்சர்' என்று தான் ஸ்டாலின் குறிப்பிட்டார். கேரளாவின் முன்னணி ஊடகம் ஒன்றின் சார்பில் நடைபெற்ற விழாவில் பங்கு பற்றி காணொளி வழியாக பேசிய ஸ்டாலின், 'ஒன்றிய அரசின் மீதான குற்றச்சாட்டை வழமையாக முன்வைத்தார் என்று தி.மு.க. தரப்பில் வாதம் முன்வைக்கப் பட்டுள்ளது.

குறிப்பாக ஒன்றிய அரசு ஆளுநர் மூலம் ஒவ்வொரு மாநிலத்திலும் இரட்டை ஆட்சி நடத்துவதாகவும் முதல்வர் ஸ்டாலின் குற்றம் சாட்டினார் அதனால் பா.ஜ.க.வை எதிர்ப்பதில் தி.மு.க. ஒரு போதும் வீரியம் இழக்கவில்லை. சர்வதேச அளவில் கவனம் பெறும் விழாக்கள் இந்தியாவில் எங்கு நடைபெற்றாலும், அதில் பங்குபற்றும் மாநில முதல்வர்கள், பிரதமர் மற்றும் குடியரசுத் தலைவர்களுக்கு உரிய மரியாதையை வழங்கி வருகிறார்கள். அது மரபு. அந்த மரபைத் தான் முதல்வர் ஸ்டாலின் பின்பற்றினார் என்றும் அவர்களின் வாதம் நீளுகின்றது. அதேதருணத்தில் தற்போதைய தேசிய அரசியலில், பழிவாங்கும் ஆயுதமாக மத்திய அரசின் அமைப்புகளான வருமான வரித்துறை, அமலாக்கத்துறை, மத்திய புலனாய்வுத்துறை ஆகியவை ஈடுபடுத்தப்படுகிறது. திரிணாமூல் காங்கிரஸ் கட்சியை சேர்ந்த பார்த்தா சட்டர்ஜி, சிவசேனா கட்சியை சேர்ந்த சஞ்சய் ராவத் ஆகியோரின் கைது நடவடிக்கையே இதற்கு சாட்சியாகவுள்ளது.

இந்நிலையில், ஓகஸ்ட் 7ஆம் திகதியான இன்று, தி.மு.க. தலைவரான மறைந்த முன்னாள் முதல்வர் கருணாநிதியின் நான்காம் ஆண்டு நினைவு நாள். இதனை முன்னிட்டு அமைதிப்பேரணி நடைபெறும் என்று தி.மு.க. கட்சி சார்பில் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

தமிழகத்தில் பா.ஜ.க. காலூன்ற எந்த வழியையும் பயன்படுத்திக் கொள்ளும் என்பது தெரிய வந்திருப்பதால், ஸ்டாலின் தனது கட்சியினருக்கு எச்சரிக்கையும், கவனமுடன் நடந்து கொள்ள வேண்டும் என்று விழிப்புணர்வையும் வழங்கி இருக்கிறார். மேலும் தி.மு.க.வைச் சேர்ந்த மக்களவை உறுப்பினர்கள், மாநிலங்களவை உறுப்பினர்கள், அமைச்சர்கள் மற்றும் சட்டமன்ற உறுப்பினர்களை கட்சிக் கூட்டங்களைத் தவிர்த்து ஏனைய பொது வெளிகளில் பா.ஜ.க.வை விமர்சிக்க வேண்டாம் என்றும் கேட்டுக் கொண்டிருக்கிறது. பா.ஜ.க.வினர், தற்போது மத்திய அரசின் அமைப்புகளை அரசியல் ரீதியில் பயன்படுத்தி வருகின்றனர் என்பதையும் அவர் குறிப்பிட்டிருக்கிறார். அதனால் அரசியல் களத்தில் கவனமுடன் மக்கள் நல பணியாற்ற வேண்டும் என்று கோரிக்கை விடுத்திருக்கிறார் முதல்வர்.

அதிலும் தமிழக பா.ஜ.க. தலைவரான அண்ணாமலை, அமைச்சர் செந்தில் பாலாஜி மற்றும் பொன்முடி மீது ஊழல் புகார் குற்றசாட்டைக் கூறியிருப்பதால், இந்த இரு அமைச்சர்கள் மட்டுமல்லாமல் வேறு சிலர் மீதும் மத்திய விசாரணை அமைப்பான அமலாக்கத் துறை, வருமான வரித்துறை சார்பில் விசாரணையும், திடீர் சோதனையும் நடைபெறக்கூடும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தி.மு.க. மீது மத்திய அரசு குறி வைத்திருக்கிறது. தி.மு.க.வில் தலைமை மீது அதிருப்தி, கட்சியில் விரிசல் அல்லது பிளவு போன்றவற்றை உருவாக்க அக்காட்சி கண்கொத்திப் பாம்பாகக் காத்திருக்கிறது. மேலும் மகாராஷ்டிரம், அசாம், கர்நாடகா போன்று தமிழகத்திலும் ஏதேனும் ஒரு உபாயத்தில் மூலமாக ஆட்சியை கலைப்பதற்கோ அல்லது ஆட்சி மீது மக்களிடத்தில் ஏதிர்ப்புணர்வு எழுப்புவதற்காகவோ ஏதேனும் நடவடிக்கையில் ஈடுபடக்கூடும் என்ற எதிர்பார்ப்பும் உள்ளது.

அ.தி.மு.க.வுடன் கூட்டணி வைத்த பா.ஜ.க., அக்கட்சியை சிதைத்து, எடப்பாடி அணி, பன்னீர்ச்செல்வம் அணி, சசிகலா அணி, தினகரன் அணி என்று குழுக்களை உருவாக்கி, அக்கட்சியின் ஒட்டுமொத்த பிம்பத்தை உடைத்து, கட்சி தொண்டர்களிடையே நீடித்து இருந்த வலிமையான ஆட்சி அதிகார உளவியலுக்கு உலை வைத்திருக்கிறது. அதே தருணத்தில் உத்தர பிரதேசம், பீகார் போன்ற மாநிலங்களில் பாரதிய ஜனதா கையாண்ட மும்முனை போட்டியை தமிழகத்திலும் உருவாக்கி, தமிழ் மண்ணில் அரசியலில் ஸ்திரத் தன்மையை ஏற்படுத்திக் கொள்ளத்தக்க வகையில் பா.ஜ.க. காய்களை நகர்த்தி வருகிறது.

ஆனால் தமிழகத்தின் வலிமையாக இருக்கும் எதிர்க்கட்சியான அ.தி.மு.க., தமிழக மக்கள் மீது சுமத்தப்பட்டிருக்கும் சொத்து வரி உயர்வு, மின் கட்டண வரி உயர்வு போன்றவற்ற எதிர்த்து வழக்கமான கண்டன ஆர்ப்பாட்டத்தை மட்டுமே பின்பற்றி, தங்களது அரசியல் கடமையை பூர்த்தி செய்திருக்கிறார்கள். ஆனால் வலிமையான எதிர்ப்பை தெரிவித்து, மின் கட்டண உயர்வு மற்றும் சொத்துவரி உயர்விலிருந்து நிவாரணத்தைப் பெற்றுத் தர வேண்டும்.

மக்களின் விருப்பத்தை ஆளுங்கட்சியான தி.மு.க., எதிர்க்கட்சியான அ.தி.மு.க. ஆகிய இரண்டும் சரியான புள்ளியில் புரிந்து கொண்டு, உயர்வை குறைத்து நியாயமாக நடந்து கொள்ள வேண்டும் என்று மக்கள் எதிர்பார்க்கிறார்கள்.

இதனை தமிழக அரசு நிறை வேற்றினால், பா.ஜ.க.விற்கு அரசியல் ரீதியாக எதிராக தடம் மாறாமல் தி.மு.க. பயணிப்பதற்கும் உற்ற துணையாக குரல் கொடுப்பார்கள்.





அன்பு இல்லக் குழந்தைகளின்
வாழ்வுக்காகவும் வாழ்வாதாரத்திற்காகவும்
உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகை
நடாத்தும் 10வது ஆண்டு நிறைவின்
இன்னிசை மாலையும் இராப்போசன விருந்தும்
23 ஒக்டோபர் 2022 ஞாயிறு

# நெருப்பு சமரில் நான்சி வெற்றி!



அமெரிக்காவின் அதிகாரமிக்க மூன்றாம் நிலை பதவியில் இருக்கின்றவர் தான் நான்சி பெலோசி. இவர் தைவானுக்கு சுற்றுப் பிரயாணம் வருகின்றார் என்று சொன்னால் அதில் என்ன ஆச்சர்யம் இருக்க முடியும்?

அமெரிக்காவின் சபாநாயகர் பதவியில் இருக்கின்ற நான்சி பிலிப்பைன்ஸ், சிங்கப்பூர், மலேசியா, தென் கொரியா ஆகிய நாடுகளுக்கு உத்தியோகபூர்வ மான விஜயம். அவை எல்லாம் ஒகே. அது பற்றி எந்தக் கேள்விகளை யாரும் எழுப்பவில்லை. அவர் அந்தப் பயணத் தில் தைவானுக்கும் போய் கால் பதிக்க இருக்கின்றார் என்ற தகவல் கசிந்த போது கொதித்துப் போனது சீனா.

இந்த விடயத்தில் ஏன் சீனா கொதித்தப் போனது. அவர் அப்படி அங்கு போய் இறங்கினால் பெரும் அழிவு தான். அமெரிக்கா நெருப்புடன் விளையாட நினைக்கக் கூடாது. இது வெறும் வார்த்தைகள் மட்டும் என்று எண்ணி விட வேண்டாம் என்று அமெரிக்காவை எச்சரித்தது.

அதற்கும் மேலாக சீன அதிபர் சீ சின்பிங் அமெரிக்க ஜனாதிபதி பைடனுக்கு உத்தியோகபூர்வமான கடிதத்தை எழுதி இந்த வேலையை மட்டும் செய்து எமது பொறுமையை சோதித்து விடா தீர்கள் என்றும் எச்சரித்திருந்தார். அந்த எந்தக் கதையையும் காதில் போட்டுக் கொள்ளாது கடந்த செவ்வாய் தைவா னில் போய் இறங்கினார் நான்சி. அவர் வருகின்ற விமானத்துக்கு என்ன நடக்கப் போகின்றது என பல மில்லியன் கணக்கானவர்கள் லைவில் கண்காணித் துக் கொண்டும் இருந்தார்கள்.

நான்சி ஏன் தைவான் போகக் கூடாது என்று ஆராய்வதாக இருந்தால், நாம் சுருக்கமாக சீனாவின் வரலாற்றை சற்றுப் பார்க்க வேண்டும். இன்று சீனா வின் பெரும் நிலப்பரப்பான பூமியை தேசியவாதிகள் என்ற குழு அன்று ஆண்டு வந்தார்கள். மாவோ சேதுங்கின் சீனச் செம்படை அந்த அரசினை விர ட்டி விட்டு நாட்டை தனது கட்டுப் பாட்டில் கொண்டு வந்த போது, தேசியவாதிகள் சீனாவில் இருந்து 158 கிலோ மீற்றர்கள் தள்ளி பக்கத்தில் இருந்த தைவான் என்ற தீவில் போய் அங்கு 1949 திசம்பர் 7ம் திகதி புதிய அரசை நிறுவிக் கொண்டார்கள். 1970 வரையும் அந்த அரசைத் தான் ஐ.நா. சபையும் அப்போது அங்கீகரித்திருந் தது. இப்போது அந்த அங்கீகாரத்தை சீனா பெற்றுக் கொண்டு ஐ.நா.வில் வீட்டோ அதிகாரத்தைக் கூட வைத்தி ருக்கின்றது. ஆனாலும் இன்றும் 16 வரையிலான நாடுகள் தைவானை தனி நாடாக அங்கீகரித்திருக்கின்றன.

இதனை சீனா ஏற்றுக் கொள்வதில்லை. இது தங்கள் நாட்டில் ஒரு பகுதி என்று அது உரிமை கோரி நிற்கின்றது. அமெரிக்க உயர்மட்ட அதிகாரிகள் அங்கு போகும் போது அது தைவானு க்கு வழங்குகின்ற அங்கீகாரமாகி விடும். இதற்கு இடம் கொடுக்க சீனா தயாராக இல்லை.இது தான் கதை.

இப்போது தைவான் பற்றி மேலும் சில தகவல்களைப் பார்ப்போம். நிலப்பரப்பு 35.980 சதுர கிலோ மீற்றர்கள்.மக்கள் தொகை 2 கோடி 23 இலட்சம். தலை நகர் தைபே. பணம் தைவான் டொலர். தற்போதய ஜனாதிபதி ச்சென் சுயி சுபியான்.

சீனாவுடன் ஒப்பு நோக்குகின்ற போது இமயமலைக்கும் இங்கே இருக்கின்ற சீகிரியக் குன்றுக்கு உள்ள வித்தியாசம் என்று இதனை கணக்குப் போடலாம். படைப் பலமும் அப்படித்தான்.எனவே சீனாவுடன் பலப் பரீட்சையில் தைவான் ஒரு சில நாட்கள் ஏனும் தாக்குப் பிடிக்க இயலாது என்பது யதார்த்தம்.

ஆனாலும் அமெரிக்க மற்றும் சில நாடுகளான தென் கொரியா, ஜப்பான், அவுஸ்திரேலியா போன்ற நாடுகள் தைவானுக்கு ஆதரவாக செயல்பட்டு வருகின்றன. எனவே அவர்களை நம்பித் தான் தைவான் காய் நகர்த்திக் கொண் டிருக்கின்றது.

இப்போது மீண்டும் நான்சி பெலோசி கதைக்கு திரும்புவோம். அவர் 1940 களில் பிறந்தவர். தற்போது வயது 82. இந்த வயதில் ஒரு வரலாற்றை பதித்து விட்டுப் போவோம். சொல்கின்ற படி சீனா தன்னை கொன்று போட்டாலும் தான் வரலாற்றில் ஹீரோவாகி விடுவேன் என்று அவர் கணக்குப் பார்த்தாரோ என்னவோ தெரியாது. எப்படியோ தைவா னில் போய் அவர் இன்று ஹீரோவாகி இருக்கின்றார் என்பது மட்டும் உண்மை. ஆனால் இந்த நடவடிக்கை யால் சீனா தனது பொறுமையில் எல்லையைக் கடந்து நிற்கின்றது.

இன்று அமெரிக்காவுக்கு சவாலாக சீனா தன்னை பொருளாதார மற்றும் இராணுவ ரீதியில் வளர்த்துக் கொண்டு விட்டது. உலகில் பல இடங்களில் அது தனது ஆதிக்கத்தை நிலைநாட்டியும் வருகின் றது. அத்துடன் உலக நாடுகளும் சீனா விடயத்தில் பெரும் எதிர்பார்ப்பில் இருந்தது.எந்த வினாடியும் நான்சி விமானம் சீனா ஏவுகணையால் வீழ்த்தப் படும் என்று எதிர்பார்த்தவர்களும் இருந்தார்கள். சீனாவும் அப்படித் தான் ஒரு கதையை பகிரங்கமாக பரப்பிக் கொண்டிருந்தது. இப்போது அவர் பாதுகாப்பாக தைவான் வந்து போய் விட்டார்.

முழு உலகமுமே சீனாவை ஏளனமாக பார்த்து சிரிக்கின்றது. இது சீனாவுக் கும் நன்றாகப் புரிகின்றது. அதனால் ஏதாவது செய்து தான் ஆக வேண்டும் என்ற கட்டாயத்தில் சீன ஆட்சியாளர்கள் இருக்கின்றார்கள்.

இதே போன்று அமெரிக்காவையும் மேற்கு நாடுகளையும் நம்பி உக்ரைன் இன்று ரஷ்யாவிடம் வாங்கிக் கட்டிக் கொண்டிருக்கின்றது. எல்லையில் நட்பு நாடுகள் இருந்தாலும் அவர்களினால் நேரடியாக களத்துக்கு வர முடியாத ஒரு நிலை அங்கு. தைவான் கதை வேறு.எங்கோ இருக்கின்ற அமெரிக் காவை நம்பித் தான் தைவான் வீரம் காட்டிக் கொண்டிருக்கின்றது. அமெ ரிக்க மற்றும் நேட்டோ நாடுகளின் போர்க் கப்பல்களும் விமானங்களும் பிராந்தியத்தில் இருந்தாலும் சீனாவுடன் மோதுவது இலகுவான காரியமாக இருக்க மாட்டது. அப்படியானால் ஏன் ஐரோப்பாவில் மறைமுகமான ஒரு போரில் இருக்கின்ற அமெரிக்கா—மேற்கு நாடுகள், இந்த நேரத்தில் சீனாவை சீண்டிப் பார்க்க வேண்டும்?

நமது பார்வையில் உக்ரைன் போர் மூலம் ரஷ்யாவின் வளர்ச்சியை மட்டுப் படுத்தி வைக்கின்ற யுத்தியைத் தான் அமெரிக்கா அங்கே செய்து கொண்டிரு க்கின்றது என்பது எமது கணக்கு. அதே போன்று சீனாவை மட்டம் தட்டுகின்ற ஒரு முயற்சியாகத் தான் இந்த ஏற்பாடும் இருக்க வேண்டும் என்று நாம் கருதுகின்றோம். உலக ஆதிக்கத்தில் அமெரிக்கா தொடர்ந்தும் நம்பர் வன் இடத்தை பாதுகாப்பதானால் ரஷ்யா, சீனா ஆகிய நாடுகளுக்கு நெருக்கடிகள் கொடுக்கப்பட வேண்டும். அதற்காகத்தான் அமெரிக்கா அந்தப் பிராந்தியத்தில் ஒரு பலமான இராணுவக் கூட்டை உருவாக்க முனைகின்றது. சில நடவடிக்கைகளை அது இது விடயத்தில் எடுத்தும் இருக்கின்றது.

நான்சி தைவானில் போய் இறங்கி பாதுகாப்பாக போய்ச் சேர்ந்தது உலக அரங்கில் அமெரிக்காவுக்கு நல்ல பிளஸ் பொயின்ட் என்று தான் சொல்ல வேண் டும். இது சீனாவுக்கு பெருத்த அவ மானம், தலைகுனிவு என்பதில் மாற்றுக் கருத்தே கிடையாது. நமது நாட்டில் ஆட்சியாளர்களுக்கு எதிராக சமூக ஊடகங்கள் நையாண்டி பண்ணுவது போல முழு உலகமுமே சீனாவை கோமாளியாகத் தான் இன்று சித்தரித்துக் கொண்டிருக்கின்றது.அதில் தவறுகளும் இருக்கமாட்டாது.

இன்றைக்கு 25 வருடங்களுக்கு முன்ன ரும் இது போன்ற ஒரு நிலை இருந் தது. ஆனால் அன்று இந்தளவுக்கு சீனா பொருளாதார ரீதியிலும் இராணுவ ரீதி யிலும் பலமாக இருக்கவில்லை. ஆனால் இன்று அப்படி இல்லை.சீனா கணிச மான அளவுக்கு வளர்ந்து விட்டது. நாம் முன்பு சொன்னது போன்று இந்த வளர்ச்சியைக் கட்டுப்படுத்த அமெரிக்கா ஒரு முட்டுக்கட்டை போட முனை கின்றது.

அதேபோன்று, சீனாவை வம்புக்கிழுத்து ஏதாவது நவீன ஆயுதங்களை அது வைத்திருந்தால் அதனை வெளியில் எடுக்கின்ற ஒரு முயற்சியாகவும் இது இருக்கலாம். தற்காலத்து போர்த் தந்திர ங்கள் அப்படித்தான் இருக்கின்றது. உக்ரைனில் நடப்பதும் அமெரிக்காவின் தேவைக்கான ஒரு போராகும் இதன் பின்னணியிலும் இதே கதைகள் தான் இருக்கின்றன.

சீனா நெருப்புடன் விளையாட வேண் டாம் என்று எச்சரித்திருந்த வேளை அமெரிக்கா நான்சியை வைத்து அந்த ஆட்டத்தில் இதுவரை பைடன் நிருவாகம் வெற்றி பெற்றுவிட்டது. என்ன தான் தைவான் ஆகாயப் பரப்பி லும் கடல் எல்லையிலும் போய் தனது ஆயுத பலத்தை சீனா தைவானுக்கு காட்டினாலும் அந்த அவமானத்தில் இருந்து அது விடுபட முடியாது.


ட்ரம்ப் அமெரிக்காவை ஒரு வம்பன் போல் ஆட்சி செய்து வந்ததால் அவர் ஈரான், வட கொரிய போன்ற நாடுகளைத தான் அடிக்கடி சண்டைக்கு இழுத்துக் கொண்டு இருந்தார். ஒரு நேரத்தில் அவர் வடகொரிய அதிபரை நல்ல நண்பன் என்றும் வர்ணித்து வந்தார். அத்துடன் மத்திய கிழக்கில் தான் அவர் அதிக கவனம் செலுத்திக் கொண்டிரு ந்தார். ஆனால் தற்போதய அமெரிக்க அதிபர் பைடன் நிர்வாகம் இந்த நாடு களை விட ரஷ்யாவும் சீனாவும்தான் தனது உலக வல்லாதிக்கத்துக்கு சவால். அதனை மட்டம் தட்டி வைத்தால் மட்டுமே அமெரிக்கா உல கில் தொடர்ந்தும் முதல்தர வல்லரசாகத் தன்னைப் பாதுகாத்துக் கொள்ள முடியும் என்று கருதுகின்றது.

அமெரிக்காவின் பொருளாதாரத்தையும் இராணு முதன்மை ஸ்தானத்தையும் தக்க வைத்துக் கொள்வதற்கான முயற்சியில் தற்போது பைடன் கடுமை யாக இறங்கி இருக்கின்றார். எனவே அவர் மத்திய கிழக்கு விவகாரங்களில் பெரியளவில் அக்கறை எடுத்துக் கொள்ளாதிருக்கின்றார். இது இஸ்ரேலு க்கு திருப்தி இல்லாத நிலையாக இரு க்கின்றது. சீனா, ரஷ்யாவுடன் ஒப்பிடு கின்ற போது ஈரான் தனக்குப் பெரிய சவால் கிடையாது.தேவைப்படும் போது அதனை தனக்கு மட்டம் தட்டி விட லாம் என்பது தான் பைடன் நிருவாகத் தின் எண்ணமாக இருக்கின்றது. இத னால் தான் (22ம் பக்கம் பார்க்க)


# இவ்வாரம் உங்களுக்கு எப்படி?




மேடராசி அன்பர்களே! அனுகூலமாக அனைத்து காரியங்களும் நடக்கும். வெளியூர் அல்லது வெளிநாட்டு பயணம் செல்ல நேரலாம். உடல் ஆரோக்கியம் உண்டாகும். குடும்பத்தினரை அனுசரித்து செல்வதன் மூலம் எல்லா பிரச்சனைகளும் சரியாகும். கணவன் மனைவிக்கிடையே இருந்த மனஸ்தாபம் நீங்கும். பிள்ளைகளின் எதிர்கால நலனுக்காக முக்கிய பணிகளை மேற் கொள்வீர்கள். தொழில் வியாபாரம் சீராக நடக்கும்.




ரிஷபராசி அன்பர்களே! பூர்வீக சொத்துக்களில் இருந்த பிரசசனைகளில் சாதகமான நிலை காணப்படும். தான தர்மம் செய்யவும், ஆன்மிக பணிகளில் ஈடுபடவும் தோன்றும். நீண்ட தூர பயணத்தின் போது கவனம் தேவை. குடும்பத்தில் எதிர்பாராத செலவு உண்டாகும். கணவன் மனைவிக்கிடையே திடீர் மனவருத்தம் ஏற்படலாம். பிள்ளைகளின் செயல்பாடுகள் மனதுக்கு திருப்தி அளிக்கும். வழக்குகளில் மெத்தனம் காணப்படும்.





மிதுனராசி அன்பர்களே! தேவையற்ற மனக்கவலை அகலும். வழக்கு விவகாரங்களில் இருந்த தாமதமான போக்கு நீங்கும். நிர்பந்தமாக வெளியூர் பயணம் செல்ல நேரலாம். குடும்பத்தில் இருப்பவர்களால் வீண் பழி ஏற்பட வாய்ப்பு உண்டு. எதிர்பாராத செலவு உண்டாகும். கணவன், மனைவிக்கிடையே மனஸ்தாபங்கள் வரலாம். பிள்ளைகளின் செயல்பாடுகளில் கவனம் தேவை. ஆயுதங்களை பயன்படுத்தும் போது கவனம் தேவை.





கடகராசி அன்பர்களே! வீண் வாக்குவாதங்களை தவிர்ப்பது நன்மை தரும். வேலை பளு காரணமாக நேரம் தவறி உணவு உண்ண வேண்டி இருக்கும். கணவன், மனைவிக்கிடையே கருத்து வேறுபாடு வரலாம். விட்டுக் கொடுத்து செல்வது நல்லது. சிலர் குடும்பத்தை விட்டு பிரிந்து வெளியில் தங்க நேரலாம். தொழில் வியாபாரத்தில் பார்ட்னர்களை அனுசரித்து செல்வது நல்லது. புதிய வாடிக்கையாளர்கள் கிடைப்பர்.




சிம்மராசி அன்பர்களே! சிக்கல்கள் தீரும். நோய் நீங்கி உடல் ஆரோக்கியம் உண்டாகும். பொருளாதார நிலை உயரும். குடும்பத்தில் உங்களுக்கு எதிராக பிரச்சனையை உண்டாக்கியவர்கள் தானாகவே அடங்கி விடுவர். வீட்டில் சுப காரியம் நடக்கும். திருமண காரியங்களில் சாதகமான போக்கு காணப்படும். பிள்ளைகளால் பெருமை உண்டாகும். மதிப்பு கூடும். வியாபாரத்தில் இருந்த சிக்கல்கள் தீரும்.




கன்னிராசி அன்பர்களே! மன சஞ்சலம் நீங்கும். சிறிய விஷயத்துக்கு கூட கோபம் வரலாம். கட்டுப்படுத்துவது நன்மை தரும். குடும்பத்தினரின் செயல்பாடுகள் மகிழ்ச்சியை கொடுக்கும். கணவன், மனைவிக்கிடையே மனம் விட்டு பேசி எடுக்கும் முடிவுகள் நல்ல பலன் தரும். பிள்ளைகளை அனுசரித்து செல்வதும், அவர்கள் போக்கில் விட்டு பிடிப்பதும் நல்லது. தொழில் வியாபாரம் தொடர்பான வீண் அலைச்சல் ஏற்படும்.





துலாம்ராசி அன்பர்களே! எடுத்த காரியங்களில் வெற்றி கிடைக்கும். பூமி, வீடு தொடர்பான பிரச்சனைகள் நல்ல முடிவுக்கு வரும். சகோதரர்களுடன் இருந்த மன வருத்தம். நீங்கும். எதிர்பாராத செலவு உண்டாகலாம். குடும்பத்தினரின் பேச்சுக்கு எதிர்த்து பேசுவதை தவிர்ப்பது நன்மை தரும். கணவன், மனைவிக்கிடையே வீண் வாக்குவாதங்கள் ஏற்படலாம். பிள்ளைகளிடம் அன்பாக பழகுவது நல்லது. தொழில் வியாபாரத்தில் திடீர் சிக்கல் ஏற்பட்டு சரியாகும்





விருச்சிகராசி அன்பர்களே! எடுத்த காரியத்தை செய்து முடிப்பதில் தாமதம் உண்டாகும். சகோதரர் வழியில் நன்மை உண்டாகும். குடும்பத்தில் இருந்த பிரச்னைகள் நீங்கும். கணவன் மனைவிக்கிடையில் இருந்த சங்கடங்கள் தீரும். பிள்ளைகள் கல்வி பற்றிய கவலை நீங்கும். வீட்டிற்கு தேவையான பொருட்கள் வாங்குவீர்கள். தொழில் வியாபாரத்தில் எதிர்பார்த்த நிதி உதவி கிடைக்கும். உத்யோகத்தில் இருப்பவர்கள் பரபரப்பு நீங்கி பணிகளை கவனிப்பர்.








தனுசுராசி அன்பர்களே! திட்டமிட்டு எதையும் செய்ய வேண்டியது அவசியம். வீண்பழிவர வாய்ப்பு உள்ளதால் எதிலும் கவனம் தேவை. உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. கணவன், மனைவிக்கிடையே வாக்குவாதம், பிள்ளைகளின் செயல்களால் மனவருத்தம் போன்றவை ஏற்படலாம். வீட்டில் உள்ள பொருட்களை கவனமாக பாதுகாப்பது நல்லது. தொழில் வியாபாரத்தில் வீண் அலைச்சல்கள் ஏற்படும்.




மகரராசி அன்பர்களே1 சாமர்த்தியம் அதிகரிக்கும். மனவருத்தம்நீங்கும். வாகனங்களில் செல்லும் போது கவனம் தேவை. தனாதிபதி சூரியன் சஞ்சாரத்தால் பணதேவை ஏற்பட்டாலும் அதை திறமையாக சமாளித்து விடுவீர்கள். குடும்பத்தில் சுமுகமான சூழ்நிலை காணப்பட்டாலும், குடும்ப உறுப்பினர்களுக்காக மருத்துவ செலவு செய்ய வேண்டி இருக்கலாம். கணவன், மனைவி ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்து செல்வது நல்லது.




கும்பராசி அன்பர்களே! வீண் செலவு ஏற்பட்டாலும் அதை சமாளிக்கும் விதத்தில் வரவும் இருக்கும். கனவுகளால் தொல்லை ஏற்படலாம். உஷ்ண சம்பந்தமான நோய் உண்டாகலாம். குடும்பத்தில் தேவையற்ற பிரச்னைகள் உருவாகலாம். கணவன், மனைவிக்கிடையே கருத்து வேற்றுமை ஏற்பட்டாலும் சரியாகிவிடும். வீடு, வாகனம் தொடர்பான செலவுகள் உண்டாகலாம்.




மீனராசி அன்பர்களே! சாதகமான பலன்கள் கிடைக்கும். பொருளாதார முன்னேற்றம், பணவரவில் திருப்தி இருக்கும். எடுத்த காரியத்தை சிறப்பாக செய்து முடிப்பீர்கள். உடல் ஆரோக்கியம் உண்டாகும். குடும்பத்தில் மகிழ்ச்சியான சூழ்நிலை காணப்படும். கணவன் மனைவிக்கிடையே ஒற்றுமை உண்டாகும். பிள்ளைகள் மூலம் பெருமை ஏற்படும். உறவினர்கள் வருகையும் அவர்களால் நன்மையும் உண்டாகும். திருமணம் தொடர்பான பேச்சு நடக்கும்.

வெள்ளிக்கிழமைகளில்
உங்கள் அபிமான
ஈழநாடு பத்திரிகையை
eelanadu.ca
மின்னிதழ்
மூலமாகவும் வாசிக்கலாம்.

# பொருளாதார நெருக்கடி இப்போதைக்கு தீராது!

(17ம் பக்கத் தொடர்ச்சி) அவற்றுக்கான சிறப்புத் திட்டங்களும் மதிப்பளித்தல்களும் வழங்கப்படுவது அவசியம். ஆனால் இந்தத் தரப்பிலும் இவற்றைக் குறித்து எத்தகைய கரிசனைகளும் இல்லாமலே உள்ளது.

7. மக்கள் இன்றைய நிலையை முற்று முழுதாக விளங்கிக் கொள்ள முற்பட வேண்டும். இது பல வகையில் அமையும். ஒன்று செலவீனங்களை மட்டுப்படுத்துவது. விழாக்கள், பண்டிகைகள், கொண்டாட்டங்கள் எல்லாவற்றையும். நாளாந்த வாழ்க்கையை இயல்பு நிலைக்குக் கொண்டு வருவது. அதாவது ஒவ்வொருவரும் சுயமாக இயங்கக் கூடியவாறாக. பிள்ளைகள் தாமாகப் பாடசாலை செல்வது வரையில். எரிபொருள் நெருக்கடிக்கு மாற்றாக சைக்கிள்களை அதிகமாகப் பயன்படுத்த விளைய வேண்டும். எரிபொருளுக்காக செலவழிக்கப்படும் பணத்தை விட (அதன் விலை உயர்வை விட) அதைப் பெறுவதற்காக செலவிடப்படும் நேரம் அதிகம். அதன் பெறுமதி நாட்டின் பொருளாதாரத்தையே பாதிக்கிறது. ஆகவே இதைக்குறித்துப் பொறுப்புடன் மக்கள் சிந்திப்பது அவசியம். அதைப்போல குடும்பத்தில் உள்ள அனைவரும் கட்டாயமாக உழைக்க வேண்டும் என்பது. குறிப்பிட்ட நேரமாவது இதில் அடங்கும். உடல், உள வலுவுடையோர் குறைந்தது 12 மணி நேரமாவது வேலை செய்யவேண்டும். இதை ஒரு சட்டம்போல ஒவ்வொருவரும் உணருவது அவசியம்

8.எத்தகைய அடிப்படையில் மக்கள் இந்த நெருக்கடியை எதிர்கொள்ள முடியும் என்று வழி காட்டப்படுவது அவசியம். காட்டப்படும் வழிகளில் மக்கள் பங்களிப்புகள் நடக்க வேண்டும். இதை ஊக்கப்படுத்துவது, மேலும் வளப்படுத்துவது, பரவலாக்கம் செய்வது என இது அமைதல் அவசியம். இப்படிப் பலவற்றை நாம் அவசர அவசியமாகச் செய்ய வேண்டியுள்ளது. இதை விடவும் மாற்றத் திட்டங்கள், தீர்வுகள் பலரிடம், பலவிதமாக இருக்கலாம். வழிகளும் பல இருக்கலாம். அதில் நாம் செய்யும் பயணம் எப்படி என்பது தான் முக்கியமானது.

# நெருப்பு சமரில் நான்சி வெற்றி!

(21ம் பக்கத் தொடர்ச்சி) ஈரான் அணு விவகாரத்தில் அவர் பேச்சுவார்த்தைக்கு முன்னுரிமை என்று நிற்கின்றார். இதனை இஸ்ரேல் எதிர்க்கின்றது.பிராந்தியத்தில் இஸ்ரேலின் இருப்பை தான் பாதுகாத்துக் கொள்வதாக பைடன் அவர்களுக்கு உறுதி கூறி இருந்தாலும் அதில் இஸ்ரேலுக்கு நம்பிக்கை இல்லை. அது சொந்தக் காலில் நிற்க முனைவதனால் ஈரான் அணு உலைகளை தாக்கியும் வருகின்றது.

உக்ரைனில் சண்டையைத் துவங்கி விட்டு இப்போது அமெரிக்கா தைவான் விவகாரத்தில் அதிக கவனம் செலுத்திக் கொண்டு வருகின்றது. கடந்த 4 ம் திகதி முதல் சீனா தைவானைச் சுற்றி வம்புக்கு இராணுவ ஒத்திகைகளை நடத்திக் கொண்டிருக்கின்றது. இதனால் எந்த இடத்தில் என்ன நடக்குமோ என்ற நிலை. இது வரை அமைதியாக வாழ்ந்த தைவான் மக்கள் இந்த விவகாரத்தால் தற்போது பெரும் அச்சத்துடனே அங்கு நாட்களைக் கழித்துக் கொண்டிருக்கின்றார்கள். நாளை தைவானும் ஒரு உக்ரைனாக மாறினாலும் ஆச்சர்யப்படுவதற்கில்லை. மேலும் சீனா தைவானுக்குப் பொருளாதாரத் தடைகளை விதித்திருக்கின்றது. உலக கைத்தொலைபேசி தொழிநுட்பத்தில் தைவான் முதல் இடத்தில் இருக்கின்றது.இது உலக ஆதிக்கப் போட்டியில் சிறிய நாடுகளை பலிக்கடாக்களாக்குகின்ற அமெரிக்காவின் வழக்கமான நடவடிக்கை—விளையாட்டு என்று தான் சொல்ல வேண்டும். பொதுவாக சீனா அடுத்த நாடுகளின் உள்நாட்டு விவகாரங்களில் நேரடியாக இராணுவ ரீதியில் தலையிடுவதில்லை. ஆனால் அமெரிக்கா எந்த இடத்தில் எப்போது போய் நுழைந்து கொள்ள முடியும் என்று சந்தர்ப்பம் பார்த்து செயலாற்றுவது அனைவரும் அறிந்த விவகாரமே.

எதற்கும் பயப்படாதீர்கள் நாங்கள் ஒரு போதும் உங்களைக் கைவிட மாட்டோம் என்று வேறு நான்சி தைவான் மக்களுக்கு வாக்குறுதி கொடுத்து விட்டும் போய் இருக்கின்றார். தைவான் ஆட்சியாளர்கள் நான்சி வரவால் பெரும் சந்தோஷத்தில் இருக்கின்றார்கள். இது தமக்குக் கிடைத்த அங்கீகாரம் என்பது தான் அவர்கள் கருத்தாக இருக்கின்றது. உக்ரைன் போரால் உலகப் பொருளாதாரத்தில் தாக்கங்கள் ஏற்பட்டிருக்கின்ற இந்த நேரத்தில் தைவானிலும் நெருக்கடி என்றால் நிலமை எப்படி இருக்கும். குறிப்பாக நமக்கு உதவுகின்ற முக்கியமான ஒரு நாடு சீனா என்பதும் குறிப்பிடத்தக்கது.

# கோர்த்து விட்ட கோத்தா

(18ம் பக்கத் தொடர்ச்சி) ஏவுகணைப் பரிசோதனைகளை அதன் கிழக்கு கடற் பரப்பிலேயே மேற் கொள்கிறது. அவ்வாறாயின் புதிதாக இந்தியப் பெருங்கடலை நோக்கி ஏவுகணை பரிசோதனைகளை மேற்கொள்ள சீனா முற்படுகிறதா?

அல்லது இந்தியா தனது கிழக்கு கடலோரப் பகுதியில் இருந்து ஏவுகின்ற நவீன ஏவுகணைகளின் பயணப் பாதையைக் கண்டறியும் நோக்கில் இந்தக் கப்பலை சீனா அனுப்பி வைக்கிறதா? அல்லது தாய்வான் விவகாரத்தில் தாக்குதலுக்குத் தயாராகி வரும் சீனா, அமெரிக்காவை எச்சரிக்க இந்தக் கப்பலை அனுப்பி வைக்கிறதா? அல்லது இலங்கையின் தனது ஆதிக்கத்தை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக இந்த கப்பலை அனுப்பி வைக்கிறதா என பல கேள்விகள் இருக்கின்றன.

இதில் எந்தக் காரணம், உண்மையானதாக இருந்தாலும் அது இந்தியாவையோ, அமெரிக்காவையோ இலக்கு வைத்ததாகவே இருக்கும். எனவே, இந்தக் கப்பல் விவகாரம் பிராந்தியப் பதற்றத்தை மோசமடையச் செய்யுமே தவிர குறைக்காது. இந்த நிலையில், ரணில் அரசாங்கம், எந்த நகர்வை முன்னெடுத்தாலும், அது சிக்கல்களையே தோற்றுவிக்கும்.

# பிசு பிசுத்துப் போன ஆகஸ்ட் 9 போராட்டம்

(5ம் பக்கத் தொடர்ச்சி) வெளிநாடு ஒன்றுக்கு தப்பியதுடன் பின்னர் பதவியையும் இராஜிநாமா செய்திருந்தார்.இந்நிலையில், 123 நாட்கள் நீடித்தஇந்தப் போராட்டம் நேற்று ஓகஸ்ட்09ஆம் திகதியுடன் முடிவுக்கு வருவதாக போராட்டக்காரர்கள் அறிவித்தனர்.

இதனிடையே, போராட்டத்தால் மே9 மகிந்த விலகல், ஜீன் 09 பஸில் விலகல், ஜஜீலை 09 கோட்டாபய விலகல்ஆனால், ஓகஸ்ட் 09 போராட்டமே விலகியது என்றும் சமூக வலைத்தளங்களில்ஒரு தரப்பினர் கருத்துக்களை பதிவிட்டு வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.


தமிழ்நாட்டுக்கு வெளியே அதிக
மக்கள் பங்கேற்கும் மாபெரும் தெருவிழா
SULLIVAN
AUTO GROUP'S
Tamil Fest
தமிழர் தெரு விழா
POWERED BY
iConnect Mortgages
SUPPORTED BY
Canada
TORONTO
PROUDLY HOSTED BY
Canadian Tamil Congress
கனடியத் தமிழர் பேரவை
Congrès Tamoul Canadien
"Voice of Tamil Canadians"
AUGUST
SAT 27
SUN 28
MARKHAM ROAD
Between
McNicoll & Passmore
FREE ADMISSION
250 000 இற்கும் அதிகமானோர் பங்கேற்கும் நிகழ்வு
தமிழர் கலை, கலாச்சாரம், பண்பாடு, வரலாறு, உணவு மற்றும் வணிகத்தை பறைசாற்றும் நிகழ்வு
கனடிய, ஈழ மற்றும் இந்திய கலைஞர்கள் பங்கேற்கும் கலை மற்றும் இசை நிகழ்ச்சிகள்
சிறுவர் விளையாட்டு மற்றும் பொழுதுபோக்கு நிகழ்வுகள்
TITLE SPONSOR
SULLIVAN AUTO GROUP
Formula Honda
NISSAN
POWERED BY SPONSOR
iConnect Mortgages
ZONE SPONSORS
COMPUTEK COLLEGE
HOMELIFE
HIGHER STANDARDS
HomeLife Future Realty Inc.
NAVA WILSON
PRADON SILKS
TD
VIBRANT HOSPITALITY GROUP
WOW! WING HOUSE
MEDIA SPONSORS
ATN
east FM 102.7
STARMETROLAND MEDIA
COMMUNITY PARTNER
MARKETING PARTNER
PRINT FAST.ca
tamilfest.ca
tamilfest@canadiantamilcongress.ca
416.240.0078

மனம் பூரிக்க மங்களகரமான மனையை தேர்ந்தெடுங்கள்
வீடு வாங்க.. விற்க..
HOMELIFE HIGHER STANDARDS
**Ravi. Paramu**
Broker
Cell: 416-262-4176
Bus: 416-298-3200
HomeLife Today Realty Inc., Brokerage*
31 Progress Ave., Suite 210, Toronto - ON., M1P 4S6

**RANJANI THIRUKESWARAN LAW OFFICE**
- Real Estate: வீடு, காணி கொள்வனவு விற்பனைச் சட்டம்
- Business Law: வியாபார, வர்த்தகச் சட்டம்
- Immigration Law: குடிவரவு, அகதிச் சட்டம்
- Family Law: குடும்ப வழக்குகள்
- Last Wills: உயில் தயாரித்தல்
- Power of Attorney: தத்துவப் பத்திரம் தயாரித்தல்

2855 Markham Road Suite 209
Toronto -ON- M1X 0C3
(Markham / McNicoll )
416 291 2242
Ranjani Thirukeswaran
(Barrister & Solicitor)

இந்த இடத்தில்
விளம்பரம் செய்ய அழையுங்கள்
416 841 9600

OVER 10 YEARS EXPERIENCE
**RAVI VEERASINGAM B.A**
Sales Representative
416-356-8958
BUY - SELL - LEASE - INVEST
HOMELIFE HIGHER STANDARDS
**ARVIN-KING**
RABINTHIRARAJ
Broker
416-200-7001
TALENT - PATIENCE
HomeLife/Future Realty Inc., Brokerage*






RENOWNED FOR
**AUTHENTIC KANCHIPURAM**
SILK SAREES
$599* FLAT RATE
Aalayaa
2 VILLA ADA DRIVE,
MARKHAM, ON L6B 1N7
1.855.575.0500



**அபாயம் உண்மையாகலாம்.**
சிக்கல் நிறைந்த ஆபத்தான நோய்க்கு நீங்கள் ஆளாகும்போது தகுந்த நிதி உதவிகளைப் பெற்றுத் தர வைக்கும் தேவை எங்களுக்கு உண்டு என்பதை இங்கு காணுங்கள்.



புள்ளி விபரங்கள் சொல்வதென்ன?

| In Canada | |
|---|---|
| Breast Cancer | 1 woman in 8 |
| Prostate Cancer | 1 man in 7 |
| Heart disease | 1 person in 4 |
| Stroke (CVA) | 1 person in 20 |

Fortunately, more people are surviving these afflictions and living longer lives.

| Survival Rate | |
|---|---|
| Cancer | 60% |
| Heart Attack | 85% |
| Stroke | 1 person in 4 |

Over $63 million has been paid in critical illness benefits to help people preserve their finances while they focus on making a healthy recovery.
- Average benefit paid : $56,000
- Average age of people diagnosed: 49 years

BENEFITS PAID BY GENDER Women 54% Men 46%

Industry critical illness claim breakdown[3]




iA Financial Group
**AJITH SABARATNAM**
647-401-5800 / 416-439-2800
10 Thornmount Dr, Scarbrough, Ont, M1B 3J4.